# கதைக் கடல்

1

3596

பதிப்பாசிரியர்

தி. நா. சுப்பிரமணியன்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
BAGANERI.

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை : சென்னை

வெளியிட்டது: மார்ச் 1946
உரிமை பதிவு செய்யப்பெற்றது

விலை அணா
பன்னிரெண்டு

தபாலில் ரூ. ஒன்று

ஒரு வருஷத்தில் வெளிவரும் பன்னிரெண்டு
புத்தகங்களுக்கும் தபால் செலவுடன் ரூ. ஒன்பது

Printed by Shakti Press Ltd., Madras. P. I. C. No. MS. 23
for Shakti Karyalayam. Royapettah Madras. P. I. C. No.
MS. 202. Copies 1,000. 11—3—46

# கதைக் கடல் 3596

உலகம் நாளுக்கு நாள் மாறுதல் அடைந்து வருகிறது. இதை மக்கள் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் காண்கிறோம். இலக்கியத் துறையும் இதற்கு விலக்கு அல்ல.

இப்போது முடிந்த யுத்தம் உலகத்திலே எவ்வளவோ நாசம் செய்திருக்கிறது; அதேபோல எத்தனையோ புதியவற்றை யும் உற்பத்தி செய்திருக்கிறது; பல புதிய உணர்ச்சி களை எழுப்பி யிருக்கிறது. அது இலக்கியத்திலே உண்டாக் கிய புது வழி வெகு வேகமாகப் பரவி வருகிறது.

இன்றைக்கு உலகம் முழுதும் எழுத்தாளர்கள் புத்தம் புதுத் துறைகளில் இலக்கியங்களைச் சிருஷ்டித்து வருகிறார் கள். நடுவில் ஏற்பட்டிருந்த மந்தநிலை போய், புது வளர்ச்சி உண்டாகியிருக்கிறது. இந்த வளர்ச்சி தான் இலக்கியத் தின் ஜீவநாடி.

இந்தச் சுழல் வேகம் உலக இலக்கியத்தையே பற்றி யிருக்கும்போது தமிழ்மட்டும் அதனின்றும் தப்பமுடி யாது. தனித்து நிற்கவும் இயலாது. தமிழிலும் புது முயற்சிகள் நடைபெறுகின்றன. அவைகளுக்கு ஊக்கம் அளிப்பதோடு பிற இடங்களில் அவை எவ்விதமான உருவைப் பெற்றிருக்கின்றன என்பதையும் எடுத்துக் காட்டுவதே கதைக் கடல் நோக்கம்.

இந்தக் கடலில் எழும் உணர்ச்சி அலைகள் பலதிறப்பட்ட வேகத்துடன் வந்து கரை மோதுவதைக் காணலாம். ஆனால் அவை யாவும் வாழ்க்கையையும் மனித உள்ளத் தையும் நன்கு எடுத்துக்காட்டும்.

வெளியிடுவோர்

*வெளி வருகிறது:*

**கிராம இயக்கம்**

**ஜே. ஸி. குமரப்பா**

★

**சக்தி காரியாலயம்**

# ஹாஸ்ய நடிகர்

கி. வா. ஜகந்நாதன்

'மகாத்மா காந்தி ஹரிஜன காலேஜு'க்கு நிதி சேர்ப்பதற்காக மீனாட்சி நாடக சபையார் ஒரு நாள் நாடகம் நடத்த ஒப்புக் கொண்டார்கள். அன்று வசூலாகும் தொகை முழுவதும் ஒரு தம்பிடி குறையாமல் காலேஜ் நிதிக்குச் சேர்த்துவிட வேண்டுமென்பது நாடக சபையின் அதிபர் குமரகுருபர முதலியாருடைய அபிப்பிராயம். இதுவரையிலும் எந்த நாடகத்திலும், கச்சேரியிலும் சேராத அளவுக்கு அன்று வசூல் ஆகவேண்டுமென்று அவர் திட்டம் போட்டார்.

கலையிலும் சரி, லௌகிகத்திலும் சரி அவர் வல்லவர். நடிகர்களுக்கு உத்ஸாக மூட்டி அவர்களை நன்றாக நடிக்கச் செய்யும் உபாயங்கள் அவருக்கு நன்றாகத் தெரியும். அதற்குமேல், அவர்களுடைய நடிப்பைப் பற்றியும், நாடகத்தின் சிறப்பைப் பற்றியும் மிகவும் சிறந்த விமரிசனங்கள் பத்திரிகைகளில் வெளியாகுமாறு செய்யவும் தெரியும். எந்த ஊருக்குப் போனாலும் முதலில் அந்த ஊர்ப் போலீஸ்காரர் அவர் கைக்குள் அகப்பட்டுவிடுவார். அடுத்தபடியாக முனிஸிபாலிடித் தலைவரை அவர் வசப்படுத்துவார். பத்திரிகை நிருபர்கள், காங்கிரஸ்காரர்கள், சுயமரியாதைத் தலைவர்கள், பிரஸித்தி பெற்ற பெண்ணுரிமைத் தொண்டர்கள், ஹரிஜனப் பிரதிநிதிகள் என்று நாலுபேர் காதிலும் கண்ணிலும் படும் கோஷ்டியினர் யாவரும் அவருக்குச் சிநேகமாகி விடுவார்கள்.

எந்த ஊரிலும் அவருடைய நாடகங்கள் சப்பையாகப் போனதே இல்லை. எந்தப் பக்கம் மரம் சாயும்,

எப்படி வெட்ட வேண்டும் என்ற தோதுகளை அவரிடம் பாடம் கேட்டு மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த வார நாடக வசூலில் ரூ. 200 சுயமரியாதைக்காரர் சங்கத்துக்குக் கொடுப்பார்; அடுத்த வார வசூலில் ரூ. 500 சநாதன தர்ம சபையாருக்கு வழங்குவார். அவர் கட்சிப் பிரதி கட்சிக்கு மேலே போனவர்; எல்லாருக்கும் வேண்டியவர்.

லக்ஷ்மி தேவி அவர் நாடக சபையில் பிரதான கதா நாயகி வேஷம் தரிப்பவள். அவளுடைய குயிற் குரலும், அழகும், நடனத் திறமையும் தினம் ஏதாவது ஒரு பத்திரிகையில் புகழைப் பெற்று விளங்கும். ராஜ பார்ட்டு ரங்கசாமி என்ன சாமான்யமானவரா? அவர் ஊருக்கு வரும்போது, வேஷம் இல்லாத வெறும் ஆளைப் பார்க்கவே ஆயிரக் கணக்கில் ஜனங்கள் கூடுவார்கள் என்ருல் நாடகத்திற்கு வரும் கூட்டத்தைப்பற்றிச் சொல்வானேன்?

எல்லாருக்கும் மேலாகக் குமரகுருபர முதலியார் அதிருஷ்டசாலி யென்பதை அவருக்கு ஹாஸ்ய நடிகர் நடராஜ பிள்ளை கிடைத்தது ஒன்றினலே சொல்லிவிடலாம். ஹாஸ்யக் கலை நடராஜனுடன் பிறந்தது. அவர் நடந்தாலும், நின்ருலும், இருந்தாலும் பக்கத்தில் இருப்பவர்கள் சிரிக்காமல் இருக்க முடியாது. பேசிஞல் வயிறு புண்ணுகி விடும். நடராஜ பிள்ளை, குமரகுருபர முதலியாருக்கு ஒரு கற்பகம்; காமதேனு; காசு காய்க்கும் மரம்.

நாடகத்திற்குப் பிரதான நடிகர் யாரும் வர முடியவில்லை: அப்படி ஒரு சந்தர்ப்பம் நேர்ந்து விட்டதென்று வைத்துக் கொள்வோம். நடராஜ பிள்ளை ஒருவர் இருந்தால் போதும்; வசூலில் குறைவே இராது. அதில் வேடிக்கை என்ன வென்ருல், உண்மையிலே அப்படி ஒரு சமயம் வந்தால் ஜனங்களுக்கு அதிக உத்ஸாகம் ஏற்பட்டு விடும். முக்கியமான நடிகர்கள் இல்லாத குறையை

ஹாஸ்ய சக்கரவர்த்தி நடராஜ பிள்ளை நிரப்பி விடுவார் என்று குமரகுருபர முதலியார் விளம்பரம் செய்வார். நிச்சயமாக அன்று இரட்டிப்பு வசூல் ஆகும்.

நடராஜ பிள்ளையை எத்தனையோ நாடகக்காரர்கள் கூப்பிட்டுப் பார்த்தார்கள். சினிமாக்காரர்கள் விலைக்கு வாங்க எண்ணினார்கள். முடியவில்லை. தெய்வ பக்தியும் விசுவாசமும் உள்ள நடராஜ பிள்ளைக்குக் குமரகுருபரரை விட்டுப் போக மனம் இல்லை. ஆதிகாலத்தில் அவருக்கு உத்ஸாகம் மூட்டி இந்த நிலையில் வரப் பண்ணினவர் குமர குருபரர் என்ற விஷயத்தை ஹாஸ்ய சக்கரவர்த்தியான பிறகும் அவர் மறக்க வில்லை. குமரகுருபரரும், 'நாம் வைத்து வளர்த்த செடிதானே?' என்று அலக்ஷ்யமாக இராமல் பணத்திலும் மதிப்பிலும் நடராஜனுக்கு உரிய ஸ்தானத்தை அளித்தார்.

மதுரையில் ஹரிஜன காலேஜ் நிதிக்குச் சகாய நாடகம் நடக்கப் போகிறதென்ற விஷயத்தை மூன்று மாசத்திற்கு முன்பாகவே விளம்பரம் செய்யத் தொடங்கினார்கள். ஹாஸ்ய நடிகர் நடராஜ பிள்ளையின் படம் பலபல கோலங்களில் விளம்பரத்தை அலங்கரித்தது. மற்ற நடிகர்களைப் பற்றியும் விளம்பரங்கள் வெளியாயின. நாடகம் நடக்கும் தேதி நிச்சயமாகி விட்டது. ஹரிஜன சங்கத்தாரும் பொது ஜனங்களும் ஏதோ பெரிய உத்ஸவம் நடந்தால் எப்படி ஈடுபடுவார்களோ, அப்படி என்றும் இல்லாத உத்ஸாகத்தோடு ஏற்பாடுகளைச் செய்து வந்தார்கள்.

உதவி நாடகம் நடக்கும் தினத்துக்கு இன்னும் ஒரு மாசம் இருக்கிறது. அப்போது எதிர்பாராதபடி நடராஜ பிள்ளை தம் சொந்த ஊருக்குப் போய்ச் சில வாரங்கள் தங்கும்படி நேர்ந்துவிட்டது. அவருடைய குழந்தை—ஒரே பிள்ளை—நோய் வாய்ப்பட்டு இருந்தமையால், அவர் சொந்த ஊருக்குப் போய் வேண்டிய பரிகாரங்களைச் செய்யலானார். டைபாயிடு ஜுரம் குழந்தைக்கு வந்திருந்

தது. மூன்று வாரம் போகவேண்டும். மூன்று வாரமும் குழந்தையின் பக்கத்திலே இருக்கவேண்டும் என்று ஹாஸ்ய சக்கரவர்த்தி நினைத்தார். குழந்தைக்குக் குணமாகும் விஷயத்தில் அவருக்கு இருந்த கவலையைக் காட்டிலும் குமரகுருபாருக்கு அதிகக் கவலை இருந்தது. அவரைக் காட்டிலும் ஹரிஜன காலேஜ் கமிட்டியாருக்கு இருந்தது. பொதுவாக ஜனங்கள் அனைவருக்குமே கவலை ஓரளவு இருந்தது.

மணி மந்திர ஒளஷதங்களால் குழந்தையின் வியாதிக்குப் பரிகாரம் தேடினார்கள். தினசரி நாடகத்தில் நடராஜ பிள்ளை நடிக்க முடியவில்லை. ஆகையால் வசூல் குறைவு தான். அதைக் குமரகுருபரர் பொருட் படுத்தவில்லை. பெரிய கனவுக் காட்சியாகத் திட்டம் போட்டிருக்கும் சகாய நாடகம் சரிவர நடக்கவேண்டுமே, அதற்கு ஹாஸ்ய சக்கரவர்த்தி வரவேண்டுமே என்ற சிந்தனைதான் அவரைத் துளைத்தது. "அந்த ஒருநாள் அவர் வந்து நடித்து விட்டுப் போகட்டும்; பிறகு ஒரு வருஷம் அவர் வரவே வேண்டாம். ஊரிலே இருக்கட்டும்" என்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டார்.

தினந்தோறும் குழந்தையின் தேகநிலையைப் பற்றிய கடிதம் குமரகுருபாருக்கு வந்தது. அவருக்குத் தம் நாடக சபை சிரிப்பை இழந்து நிற்கிறதே என்ற வருத்தம். அந்தச் சிரிப்பு அழாக்குறையாகச் சின்னஞ் சிறு குழந்தையின் தலையில் ஐஸ்பையை வைத்துக்கொண்டு ஒரு சிற்றூரில் இரவும் பகலும் கண்விழித்து உட்கார்ந்திருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் வயிறு குலுங்க, விலா நெறியச் சிரிக்க வைக்கும் அந்த ஆசாமி, முகத்தில் களையின்றி, வார்த்தையில் ஜீவனின்றி, ஹாஸ்யம் என்ற சரக்குக்கு எத்தனையோ காத தூரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். ஹாஸ்ய ரஸத்தின் அபரிமிதமான வெற்றியைக் கண்டு சோகம் பழிவாங்க எண்ணி விட்டதோ!

நாலு நாளைக்கு ஒரு முறை நாடக சபையின் அதிபர் போய்க் குழந்தையைப் பார்த்து வருவார். ஹரிஜன நிதிக் கமிட்டித் தலைவர் வாரத்துக்கு ஒரு முறை போய் வருவார். "நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். குழந்தை இந்த வாரம் போனால் எழுந்து உட்கார்ந்துகொண்டு விடுவான். பெரிய தர்ம காரியத்தைச் செய்யப் போகும் இந்தச் சமயத்தில் பகவான் சோதிக்கிறார். ஆனாலும் தர்மம் தலை காக்கும். நீங்கள் இங்கேயே இருப்பதைவிட நடுவில் ஒரு நாள் மதுரைக்கு வந்து மீனாட்சி தரிசனம் செய்துகொண்டு வாருங்கள்" என்று அவர்கள் சொல்வார்கள். குமரகுருபரர் மெல்ல மெல்லச் சொல்லி ஒரு நாள் அவரை மதுரைக்குக் கூட்டிக்கொண்டே வந்து விட்டார். அன்று நாடகத்துக்கு அளவில்லாத கூட்டம். ஆனால் நடராஜ பிள்ளை நடிக்கவில்லை. வெறுமனே மேடை மீது வந்து நின்று பொது ஜனங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அவர் முகத்தில் மலர்ச்சியே இல்லை. இருந்தாலும் அவர் பேசும்போது ஜனங்கள் சிரித்தார்கள். "என் குழந்தைக்கு ஜுரம் வந்திருக்கிறது. அதனால் நான் இங்கே வரமுடியவில்லை" என்று அவர் சாமான்ய அர்த்தத்தோடு சமாசாரத்தைச் சொன்னார். ஹாஸ்ய நடிகர் வாயில் சாமான்ய வார்த்தை வருமோ! ஒவ்வொரு வார்த்தையிலும் நகைச் சுவை ததும்ப வேண்டாமோ!— இந்தக் கொள்கையிலே ஊறிய மஹா ஜனங்கள் அந்த வாக்கியத்தைக் கேட்டுக் கால்மணி நேரம் சிரித்தார்கள். "ஜுரம் அங்கே வந்ததாம்; அவர் இங்கே வர முடியவில்லையாம். என்ன மென்மையான ஹாஸ்யம் பார்த்தீர்களா?" என்று வியாக்கியானக்காரர்கள் விமரிசனம் செய்தார்கள். அந்தக் கரகோஷத்துக்கும் சிரிப்புக்கும் இடையே நடராஜர் வாடிய முகத்தோடும், வேண்டுமென்று வருவித்துக்கொண்ட புன்னகையோடும் மேடைமேல் நின்றார். அவர் அகக் கண்ணில் குழந்தை யமனுடன் போராடிக்

கொண்டிருந்த காட்சிதான் தோன்றியது. உள்ளத்துக் குள்ளே சோக நாடகம்; வெளியிலே ஹாஸ்யமென்ற எண்ணத்தால் உண்டான கோஷம்!

சகாய நாடக தினம் நெருங்கிக் கொண்டிருந்தது. எப்படியாவது அந்த ஒரு நாள் வந்து நாடகத்தை நடத்திக் கொடுத்துவிட்டுத் தம் மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று குமரகுருபரர், நடராஜ பிள்ளையைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்; காலில் விழப் போனவரைத் தடுத்து, வேறு வழி இல்லாமையால் அந்த ஹாஸ்ய நடிகர் ஒப்புக் கொண்டார். அதன் பிறகு, குமரகுருபரர் செய்த விளம்பரத்துக்குக் கேட்க வேண்டுமா? பல காலமாக இழந்திருந்த காட்சியைக் காணலாம் என்ற ஆசையை, அவர் பொது ஜனங்கள்பால் எழுப்பி விட்டார். ஹரிஜன காலேஜ் சகாய நிதி என்ற காரணம் கூடத் தேவை இல்லாமற் போயிற்று; ஜனங்களின் ஆவலை அந்த அளவுக்குத் தூண்டி முடுக்கி விட்டார் அவர்.

குழந்தையின் நிலை டாக்டர்கள் கையில் இல்லை. ஆனாலும் அவர்கள் தைரிய வார்த்தைகளையே சொல்லி வந்தார்கள். சாதாரணமாகவே அபாய நிலையை வெளிப் படையாகச் சொல்லும் வழக்கம் டாக்டர்களிடம் இல்லை. அதுவும் இந்த விஷயத்தில், எத்தனையோ பெரிய மனிதர்களும், பொது ஜனங்களும் நடராஜ பிள்ளையை எதிர்பார்த்து நிற்கிறபோது அவருக்கு அதைரியம் ஊட்டலாமா?

"நீங்கள் தாராளமாகப் போய் வரலாம். கொஞ்சம் கூடக் கவலையே வேண்டாம். குழந்தை கண்ணைத் திறக்காமல் படுத்திருக்கிறதே என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். இந்த வியாதிக்கு அப்படித்தான் இருக்கும். கடவுள் நோயாளிக்கு நோயின் உபத்திரவம் இல்லாமல் இருக்கச் செய்யும் உபாயங்களில் இது ஒன்று" என்று மதுரைப் பெரிய டாக்டர் சொன்னார். குமரகுருபர முதலியாரும் அதை ஆமோதித்தார்.

"குழந்தைக்கு ஆபத்து நேர்ந்தால் என்ன செய்வது?" என்று கேட்டார் நடராஜ பிள்ளை.

"என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? ஆபத்து நேர இடமே இல்லையே!"

"என் கண்மணி எழுந்திருந்து அப்பா என்று கூப்பிடுவாஞ!" என்று சொல்லும்பொழுதே அவர் கண்ணிலிருந்து பலபல வென்று நீர்த்துளிகள் உதிர்ந்தன. குழந்தையின் அருமை அவருக்குத் தெரியும்

"அடடா! என்ன இப்படிக் கோழை மனசோடு இருக்கிறீர்கள்? இதைவிட அபாயமான கேஸுகளையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். இன்னும் நாலு நாளில் எல்லாம் வாசியாகி விடும்" என்று குமரகுருபரர் நடராஜ பிள்ளையின் முதுகைத் தடவிக்கொண்டே சொன்ஞர்.

"இங்கே நான் இல்லாத சமயத்தில்......" நடராஜ பிள்ளை விம்மி அழத் தொடங்கிஞர். ஆம்! எவரைக் கொண்டு குமரகுருபரர் சிரிப்பை விலைக்கு விற்ருரோ அந்த நகைச்சுவை நடராஜர், ஹாஸ்ய சக்கரவர்த்தி, அந்த வியாபாரியின் அணைப்பிலே இருந்தும் விம்மி அழுதார்.

டாக்டர் ஆறுதல் சொன்ஞர். நண்பர்கள் சொன்ஞர்கள். கடைசியில் அவர் மனைவிகூட, "மீஞட்சி அம்மன் காப்பாற்றுவாள். இவ்வளவு பெரியவர்கள் ஆசீர்வாதம் வீண்போகாது. நீங்கள் தைரியமாகப் போய் வாருங்கள்" என்று தன் துக்கத்தை அடக்கிக்கொண்டு சொன்ஞள். இதுதான் சமயம் என்று குமரகுருபரர், "என்ன தம்பி, உங்கள் வீட்டில் இருக்கிற தைரியங்கூட உங்களுக்கு இல்லையே! அவர்கள் போய்வரும்படி சொல்கிருர்கள். பெற்ற தாயைக் காட்டிலுமா உங்களுக்குக் கவலை? நீங்களே வருத்தப்பட்டால், வீஞக அதைரியம் அடைந்தால், அவர்கள் எப்படி ஆறுதல் அடைவார்கள்?

டாக்டர்வாளை இங்கேயே இருக்கும்படி ஏற்பாடு செய்கிறேன். அவர்களுக்கு எவ்வளவு காரியம் இருந்தாலும் அவைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு நீங்கள் வரும் வரையில் இங்கேயே இருப்பார்கள்......என்ன, டாக்டர் வாள்! நான் சொல்வது சரிதானே?" என்றார்.

டாக்டர் உடனே, "ஆஹா, அப்படியே செய்கிறேன். எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை. என்றால் ஹரிஜன நிதிக்கு விசேஷ சகாயம் செய்ய முடியாவிட்டாலும், இந்தத் தொண்டையாவது செய்கிறேன்" என்று ஒப்புக் கொண்டார்.

கடைசியில் ஒருவாறு மதுரை வருகிறதற்கு நடராஜ பிள்ளை சம்மதப்பட்டார். குமரகுருபரர் செய்த ஜாலங்களால் அவர் வழிக்கு வந்தார்.

மதுரைக்குப் புறப்பட்டார் ஹாஸ்ய நடிகர். புறப்படும்போது டாக்டரிடம், "ஏதாவது அபாயமானால் உடனே தந்தி கொடுங்கள்" என்று சொல்லிப் புறப்பட்டார். "அதற்குத் தேவையே இராது" என்று பதில்வந்தது.

* * *

அத்தனை கூட்டத்தை எந்தக் காலத்திலும் பார்த்ததில்லை; இனியும் பார்க்கப் போவதில்லை. ஒரு லக்ஷம் ரூபாய்க்கு மேல் வசூலாயிற்று. மதுரை முழுதும் திமிலோகப்பட்டது. "ஹாஸ்ய நடிகர் நடராஜ பிள்ளை இதற்காக மரணாவஸ்தையில் இருக்கும் தம் குழந்தையை விட்டுவிட்டு வந்திருக்கிறார்" என்ற செய்தி அவரை ஒரு பெரிய தியாக மூர்த்தியைப் போல நினைக்கச் செய்தது. "அப்பூதி அடிகள், இறந்துபோன தம் மகனை மறைத்து வைத்துத் திருநாவுக்கரசருக்கு விருந்து செய்தாராம்! இது அது மாதிரியாக அல்லவோ இருக்கிறது!" என்றார் ஒரு ரஸிகர். பக்கத்தில் இருந்தவர் அவர் முதுகில் ஓங்கி ஓர் அடி கொடுத்து, "என்ன ஐயா, அபசகுனமாகப் பேசுகிறீர்? வாயை அடக்கும்" என்றார்.

நாடகம் தொடங்கி ஆயிற்று. "கடவுளே, இன்று நாடகம் முடிகிறவரையில் நடராஜ பிள்ளையின் குழந்தை உயிரோடு இருக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார் குமரகுருபரர். "அதற்குப் பிறகு?" என்று கேட்கிறீர்கள்? அதைப்பற்றி அவருக்குக் கவலை இல்லை!

நாடகத்தில், வேண்டுமென்றே நடராஜ பிள்ளைக்கு எவ்வளவு நடிப்புக்கு இடம் உண்டோ அவ்வளவையும் கொடுக்காமல், குறைத்திருந்தார்கள். அவர் மனம் இல்லாமல், ஜீவன் இல்லாமல் நடித்தார். ஆனால் பொது ஜனங்கள் அந்த நடிப்பில் யாதொரு வேற்றுமையையும் காணவில்லை. எப்பொழுதையும் விட அதிகமாகக் கைதட்டினார்கள்; குதூகலித்தார்கள். அவர் பல நாட்கள் அவர்களைப் பட்டினி போட்டிருந்தார் அல்லவா? அந்தப் பசியால் அவர்களுக்கு எல்லாம் ருசியாயிருந்தன.

ஒவ்வொரு காட்சியும் முடிந்தபோது குமரகுருபரர் ஹாஸ்ய நடிகருக்கு ஆசார உபசாரம் செய்தார்; "உங்கள் நடிப்பு அபாரம்" என்று பாராட்டினார்.

கடைசிக் காட்சி ஒருவிதமாக முடிந்தது. சபையில் உள்ளவர்கள் மாலைகளைக் கொண்டு வந்திருந்தார்கள். நடராஜ பிள்ளையின் கழுத்தில் போட வேண்டும் என்று ஆத்திரப்பட்டார்கள். ஆனால் அவர், முடிந்தவுடனே உள்ளே போய்விட்டார். கூட்டத்தின் ஆரவாரம் தாங்க முடியவில்லை.

நடராஜபிள்ளை உள்ளே போனவுடன், அங்கிருந்த ஒருவர், "இதோ உங்களுக்குத் தந்தி" என்று கொடுத்தார். "தந்தியா?" என்று கேட்டுக் கொண்டே நடராஜ பிள்ளை கீழே விழுந்து மூர்ச்சை ஆனார்.

தந்தி ஏழு மணிக்கே வந்துவிட்டது. முன் ஏற்பாட்டின்படி குமரகுருபரர் வேறு யாருக்கும் தெரியாமல் அதை வாங்கி வைத்துக்கொண்டார். அதைப் பிரித்துப் பார்த்து, நாடகமெல்லாம் முடிந்த பிறகு மெல்ல நடராஜ

பிள்ளைக்குச் செய்தி தெரிவிக்கலாம் என்று எண்ணியிருந்தார். தந்தியில் வேறு என்ன இருக்கப் போகிறது? எதிர்பார்த்தது தானே? — இந்த நினைப்போடு அவர் வேதனைப் பட்டுக்கொண்டிருந்தார். அதைப் பிரிக்காமல் படிக்காமல், 'நாடகம் முடியவேண்டுமே!' என்ற கவலையோடு ஒவ்வொரு கணமும் கவனிக்க வேண்டியதைக் கவனித்துக்கொண்டு சுறுசுறுப்பாக இருந்தார். நாடகம் முடிந்தவுடனே பொது ஜனங்களின் கலவரம் அதிகமாகி விட்டது. நடராஜ பிள்ளையைப் பார்க்காமல் கூட்டம் கலையமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது.

அவர் கையிலோ தந்தி. 'நடராஜ பிள்ளைக்குச் செய்தியைத் தெரிவிக்காமல் இவ்வளவு நேரம் இருந்ததே பாவம்! இனியும் இந்த முரட்டு ஜனங்களுக்காகத் தாமதம் செய்வது மகா பாவம்! கடவுள் விட்ட வழி விடட்டும். இதை அவருக்கு அனுப்பிவிடுவோம். நாம் இங்கு இருந்து கூட்டத்தைச் சமாளிப்போம். துக்கச் செய்தியைச் சொன்னல் கூட்டம் சமாதானம் ஆகிவிடும்' என்ற யோசனையில் குமரகுருபரர் அதை உள்ளே அனுப்பினர்.

நடராஜ பிள்ளை மூர்ச்சையாகி விழுந்தவுடன் ஒருவர் அவர் முகத்தில் ஜலத்தைத் தெளித்தார். மற்றொருவர் தந்தியைப் பிரித்துப் படித்தார். "குழந்தை இப்போது தான் கண்ணை விழித்துக் கொண்டது. வாயைத் திறந்து தாகத்துக்குக் கேட்டது. கடவுள் காப்பாற்றினர். இனி, குழந்தைக்கு அபாயம் இல்லை" என்று இருந்தது. "ஹா!" என்று சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார் படித்தவர். அந்தக் கூச்சலும் சைத்தியோபசாரமும் நடராஜ பிள்ளைக்கு உணர்வை உண்டாக்கின. "ஐயா, உங்கள் குழந்தை பிழைத்துக் கொண்டது" என்ற வார்த்தைகள் அவர்காதில் ஜிலுஜிலு வென்று விழுந்தன. தந்தியைப் பார்த்தார். முகத்தில் தெளிவு உண்டாயிற்று. மெல்ல எழுந்திருந்தார். மேடைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அப்போதுதான் குமரகுருபரர், "குழந்தையின் மரணவஸ் தையையும் நினைக்காமல் அவர் இங்கேவந்தார். இவ்வளவு நேரம் நடித்தார். அழுகையில் மூழ்கி இருக்கவேண்டிய அவர் உங்களைச் சிரிப்பில் மூழ்கச் செய்தார். தருமம் தலை காக்கும் என்று எண்ணினேன். ஆனால் இன்று தந்தி வந்தது; அதையும் நான் மறைத்தேன். கடவுள் இரங்க வில்லை......" என்று பேசிக்கொண்டிருந்தார்.

தொடர்ந்தாற்போல், "கடவுள் கருணை காட்டினர்" என்ற குரல் உச்சஸ்தாயியில் உள்ளிருந்து வந்தது. ராஜ பார்ட்டு ரங்கசாமியின் குரல் அது. மேடை மீது வந்த நடராஜ பிள்ளை மெல்லிய குரலில் கண்ணீர் வழிந்து ஓடக் கைகளைக் குவித்துக்கொண்டே, "தர்மம் தலைகாத்தது. உங்கள் அன்பு என்னைக் காப்பாற்றியது. குழந்தைக்கு அபாயம் இல்லை" என்று சொன்னர். அவர் முகத்தில் உண்மையாகவே லேசான புன்னகை எழுந்தது.

# இவருக்கோ—!

ரா. ஸ்ரீ. தேசிகன்

எல்லோரும் அமர வாழ்வை, அழியாத நிலையை விரும்புகின்றோம் அன்றோ? கவி புகலரும் கவிதையில் தன் அமர வாழ்வை அடைந்துவிடுகிறான். சிற்பி கல்லில் பேரின்ப வீட்டைச் செதுக்கிவிடுகிறான். சித்திரகாரன் தன் ஓவியக் கிழியில் அதை வரைந்து விடுகிறான். நம்முடைய பெற்றோர்கள் நமது உள்ளத்தைத் தமக்கு இடமாகக் கொண்டுவிடுகின்றனர். நம் நினைவிலே அவர்கள் மாண்டு போகாமல் நிற்கின்றனர். மரணம் என்பது ஒருவருடைய எண்ணத்திலும் வளராமல் இருப்பதுதான். இவ்வமர நிலையை அடைய எல்லோரும் பாடுபடுகின்றோம் என்பது உண்மையே. இத்தகைய அமர வாழ்வு தனக்குக் கிடைக்காதா என்று ஓர் உள்ளம் ஏங்கிற்று; தவித்தது; வெதும்பிற்று.

லக்ஷ்மி புக்ககம் புகுந்து ஏழு வருஷங்கள் கழிந்துவிட்டன. அவளுக்குக் குழந்தை பிறக்கவில்லை. அவள் வயிற்றிலே ஒரு குழந்தையைப் பார்த்துவிட்டுக் கண்மூட வேண்டுமென்ற ஆவல் அவளுடைய மாமனாருக்கு அதிகரித்துக் கொண்டே வந்தது. தம் பிள்ளை ராமசாமி ஐயங்காரோடு தம் சந்ததியின் தொடர்பு அறுந்துவிடுமோ என்று அவர் அஞ்சினார். தமக்குப் பிற்காலத்தில் எள்ளும் தண்ணீரும் இறைக்க மக்கள் தோன்றாமல் போனால், எல்லாம் இருள் அடைந்துவிடுமே என்ற எண்ணம் அவரை வாட்டியது. ஒருநாள் தம் பிள்ளையிடம் நீர் மல்கிய கண்களோடு சென்று துக்கம் தொண்டையை அடைக்கப் பேசினார்.

"அப்பா, ராமு, நான் சொல்லுவதைக் கேளேன் நான் ஜாதகத்தைப் பரிசோதனை செய்ததில் சேதுவுக்குப்

போய் நீராடினல், எல்லாத் தோஷங்களும் தீர்ந்துவிடும் என்று அறிகிறேன். நான் பலமுறை சொல்லியும் நீ கேட்கவில்லை. உனக்கு அதில் நம்பிக்கை இல்லாது போனலும் தகப்பன் சொல்லைத் தவருமல் கேட்பாயாக.''

தண்ணீர்த் திவலைகள் விழுந்தே கல்லும் தேய்வதே போல, 'போகவேண்டாம்; இதெல்லாம் மூட நம்பிக்கை' என்று அவர் மனத்தில் வெகுநாளாய் வளர்ந்து வந்த எண்ணத்தின் வலிமை சிதைந்து கொண்டே வந்தது. முடிவில் ராமசாமி ஐயங்கார் போவதாக ஒப்புக்கொண்டார். தம்முடைய எண்ணம் இனிக் கருகி உதிர்ந்து போகாது; அரும்பிப் பூத்துக் காய்க்கும் என்ற ஆசை வெள்ளம் மாதவாச்சாரியார் உள்ளத்தில் ஓடி மயிர்க்கால் தோறும் எட்டிப் பார்த்தது.

கடலாடி ஒரு வருஷம் கழிந்தது. கிழ மாதவாச்சாரியார் கோயிலைச் சுற்றிச் சுற்றிச் சென்ருர். கோயிலிலுள்ள கல் தேய்ந்துகூடப் போயிருக்கும். அவர் செய்த பிரார்த்தனைகளை அக் கோயிலிலுள்ள நவக்கிரகங்கள் அறியும்.

லக்ஷ்மி ஸ்நானஞ் செய்யவில்லை என்று கேட்டவுடன் மகிழ்ச்சியால் உள்ளம் நடனமாடிற்று. குழந்தை பிறந்ததும்—அதுவும் ஆண் குழந்தை பிறந்ததும்—அவருடைய இன்பத்திற்கு எல்லை இல்லை. இனி இந்தக் கிழ உடம்பைக் கீழே தள்ளிவிடலாம்; தமக்கு இன்னேர் புதிய உடம்பு கிடைத்துவிட்டது; மறுபடியும் அக் குழந்தையின் ஆத்ம ஒளியோடு தாமும் கலந்துவிட்டோம் என்ற தருக்கிலே அவர் மெய்ம்மறந்து போனர். லக்ஷ்மியைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தெய்வ வலியினல் கிடைக்காத ஒரு மாணிக்கம் தன்னுடைய உள்ளக் கரைமீது ஒதுக்கப் பட்டது கண்டு உவகை பூத்தாள். அதைக் காப்பாற்றுவதிலேயே அவளுக்குப் பொழுது போய்விட்டது. இருள் அடைந்த வீட்டில் ஒரு புதிய விளக்கு எரிய ஆரம்பித்து விட்டது. அவ்வொளி இன்பத்தையும் அமைதியையும்

பரப்பிற்று. அது அவிந்து போகாமல் இருக்க வேண்டு மென்ற கவலை அவளை அரித்துத் தின்றது. அந்த மெல்லிய மலர்மீது காற்று அடிக்கக்கூடாது. சற்று வெய்யில் விழக் கூடாது. சற்று இருமினால் உள்ளம் பதைத்துப் போய் விடும். 'என் கண்ணே, உனக்கு ஆபத்து வந்துவிட்டதே' என்று உள்ளம் சாம்பிவிடும். கவலையும் களிப்பும் மாறி மாறி அவள் முகத்தில் நிழல் காட்டும். மிக்க அன்பு வைக்கப்பட்ட பொருளைப் பற்றிக் கவலை பாய்தல் இயல்பு அன்றோ.

"எல்லாம் உங்கள் தகப்பனாரை அப்படியே உரித்து வைத்திருக்கிறது" என்று லக்ஷ்மி அடிக்கடி தன் கண வர் ராமசாமி ஐயங்காரிடம் சொல்லுவாள். இதைக் கேட்டுக்கொண் டிருக்கும் கிழவரின் உள்ளத்தில் தேன் பாயும். உவகையில் கண்களை மூடிவிடுவார். பிள்ளைக்கு வயசு ஒன்று ஆகும் சமயம் கிழவர் தம் மடியில் வைத்துக் கொஞ்சுவார். இதைப் பள்ளியில் வைத்துப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எழும். அதற்கு உபநயனம் செய் தால் நலமாயிருக்குமென்ற மற்றோர் ஆசை எழும். கல்யா ணம், கார்த்திகை செய்த பிறகு இறந்தால்தான் அவர் நெஞ்சு வேகும் போலும்! இந்தக் குழந்தை வயிற்றில் இன்னொரு குழந்தை பிறக்கும் நாளையும் அவர் உள்ளம் சித் திரித்திருக்கக்கூடும். ஆனால் குழந்தைக்கு ஆண்டு நிறைவு ஆன பத்தாம் நாளில் தம்முடைய சிதைந்த கனவுகளுக்கு இடையே அவர் மாண்டுவிட்டார். அவருடைய உள்ளத் தில் ஓர் அமைதி பிறந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

குழந்தை வளர்ந்துகொண்டு இருந்தது. குழந்தையை மடியிலே வைத்துக்கொண்டு, "அப்பா காட்டு" என்று பக்கத்து வீட்டுப் பெண்கள் சொல்லுகிறபொழுது அது தன் விரலினாலும் கடைக் கண்ணினாலும் காட்டுகிற காட்சி யைத் தாயும் தகப்பனாரும் மிகச் சுவைபடக் கண்கள் கொண்டு பருகுவார்கள். அதனுடைய மழலை முற்றாத்

செஞ்சொற்களைக் கேட்டு இன்புறுவார்கள். அது தளர் நடை நடக்கின்றபொழுது கீழே விழும்; கீழே விழு கிறபொழுது இரக்கம் தோய்ந்த புன்முறுவல் அவர்க ளுடைய உதட்டுக் கோணங்களில் அரும்பும். ராமசாமி ஐயங்கார் தினம் ஒரு சட்டையை வாங்கிவருவார். அதை உடுத்து உடுத்து அழகு பார்ப்பார்கள். ஆயிர விதமான அன்பு வலைகளை அதன் லீலைகள் பின்னிவிட்டன. அவ்வலைகளில் சுருக்குண்டு கிடந்தனர் பெற்றோர் கள்.

குழந்தை மாதுவுக்கு ஐந்தாம் பிராயம் வந்து விட்டது.

ஐந்து வயசுப் பிராயம் ஆனாலும் பெற்றோர்களின் பணிவிடைகளில் அவன் ஈடுபட்டான். தாய்க்கு வேண்டும் பொழுது சிறிய செம்பில் ஜலம் கொண்டு தருவான். ராம சாமி ஐயங்கார் ஆபீசுக்குப் போவதற்கு முன் அவரு டைய சட்டை செருப்பு எல்லாவற்றையும் தயராய் எடுத்து வைப்பான். அவருடைய உருவம் மறைகிற வரை யில் வாசற்படியில் நின்றுகொண்டு பார்ப்பான். ஆபீசிலிருந்து திரும்பி வரும்பொழுது அவர் வரவை உற்று நோக்குவான். அவர் வந்ததும் சிரித்துக்கொண்டே சட் டையை மாட்டுகிற இடத்தில் மாட்டுவான். இரவானால் ராமசாமி ஐயங்கார் எங்கே படுத்துக்கொண்டிருந்தாலும், அங்கே வந்து படுத்துக்கொண்டு விடுவான். அக்ஷராப் பியாசம் செய்துவைப்பதற்கு முன்பே, தனக்காகவே ஒரு வழி வகுத்துக்கொண்டு எழுதவும் கணக்குப் போடவும் ஆரம்பித்துவிட்டான்.

"குழந்தை எத்தனை புத்திசாலியாய் இருக்கிறது! அது ஆயுசோடு இருக்கவேண்டும்" என்று அண்டைவீட்டுக் காரர்கள் பேசிக்கொள்ளுவார்கள்.

குழந்தையைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண் டும் என்று லக்ஷ்மியும் ராமசாமி ஐயங்காரும் கலந்து

யோசித்தனர். அவர்கள் முன் அநேக இன்பக் கனவுகள் மிதந்து வந்தன.

பையன் நாற்காலிமீது உட்கார்ந்து கொண்டு, மேஜை மேலுள்ள மைக் கூட்டில் பேனுவைத் தோய்த்து எழுதிக் கொண்டிருந்தான். மைக் கூடு ஓரத்தில் இருந்தபடியால் அது சாய்ந்து கீழே விழுந்து உடைந்து சுக்கு நூருய்ப் போய் விட்டது. கையெல்லாம் மை ஆகிவிட்டது. அந்தப் பையன் விழுந்தடித்து வெளியிலே வருகிறபொழுது சுவரின்மீது ஒரு மூலையில் அவனுடைய தளிர்க் கைவிரல்கள் அப்படியே பதிந்துவிட்டன.

"என்னப்பா பண்ணிவிட்டாய், மாது? அண்ணுவின் மைக்கூட்டை உடைத்துவிட்டாயே" என்ருள் லக்ஷ்மி.

"நான் எழுதினேன். அது கீழே விழுந்துடுத்து. அண்ணு கோபிச்சுப்பாரோ?"

இதற்குள் தகப்பனர் அங்கே வந்தார். பையன் மிரள விழித்தான்.

"நான் ஒன்று சொல்லுகிறேன். கோபித்துக் கொள்ளக் கூடாது" என்ருள் லக்ஷ்மி.

"என்ன சமாசாரம்?"

"மாது கையைப் பார்த்தீர்களா?"

"என்ன, மைக் கூட்டைக் கீழே தள்ளி உடைத்து விட்டான? போனல் என்ன; புதிதாய் ஒன்று வாங்கிக் கொண்டால் போகிறது."

குழந்தை மாது முகத்தில் சிரிப்பொளி தோன்றிற்று.

"இன்று சாயங்காலம் ஜவுளிக் கடைக்குப் போவோமா?"

"போவோமே."

மாது, லக்ஷ்மி, ராமசாமி ஐயங்கார்—இம் மூவரும் கடைக்குப் போனர்கள். பட்டு விற்கும் கடைக்குள் நுழைந்தனர். வித விதமானப் பட்டுக்களை விரித்துப் போட்டார்கள் கடையில் உள்ளவர்கள்.

"இந்த நீலப்பட்டு நன்ரு யிருக்கிறதா? பாரேன்" என்ருர் ராமசாமி ஐயங்கார்.

"நீலந்தான் இருக்கிறதே" என்ருள் லக்ஷ்மி.

"மாது, உனக்கு என்ன வேணும், என் கண்ணே?"

அவன் சிவப்புப் பட்டைத் தூக்கிஞன். அதை வாங்கிக் கொண்டனர்.

பூட்ஸ் கடைக்குப் போய்ப் பூட்ஸ், செருப்பு முதலியன வாங்கினர். ஸ்டாக்கின்சுகளையும் அவர்கள் மறக்கவில்லை. தலைக்கு நேர்த்தியான குல்லாவும் கிடைத்தது. பட்டையும் குல்லாவையும் பையன் தூக்கிக் கொண்டு வந்தான். இதர சாமான்களை ஒரு பெட்டியில் போட்டு ராமசாமி ஐயங்கார் எடுத்துக் கொண்டு வந்தார். வருகிற வழியில் வயிரக் கல் பதித்த தங்க மோதிரத்தைத் தட்டானிடம் வாங்கிப் பையனுக்குப் போட்டார்.

"ரெய்ாப நன்ருயிருக்கிறது பையனுக்கு. நான் மோதிரம் எத்தனையோ செய்திருக்கிறேன். இது மாதிரி அமையவே இல்லை" என்ருர் பத்தர். "குழந்தை அமோகமாயிருக்கப் போகிருன் பாருங்கள்."

"அப்படிச் சொல்லுங்கள் பத்தரே" என்ருள் லக்ஷ்மி.

வீடு வருவதற்குள் அஸ்தமித்து விட்டது. விளக்கு ஏற்றி அடுப்பைப் பற்ற வைத்தாள். மூடி விழிப்பதன் முன்னம் உலை குவிந்து ஒரு நொடியில் சமையல் ஆகிவிட்டது. மூன்று பேரும் உட்கார்ந்துகொண்டு இன்பமாய் உண்டனர். அன்றிரவு முழுவதும் பையனுடைய அக்ஷராப்பியாசத்தின் பேச்சுக் கடலிலே இருவரும் நீந்தினர். பையனும் தூங்கிவிட்டான். நடு நிசியில் எழுந்திருந்து தகப்பன் பக்கத்தில் படுத்து உறங்கிஞன்.

காலை ஏழுமணி யிருக்கும். அடுத்தாத்து அம்புஜப் பாட்டி வந்தாள்.

"ஏண்டி, லக்ஷ்மி, நாளைக்கு விஜய தசமிக்கு மாதுவைப் படிக்கவைக்கப் போறயோ?"

"ஆமாம், பாட்டி; இதோ பாருங்கள், அவனுக்குச் சாமான்கள் வாங்கியிருக்கிறேன்." சிவப்புப் பட்டு வேஷ்டியைக் காட்டினாள்; குல்லாவைக் காட்டினாள்; கை மோதிரத்தையும் காட்டினாள்.

எல்லாவற்றையும் பார்த்த அம்புஜப் பாட்டி, "மாதுவுக்கென்ன குறைச்சல், ராஜாப் பயல், அமோகமாயிருக்கணும்" என்று வாழ்த்தினாள்.

"அப்படி ஆசீர்வாதம் செய்யுங்கள்."

அம்புஜப் பாட்டி போய் விட்டாள்.

மத்தியானத்தில் புரோகிதர் வந்தார். அவர் மறுநாள் வருவதாகச் சொல்லிப் போய் விட்டார். சமையற்காரனுக்கு அச்சாரம் கொடுத்தாய் விட்டது. மேளக்காரனும் ஒப்புக்கொண்டு போய் விட்டான். வெற்றிலை, பழம், பால், தயிர் முதலிய எல்லாவற்றிற்கும் திட்டம் செய்தாய் விட்டது.

சூரியன் மேற்றிசையில் விழும் வேளை. மாது காகிதக் கப்பல்களை ஆழமான தொட்டியில் விட்டுக் கொண்டிருந்தான். லக்ஷ்மி உள்ளே காரியத்தில் ஆழ்ந்திருந்தாள். மாது தன் கணவனிடத்தில் இருக்கிறான் என்ற நம்பிக்கையுடன் தாய் இருந்து விட்டாள். தன் மனைவியினிடம் மாது இருக்கிறான் என்று தகப்பன் கருதி விட்டார்.

கப்பல்கள் அழகாய்த் தொட்டியில் மிதந்துகொண்டிருந்தன. ஒரு கப்பல் சற்றுத் தள்ளிப் போய் விட்டது. அதை யெடுக்க முயன்றுகொண்டிருந்தான் மாது. இதற்குள் லக்ஷ்மி தன் அறைக்குள் நுழைந்துகொண்டே, "மாது எங்கே?" என்றாள்.

"என்னடி, அங்கே உன்னிடத்தில் இல்லையா?" என்று பதற்றத்துடன் கேட்டார் ராமசாமி ஐயங்கார்

"எங்கே போய்விட்டான், தெரியவில்லையே" என்று வாசலில் ஓடிப்போய்ப் பார்த்தார்கள்; அங்கே அவனைக் காணவில்லை.

"கொல்லையிலுள்ள தொட்டியை மூடினாயா?" என்ற சொல் தன்னை அறியாமல் வெடித்துக் கிளம்பி விட்டது, ஐயங்காரிடமிருந்து. "என்றைக்கும் மூடுகிற வள் இன்றைக்கு மறந்து விட்டேனே. ஐயோ, மூட வில்லையோ" என்றாள் லக்ஷ்மி திகைத்து நின்றுகொண்டே.

"மழை பெய்து ஆறாய் ஓடுகிறபொழுது பக்கத்து வீட்டுப் பையன்கள் கப்பல் விட்டுக்கொண்டிருந்த அந்த நாள் முதல் கொண்டு கப்பல், கப்பல் என்று அரித்தானே; அப்போதெல்லாம் செய்துகொடுக்கவில்லையே. இன்று, பாவி, செய்து கொடுத்தேனே" என்று சொல்லிக்கொண்டு மனைவியோடு தாமும் ஓடினார்.

கப்பல்கள் சுற்றி விளையாடப் பையன் தொட்டியில் மாண்டு கிடந்தான்.

பையன் தூங்குவதுபோலத் தோன்றினான்; விழிப்பு இல்லாத் தூக்கமாகி விட்டது.

"ஐயோ, மோசம் பண்ணிவிட்டாயே" என்ற ஓலம் கேட்டது. "இதற்காகவா நான் உன்னை வளர்த்தேன்" என்று மூர்ச்சை அடைந்து விட்டாள் தாய்.

"இதற்காகவா நான் கப்பல் பண்ணிக் கொடுத்தேன்? உனக்கு நான்தானா எமனாக வரவேண்டும்?"

சற்று மூர்ச்சை தெளிந்து லக்ஷ்மி, "நீங்கள் குழந்தைக்கு எமனாய் வரவில்லை. நான்தான் அவனுக்கு எமனானேன். தொட்டியை மூடாது வந்தேனே, பாவி. என் குஞ்சலமே! என் கண்ணே! இனிமேல் உன்னை எப்போடா பார்க்கப் போறேன்" என்று குழந்தையை அணைத்துக்கொண்டு அழுதாள். ஊர் கூடிற்று; என்ன பயன்? விடிந்தால் மங்கல ஒலி கேட்கவேண்டிய வீட்டில், புல்லும் கையுமாய்ப் புரோகிதரும் வந்தார்

அந்த மெல்லிய மலரைத் தீயில் வைக்கவே, பாற் குடமும், தயிர்க் குடமும் தூரத்திலே தோன்றி மறைந்து விட்டன. மேளக்காரன் சாடையாக அகன்று விட்டான். பொரி, கடலையை எதிர்பார்த்த பள்ளிப் பையன்கள் ஏமாந்து போய்விட்டனர்.

சில நாட்கள் கழிந்தன. மாது அணிந்துகொண் டிருந்த எல்லாவற்றையும் தானம் செய்து விட்டார் ராமசாமி ஐயங்கார். அவனுடைய ஞாபகச் சின்னங்கள் அனைத்தையும் கொளுத்தி விட்டார். ஆனால் ஒவ்வொரு மூலையும் அக் குழந்தையின் ஞாபகத்தை எழுப்பிக் கொண்டே வந்தது. 'ஆபீசுக்குப் போகும்பொழுது, "இதோ அண்ணு" என்று சட்டையையும் செருப்பையும் கொடுப்பனே. நான் தூரத்தில் மறைகிறவரையில் வாசலில் வந்து நின்று பார்ப்பானே. என் வரவு நோக்கி அந்திப் பொழுதில் இமை கொட்டாமல் இருப்பானே' என்றெல்லாம் அவர் உள்ளம் நைந்தார். நள்ளிரவில் குழந்தை பக்கத்தில் படுத்திருப்பதாக நினைத்துத் துழாவுவார். தன்னறியாமல் கண்ணீர் வழிந்து தலையணையை நனைத்துவிடும். லக்ஷ்மியின் உள்ளம் உடைந்து விட்டது. தன், சேயோடு அவள் அழகு மாறிவிட்டது; திருவும் அகன்றது. வாழ்விலே கசப்பு வந்துவிட்டது.

அம்புஜப் பாட்டியோடு ஒருநாள் பேசிக்கொண்டு இருந்தாள்.

"மலடாய் இருந்திருக்கக் கூடாதா, பாட்டி. பிள்ளை இல்லையென்ற குறையோடு போய்விடும். கண்ணைக் காட்டி, மூக்கைக் காட்டிச் சிரித்து விளையாடி ஆயிரம் ஞாபகங்களை வைத்துவிட்டுப் போய்விட்டானே. நான் என்னமாய்க் காலம் கழிக்கப் போகிறேன்?"

"இதெல்லாம் நாம் பண்ணிக் கொள்ளுகிறதா, அம்மா? அழாதே; எல்லாம் அவன் பண்ணுகிற கூத்து" என்று சமாதானம் செய்தாள் அம்புஜப் பாட்டி.

நாள் தேயத் தேயக் குழந்தையின் ஆசை முகம் மறந்து கொண்டே இருந்தது. ஞாபகச் சின்னங்கள் போனால் நலம் என்று நினைத்த உள்ளம் ஞாபகச் சின்னங்கள் கிடைக்குமா என்று தேடித் திரிந்தது. 'போட்டோ பிடித்து வைத்தால் ஆயசு குறைந்து போய்விடும் என்ற மூட நம்பிக்கையை அவலம்பித்துப் புத்தி மோசம் போனேனே' என்ற ஏக்கம் வந்தது. ஒரு சின்னமும் கிடைக்காதா என்று உள்ளம் வெதும்பி நாற்காலியில் உட்கார்ந்தார். இரவும் வந்தது. விளக்கேற்றினார். ஒரு மூலையில் அதன் ஒளி விழவே அங்கே உள்ள சுவர்மீது மாதுவின் கை விரல்களின் சுவடு அப்படியே இருந்தது. விளக்கைச் சற்றுச் சமீபத்தில் கொண்டு போய்ப் பார்த் தார். மைக் கூடு உடைந்த செய்தி மனத்தில் மின்னல் அடித்தது. 'ஆமாம்; மாண்டுபோன குழந்தையினுடைய விரல்களின் சுவடுதான். தெய்வம் அளித்த ஒரு சின்னம்' என்ற எண்ணம் அவருக்கு வந்தது. தாம் வெளியிலே போகிற போது அவ்வறையைப் பூட்டிக் கொண்டே போவார். எப்பொழுதாவது உள்ளம் தடுமாறுகிற நிலையில் அச் சின்னத்தை நோக்குவார். அது கால இருளைத் தள்ளிக் குழந்தையின் உருவத்தை அவர் முன்னே நிறுத்திவிடும். மனமன்றில் அது நடனமாடுதல் கண்டு ஆறுதல் அடை வார். இவ்விஷயத்தை ஒருவருக்கும் சொல்லவில்லை. மனத் திற்கு ஓர் ஆறுதல் கிடைக்கவே அவர் உள்ளத்தில் ஒரு சாந்தியும் ஏற்பட்டதுபோலப் பட்டது. தம்மை ஒரு பைத்தியம்—உணர்ச்சிக்கு வசமான ஒரு பைத்தியம்—என்று உலகம் நினைக்குமென்று ஒருவருக்கும் சொல்ல வில்லை. தம் மனைவிக்கும் இதைத் தெரிவிக்க வில்லை. இதைப் பார்த்தால் ஆறிவருகிற புண் பச்சைப் புண்ணாகி விடுமோ என்று அஞ்சினார்.

ராமசாமி ஐயங்காரும், அவர் மனைவியும் தீர்த்த யாத்திரை செய்யப் போனார்கள். மாசங்கள் இரண்டாகி

விட்டன. வீட்டிற்குக் காவல் அவர் மைத்துனனும், தோட்டக்காரக் கோவிந்தனும் தான். ராமசாமி ஐயங்கார் தம் அறையைப் பூட்டி விட்டுத்தான் போனார்.

ஒரு நாள் மத்தியானம் வீட்டில் எலி செத்த நாற்றம் அடித்தது. பொறுக்க முடியவில்லை. வீடு முழுவதும் மைத்துனன் தேடிப் பார்த்தான். கடைசியாக மூடிக் கிடக்கும் அறையிலிருந்துதான் அந்த நாற்றம் வருகிறது என்று தேர்ந்தான்.

"கோவிந்தா, இந்த அறையில் இருந்துதான், நாற்றம் அடிக்கிறது. இதைத் திறந்து எலியை அகற்றினால்தான் இந்தகத்தில் இருக்க முடியும்."

"ஐயா கோவிச்சுக்கு வாங்களே" என்றான் கோவிந்தன்.

"என்ன செய்துவிடப் போகிறோம்? செத்த எலியை எடுத்தெறிந்தோம் என்று சொன்னால் அவர் என்ன சொல்லப் போகிறார். நாற்றம் சகிக்க வில்லை."

"சாவிக்கு எங்கே போகிறது? ஐயா இல்லாமல் அறையைத் திறந்தால் சாமான் கெட்டுப்போனால் என் மீது பழி வருமே."

"நான் பார்த்துக் கொள்ளுகிறேன்."

அச்சத்துடன் உடன்பட்டான் கோவிந்தன். உள்ளே திறந்து பார்த்ததில் எலி செத்துக்கிடந்த உண்மை வெளி யாயிற்று. 'பினைல்' போட்டுச் சுத்தம் செய்தனர். மேஜை மீதும், புத்தகங்களின் மீதும் புழுதி படிந்திருந்தது. புத்த கங்களைத் தட்டி வைத்தார்கள்.

'சுவர்களுக்கு வெள்ளை அடித்தால் என்ன? இதை தான் பாக்கி வைப்பானேன்' என்று வெள்ளை அடித்தனர். ஓர் உள்ளத்திற்கு உபசாந்தி அளித்த சின்னமும் மறைந்து விட்டது. ஒரு நாள் இருட்டுகிற சமயம். ராமசாமி ஐயங்காரும் அவருடைய மனைவியும் வீடு திரும்பினர்.

வண்டியை விட்டு இறங்கினதும் தம் அறைச் சாவியைத் தேட ஆரம்பித்தார் அவர்.

"எதைத் தேடுகின்றீர்கள்?" என்றான் மைத்துனன்.

"இந்த அறைச் சாவியைத்தான்."

"இதோ இருக்கிறது. எலி செத்துக் கிடந்த நாற்றம் சகிக்கவில்லை. அறையைச் சுத்தம் செய்தோம்."

"நான் திறக்க வேண்டாம் என்று சொல்லி யிருந்தேனே."

"அப்பவே சொன்னேனே, கேட்டீங்களா?" என்றான் கோவிந்தன்.

"என்னத்தைச் செய்துவிட்டான், உங்கள் மைத்துனன்? ஏன் கோபித்துக் கொள்ளுகிறீர்கள்?" என்று சொல்லி விட்டுச் சமையல் அறைக்குள் நுழைந்து விட்டாள் லக்ஷ்மி.

ராமசாமி ஐயங்கார் அறைக்குள் நுழைந்தார். விளக்கேற்றி வழக்கமாய் நிற்கிற மூலையில் போய் நின்றார். சிறிது ஒளி வீசிக்கொண்டிருந்த உள்ளத்தைப் பேரிருள் மூடி விட்டது. உள்ளத்தில் அடிக்கிற உணர்ச்சிப் புயலை அடக்கிக்கொண்டு, அந்த இடத்தையே பார்த்து நின்றார்.

"என்ன பார்க்கின்றீர்கள். இந்த இடத்தில் மையும் கிய்யுமாயிருந்தது. வெள்ளை யடித்துச் சுத்தம் செய்தோம்" என்றனர். அவர்களுக்கு அங்கே தோன்றியவை மைக் கோடுகள்தான். ஆனால் இவருக்கோ—

# வீடு திரும்பியதும்—

காண்ஸ்டான்டைன் டிரென்யோவ்

வசந்த காலப் பொலிவுடன் வயல்கள் எல்லை இல்லாமல் நீண்டு பரந்து கிடந்தன. அவைமீது உறைந்திருந்த பனிக் கட்டி அப்போதுதான் உருகி யிருந்தது; சில இடங்களில் இன்னும் உருகாமலும் கிடந்தது. உதாரணமாக, கண வாய்க்கு அப்பால் இருந்த புதரில் இளம் பயிர்களிடையே நீல வர்ணத்துடன் அது பிரகாசித்தது. ஆனல் நீல வானிலே வானம்பாடி பாடிக்கொண் டிருந்தது.

டாங்கிப் படையைச் சேர்ந்த அலெக்ஸிஸ் ச்குவார்ட் ஸோவ் நடந்துகொண்டிருந்த சாலை நன்ருகக் காய்ந்து விட்டது. பக்கத்து வாய்க்காலில் சென்ற வருடம் உலர்ந்துபோன புல்லில் இருந்து புதிய பச்சைத் தளிர்கள் அங்கங்கே எட்டிப் பார்த்தன. அலெக்ஸி மேட்டின்மீது ஏறினன். அங்கே பழைய சுரங்கங்களின் சின்னங்கள் அப் போதும் இருந்தன. பாழாகி உபயோகம் அற்றுப் போன மோட்டார் வண்டிகளும் உருக் குலைந்து நின்றன. அவன் எதிரே அவனது கிராமம் தோற்றம் அளித்தது.

அலெக்ஸி அதைக் கண்டதும் ஒரு கணம் நின்ருன்; தன் மூச்சை அடக்கி, தன் ஒற்றைக் கண்ணுல் அதை நீண்ட நேரம் பார்த்தான். கிராமம் அழிக்கப்பட்டு விட் டது என்பது அவனுக்குத் தெரியும். வழியிலே அவ்விதம் அழிக்கப்பட்ட கிராமங்கள் பலவற்றையும், நகரங்களையும் அவன் கண்டான். மற்றக் கிராமங்களைப் போலவே அந்தக் கிராமமும் இருந்தது. இடிந்த குடிசைகளின் புகை போக்கிகள் கருநிறம் கொண்டு அங்கங்கே உயர்ந்து

தமிழாக்கியவர்: ஆர். ராமநாதன்

நின்றன. பக்கத்திலேயே புதிய கட்டிடங்களும் காணப் பட்டன. புதிதாக வேயப்பட்ட கூரைகள் சூரிய ஒளி பட்டுப் பொன் மயமாக விளங்கின. அலெக்ஸி தன் வீட்டிடைத்தேடினன்......திடீரென்று அவன் ஹிருதயம் இன்பத்தால் நிறைந்தது. அதோ, சதுக்கத்திற்கு அருகில் சருகு உதிர்ந்து மொட்டையாக நிற்கும் அலரிச் செடிக்குப் பக்கத்தில் பொன் மயமான கூரையும், வெள்ளைப் புகை போக்கியும் கொண்டு தெரிகிறதே! உருக் குலைக்கப்பட்ட தன் வதனத்தில் வழிந்த கண்ணீரை அவன் தன் சட்டை நுனியால் துடைத்துக் கொண்டான். எதிரி அவன் முகத்தை எவ்வாறு சீர் குலைத்தானே, அதே போன்று அவன் கிராமத்தையும் அழித்துவிட்டான். கிராமத்தைப் புதிதாக நிர்மாணம் செய்ய முடியும்; அதன் அழிவை மறந்து விட முடியும். அழிந்த வீடுகளையும், எரிந்த கட்டி டங்களையும் மறுபடியும் அமைத்துவிடலாம். ஆனல் அவன் முகத்தைச் சீர்ப்படுத்தவே முடியாது.

ஆஸ்பத்திரியிலிருந்து அவன் நேரே வீட்டிற்குத் திரும்பினன். தான் ஆஸ்பத்திரிக்கு எவ்வாறு வந்தான் என்பது அவனுக்கே தெரியாது. டாங்கியை முன்னணி யில் நடத்திக்கொண்டு தான் நதியை முதலில் கடந் ததும், தன்னைக் குளவிக் கூட்டத்தைப் போன்று ஜெர்மா னியர் சூழ்ந்து கொண்டதும், அப்பால் உள்ளே நெருப்பு ஜ்வாலை எழுந்ததுமே அவனுக்கு ஞாபகம். அந்தப் போரின் முடிவு என்ன என்பது அவனுக்குத் தெரியாது. ஆஸ்பத்திரியில் அவன் உயிருக்குப் போராடி ஆப ரேஷன் முடிந்த பிறகுதான் அவனுக்கு அது தெரிந்தது. எரிந்துபோன அவன் முகம் பக்குவம் ஆகாத பச்சை மாமிசத்தைப்போல் இருந்தது. அதை மூடியிருந்த தோலில் சிறிது அவன் தேகத்திலிருந்து எடுக்கப்பட்டது; யாரோ பிறன் ஒருவன் தேகத்திலிருந்து எடுக்கப்பட்ட தோலும் சேர்ந்திருந்தது. வதனத்திலே ஒட்டுப் போட்டுத் தையல்.

இன்னும் பித்தளைத் தொண்டைக் குழாயும், செயற்கைக் கண்ணும் வைக்கப் பட்டிருந்தன......அவன் வீரத்தை மெச்சி, " ஆர்டர் ஆப் லெனின் " னும், தங்கப் பதக்கமும் ஆஸ்பத்திரியில் அவனிடம் கொடுக்கப்பட்டன. அவன் குரல் முன்போல் இல்லை; கனத்து இருந்தது. அவன் வதனம் விகாரமாய் இருந்தது. கண்ணாடியில் தேடிப் பார்த்தபோது, தனக்குப் பழக்கமான, தன்னை அடையாளம் கண்டுபிடிக்கக் கூடிய, சின்னம் ஒன்றுகூட அவனுக்குத் தெரியவில்லை.

தனது கிராமத்திற்கு முன் இருந்த மேட்டைத் தாண்டி அவன் கீழே இறங்கினான். ஊற்று எடுத்து ஓடி வரும் அருவிக்கு மேல் கட்டியிருக்கும் பாலத்தை அவன் கடந்தான். இளம் புற்கள் நதி யோரத்திலே தோன்றி இருந்தன. நாணல்கல், பசுமை நிறத்தைக் காட்டவில்லை யென்றாலும், அவைகளை விட்டில் பூச்சிகள் சுற்றிச் சுற்றி வருந்தன. காற்றிலே அசைந்து ஆடினபோது அவை உல்லாச கீதம் பாடுவதுபோல நாதம் எழுந்தது. புதர்களிலே பறவைகள் கூவின; பாடின. வீதியிலே அவன் மெதுவாக நடந்தான். அதோ இருக்கிறது ஒரு கூட்டுப் பண்ணைக் கொட்டகை. பெண்கள் சுண்ணாம்பும், சாணியும் கலந்து அதை மெழுகிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அந்தச் சாணி ஜலத்தை, ஜெர்மன் ஹெல்மெட்டுகளில் வைத்துக் கொண்டிருந்தனர். அலெக்ஸி அந்தப் பெண்களைப் பார்த்தான். ஆனால் எல்லோரும் வயோதிகர்களாகவோ இளைஞர்களாகவோ இருந்தார்கள். அவர்களில் யாரையும் அவனுக்குத் தெரியவில்லை

பெரிய கொட்டகையின் மூலையை அவன் கடந்து விட்டான். தலையில் சிறிய குல்லாய் அணிந்து, நீண்ட தாடியுடன் வயோதிகன் ஒருவன் தன்னைச் சுற்றியிருக்கும் கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்கு எதையோ உற்சாகத்தோடு கூறிக்கொண்டு இருந்தான். அலெக்ஸி அவர்களை

அணுகினான். கிழவன் கிரியாஷை அவன் அடையாளம் கண்டு பிடித்தான்.

"இதுதான் உண்மைப் போக்கு. இந்தப் பசுவை எங்களுக்கு விற்றபோது அது அலெக்ஸி விழாவன்று கன்று போடும் என்று அவர்கள் சொன்னார்கள். அதை அப்போது நான் நம்பவில்லை. ஆனால் இன்றைக்குப் பசு ஈன்றிருக்கிறது. இன்று அலெக்ஸி விழா எனவே அவர்கள் சொன்னது உண்மைதான் என்று நினைக்கிறேன்" என்று கூறினான் கிரியாஷ்.

அலெக்ஸி, கிரியாஷ் அருகில் சென்றான். சிலர் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் பார்வையிலே அவனுக்குப் பல இடங்களில் கண்டு பழக்கப்பட்ட இரக்கக் குறி தென்பட்டது.

அலெக்ஸி வாய் திறவாமல் அவர்களைப் பார்த்து விட்டு மேலே நடந்தான்.

இன்னொரு கூட்டத்தை அவன் கடந்து சென்ற பொழுது நாஸ்டியா பெயர் அவன் காதில் விழுந்தது. அவன் ஹிருதயம் விம்மிற்று. அவன் கால்கள் அங்கேயே நிலைத்தன. அவர்கள் பேசுவதை உற்றுக் கேட்டான். கூட்டுப் பண்ணைத் தலைவி நாஸ்டியாவைப் பற்றிப் பேச்சு மீண்டும் ஆரம்பம் ஆயிற்று. அவன் மேலே நடந்தான். அங்கே, அருவிப் பக்கமாக வீதி திரும்பின இடத்திலே, அவன் தன் வீட்டைக் காணவேண்டும். திடீரென்று அவன் மூச்சுத் தடைப்பட்டது. இரண்டு அடிகள் அவன் நடந்தான். அதோ, ஒடிந்த கிளையையுடைய அலரிச் செடியின் கீழே புதிதாகக் கூரை வேய்ந்து, வெள்ளை அடிக்கப்பட்ட அவன் வீடு...போர் புரியும்பொழுதும், ஓய்வு நேரத்திலும், தூக்கத்திலும், விழித்திருக்கும் போதும் எத்தனை தரம் அவன் அதைக் கண்டிருக்கிறான்...அதே பழைய கதவு. அதைத் திறந்து கொண்டு அலெக்ஸி உள்ளே நுழைந்தான். கொட்டகையின் மூலையிலே கலப்பை

இருந்தது. பின்கட்டில் இருந்து அவனை வரவேற்க ஒரு கிழவி வந்தாள். அலெக்ஸி தன் அன்னையைக் கண்டான். அவளுடைய கண்கள் அவனைச் சுட்டிக் காட்டின. அவளுக்கு வயசாகி விட்டது; அவள் மெலிந்திருந்தாள்; அவள் தலையை மூடியிருந்த போர்வையைத் தள்ளிக் கொண்டு நரை மயிர்கள் சில வெளியே வந்தன. ஆனால் அந்தக் கண்கள்—அந்தக் கண்கள், அவற்றின் பாஷை, பிரிந்து செல்லும் பொழுது அவைகளிலே தோன்றின துக்கம், ஆகியவை எல்லாம் அவனுக்கு ஞாபகம் வந்தன. ஆனால் இப்போது அவை துக்கம் கலந்த ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தன.

"நமஸ்காரம்" என்று தன் கனத்த குரலில் கூறினான் அலெச்ஸி.

"நல்வரவு" என்று அவன் அன்னை பதிலுக்குக் கூறினாள். "நீ நாஸ்டியாவையா பார்க்க வேண்டும்?"

"இருவரையும், — உங்களையும் நாஸ்டியாவையும் — பார்க்க வேண்டும். நான்...நான் அலெக்ஸியிடம் இருந்து செய்தி கொண்டுவந்து இருக்கிறேன்."

அன்னையின் கண்கள் ஆனந்தக் கூத்தாடின; பின்னர், கண்களிலே நீர் நிறைந்தது.

"என் குழந்தாய், அப்படியானால் அவன் எங்கே இருக்கிறான்? நீ அவனை எங்கே கண்டாய்? ஆஸ்பத்திரியிலா? எங்கே?"

"ஆம், ஆஸபத்திரியிலும்......நாங்கள் ஒன்றாகவே போர் புரிந்தோம். தோளோடு தோள் நின்றோம். அவன் குடும்பம் எப்படி இருக்கிறது?"

"ஆண்டவன் கிருபையால் எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்கள்" என்று கூறினாள் கிழவி. சட்டென்று அவளுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது.

"இனிக் கவலை இல்லை. நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவன் அபாயகரமான நிலையில் இல்லை......

சிறு காயம். விரைவில் அவன் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறுவான். அவன் மனைவியும்.....குழந்தைகளும் எங்கே?''

"நாஸ்டியா நாள் முழுவதும் சோவியத் காரியாலயத்திலும், கூட்டுப் பண்ணையிலும் இருப்பாள். அவர்கள் வீடு கட்டுகிறார்கள். நாளைக்கோ, அதற்கு அடுத்த நாளோ அவர்கள் விதை விதைக்க வயலுக்குப் போவார்கள். அவன்தான், என் பேரன், ஸ்டியோபா, சதா அவளுடன் இருக்கிறான். ஆனால் பெண் குழந்தை, நடாஷா வீட்டில் இருக்கிறாள். உள்ளே வந்து சிறிது நேரம் இளைப்பாறு.''

சிறு குழந்தைப் பருவத்திலிருந்து அவனுக்குப் பழக்கமான கதவை அன்னை திறந்து, அவனை உள்ளே அழைத்துச் சென்றாள். அவ்விடம் இருந்து வெளிப்பட்ட பழக்கமான அந்த மணத்தை அவன் ஆசையுடன் நுகர்ந்தான். ஜன்னல் அருகில் பெஞ்சியிலே உட்கார்ந்துகொண்டு துண்டுத் துணிகளை வைத்து ஒரு சிறுமி விளையாடுவதை அவன் கண்டான். அவளை அவன் தெரிந்துகொண்டு இருக்கவே முடியாது. அவள் உயரமாகவும், ஒல்லியாகவும் இருந்தாள். அந்தக் கண்கள்—அவள் அன்னையின் கண்கள், அவனுக்கு நன்றாகத் தெரிந்தவை—அவைகளைக் கொண்டே அவன் அடையாளம் கண்டு பிடித்தான். எல்லாவற்றையும் மறந்துவிட்டு அவளை நோக்கி அவன் வேகமாக நடந்தான். ஆனால் அவனைக் கண்டதும் குழந்தை பயம் நிறைந்த தன் கண்களை அகலமாக விழித்துக்கொண்டு அந்த அறையின் மூலையில் ஒடுங்கியது.

"நீ பயப்படாதே, குட்டி, உன் தந்தையிடமிருந்து வந்திருக்கும் அன்பு நிறைந்த மாமா இவர்'' என்றாள் பாட்டி.

"பரிசுகளும் கொண்டுவந்து இருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே அலெக்ஸி, தன் பையைத் திறந்து ஆஸ்பத்திரியில் குழந்தைகளுக்காகக் கொடுத்த பரிசுகளை

வெளியில் எடுத்தான். அவன் அவைகளைச் சிறுமியிடம் நீட்டினான். ஆனால் அவைகளை வாங்க முன்வரவில்லை அவள்.

"வாங்கிக் கொள், என் கண்ணே: உன் தந்தை அனுப்பியவை இவை."

ஆனால் அவள் அசைவற்று நின்றாள். அவள் கண்கள் தரையை நோக்கின; கைகள் கீழே தொங்கின.

"எதற்காக நீ இப்படி பயப்பட்டு விழிக்கிறாய்?" என்று கேட்டாள் பாட்டி. "உன் தந்தை உன்னைப் பற்றியே நினைக்கிறார்! நீயும் எப்போதுமே உன் தந்தையைப் பற்றித்தான் நினைக்கிறாய்!" இதைக் கூறிவிட்டு அவள் அலெக்ஸி பக்கம் திரும்பி, "ரேடியோவிலே அவனைப் பற்றிப் பேசின போதும், அவன் படம் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பொழுதும், அவளுக்கு எங்கும், எப்பொழுதும் தந்தையைப் பற்றித்தான் பேச்சு. காலையில் படுக்கையை விட்டு எழுந்ததும் அவளுக்குத் தந்தையின் படத்தைப் பார்க்க வேண்டும்! அந்தப் படத்திற்கு முத்தம் இடாமல் அவள் படுக்கவே மாட்டாள். பிறகு பண்ணைக் காரியாலயத்தில் அவன் படத்தை வைத்த பொழுது அவளைக் கட்டிப்பிடிக்க முடியவில்லை. அதிலே அவளுக்கு அவ்வளவு பெருமை! சிறிய வாத்துக் குஞ்சைப் போல அவள் இருந்தாள்!" என்று கூறினாள்,

அலெக்ஸி தன் படத்தைப் பார்த்தான். அது காகிதப் பூக்களாலும், ரிப்பனாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

"இப்போதும் அவன் இப்படியே இருக்கிறானா, தம்பி? காரியாலயத்திலுள்ள படம் உயிருள்ள ஓவியத்தைப் போல இருக்கிறது."

"காரியாலயம் பழைய இடத்தில்தான் இருக்கிறதா?"

"இல்லை. ஜெர்மானியர் சோவியத்தையும், பள்ளிக்கூடத்தையும், வாசகசாலையுங்கூட எரித்து விட்டார்கள்.

அவைகளை மீண்டும் கட்ட நாங்கள் ஆரம்பித்து விட்டோம். இரவும், பகலும் நாஸ்டியா அந்த வேலையில் தான் ஈடுபட்டு இருக்கிருள். காரியாலயம் இப்போது பாட்ராக் வீட்டில் இருக்கிறது. அவருடைய இரண்டு புதல்வர்களும் போருக்குச் சென்ருர்கள். அவர்கள் இருவரும் கொல்லப்பட்டதாகச் சொல்லிக் கொள்ளுகிருர்கள். அவரும் பார்ட்டிசான்களுடன் சேர்ந்து விட்டார். இது ஜெர்மானியருக்குத் தெரிந்தது. அவர் வீட்டையும் எரித்துவிட ஜெர்மானியர் விரும்பினர். ஆனல் சமயத்தில் நமது படை வந்தது.''

அலெக்ஸி எழுந்தான்.

"எங்கே இதற்குள் போகிருய்?''

"ஏன்? நான் நாஸ்........நாஸ்டாஸ்யா மிகைலோவ்ஞவைப் பார்க்க வேண்டும்........அவளுக்குச் செய்தி இருக்கிறது.''

"நல்லது. முடியுமானல் அவளைச் சந்திக்கவும். கழுத்து அறுபட்ட கோழிக் குஞ்சைப் போல் எப்போது பார்த்தாலும் அவள் ஓடித் திரிகிருள். வயல்களிலே, பண்ணையிலே, சோவியத்திலே—அவள் எங்கும் இருக்கிருள். ஒரு நிமிஷங்கூட அவள் சும்மா இருக்கவில்லை. காலையிலிருந்து மாலை வரையில் அவள் உழைக்கிருள். சில நாட்களில் இரவில் வீட்டிற்குக்கூட வரமாட்டாள். குழந்தைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை அறியமட்டும் எட்டிப் பார்க்கிருள்.''

தன் அன்னை சொன்னது உண்மைதான் என்பதை அலெக்ஸி விரைவில் உணர்ந்தான். வீதியில் கண்டவர்களிடம் எல்லாம் பண்ணைத் தலைவியை எங்கே சந்திக்க முடியும் என்று வினவினன். அவள் இருக்கக்கூடிய இடங்கள், இருக்க முடியாத இடங்கள் முதலியவைகளை எல்லோரும் விருப்பத்துடன் தெரிவித்தார்கள். என்ருலும், அவளை எங்கே காணமுடியும் என்பதை யாராலும்

நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. மீண்டும் அவன் கிரியாஷைச் சந்தித்தான். கிரியாஷ் இந்தக் கேள்விக்குப் பதில் கூறுமுன் சிறிது நேரம் யோசித்தான். பிறகு அவன் சொன்னான்:

"அவள் கொல்லன் பட்டறையில் இருப்பாள் என்று நினைக்கிறேன். ஆனால் அவள் களஞ்சியத்திலும் இருக்கலாம். நீ எதற்காக அவளைத் தேடுகிறாய்?"

"அவளிடம் கொஞ்சம் வேலை இருக்கிறது" என்று அலெக்ஸி மழுப்பலாகக் கூறினான்.

"அது எத்தகைய வேலையாக இருக்கும்? உன் வேலை சம்பந்தமாக நீ அவளைப் பார்க்க வந்திருந்தால், அவள் அதைச் செய்துகொண்டிருப்பதை நீ காண்பாய்" என்றான் கிரியாஷ்.

அலெக்ஸி நடந்தான். அவன் ஒரு வீட்டைக் கடந்து சென்றபொழுது வேலிக்குப் பின் இருந்து ஒரு பெண்ணின் இன்பச் சிரிப்புக் கேட்டது. அவன் அசைவற்று நின்றுவிட்டான். விமானத்தின் இரைச்சலுக்கு இடையிலும், குண்டின் வெடிப்புக்கு மத்தியிலும், கைக்குண்டின் சத்தத்தின் நடுவிலும் அவன் எத்தனை தரம் அந்தச் சிரிப்பைக் கேட்டிருக்கிறான். அந்த வீடு அலெக்ஸிக்கு நன்றாகத் தெரியும். தன் நண்பன் பாவெலின் வீடு அது. அவன் திரும்பி வேகமாக அந்த வீட்டின் உள்ளே சென்றான். அதோ கொட்டகைக்கு அருகில் அவள் நின்றுகொண்டு இருந்தாள். பக்கத்தில், இளமை கொஞ்சும் இன்பப் புன்னகையுடன் பாவெல் நின்றான், சட்டையை பெல்டில் சொருகிக் கொண்டு. அவன் வேடிக்கையாக எதையோ சொல்லிக்கொண்டு இருந்தான் போலும். நாஸ்டியாவோ அலெக்ஸியைப் பார்க்காமல் சிரித்துக் கொண்டே இருந்தாள். அவன் மெதுவாக அவளிடம் சென்றான். நாஸ்டியா அவனைப் பார்த்தாள். அவள் அவனை அணுகினபொழுது, அவள் புன்னகை

மறைந்தது. அவனுக்குப் பழக்கமான அதே இரக்கக் குறி தென்பட்டது. உலகத்திலேயே தன்னால் அதிகமாக நேசிக்கப்படும் ஒரு வதனத்திலே அத்தகைய இரக்கக் குறி தோன்றுவதை ஒரு மனிதன் எவ்வாறு சகிப்பான்! அவன் தன் மனைவியை அணுகினான். அதை எதிர் பார்த்து அவள் காத்து நின்றபொழுது, அவளுடைய தவிட்டு நிறக் கண்களுக்குமேல் இருந்த அம்பைப் போல் வளைந்த புருவம் ஆச்சரியத்தால் உயர்ந்தது. அவன் ஏதாவது சொல்ல வேண்டும். ஆனால் ஒரு வார்த்தைகூட வெளியில் வரவில்லை.

"நாடாஸ்யா மிகைலோவ்னா?" என்று அவன் கேட்டான்.

"என்ன விஷயம்?"

பல நிமிஷங்கள் அவனது முகத்தை அவள் உற்றுப் பார்த்தாள். பயங்கரமான விநாடிகள்—அவன் வாழ்க்கையை நிர்ணயிக்கும் விநாடிகள் அவை.

"நான்...உனக்கு ஒரு கடிதமும், ஆசியும் கொண்டு வந்திருக்கிறேன்."

"யாரிடமிருந்து?"

"ஆஸ்பத்திரியில் இருக்கும் அலெக்ஸியிடமிருந்து."

அவள் முகம் வெளிறுவதை அவன் கண்டான்.

"அவருக்கு என்ன நேர்ந்தது?"

"அவன் குணம் அடைந்துவருகிறான். அவன் உனக்குக் கடிதம் எழுதினான்."

"ஆம், அவர் எழுதினார்."

"நல்லது அவன் என்னிடம் இன்னொரு கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கிறான்..."

அலெக்ஸி தன் பைகளைத் தடவி, ரயில்வே ஸ்டேஷனில் தான் எழுதின கடிதத்தை எடுத்தான். அவசரமாக, என்ன காரணத்தாலோ, அதை அவன் தன் மனைவியிடம் கொடுத்தான். அவளும் அதைச் சீக்கிரமாகப் படித்து விட்டுத் தன் பையில் வைத்துக்கொண்டாள்.

"கடைசிக் கடிதத்தில் அவர் கொஞ்சநாள் விடுமுறையில் வீட்டிற்கு வருவதாகத்தான் எழுதி இருந்தார். ஆனால் இப்போது அவர் மறுபடியும் போர்முனைக்குத் திரும்புவதாக எழுதி இருக்கிறார். நீங்கள் யார்? ஆஸ்பத்திரியில் நீங்கள் அவருடன் இருந்தீர்களா?"

"ஆம், நாங்கள் ஒன்றாக இருந்தோம். நாங்கள் ஒன்றாகப் போர்புரிந்தோம்; ஆஸ்பத்திரியிலும் ஒன்றாகப் படுத்திருந்தோம்."

"ஒன்றாகப் போர் புரிந்தீர்களா?"

"ஆம், அதே...அதே டாங்கிப் படையில். அவனுக்குச் சிறுகாயம் பட்டது.

"உங்களுக்கு?"

"நான் எரிக்கப்பட்டதை நீ காணவில்லையா? ஆனால் அவர்கள் என்னைக் காத்தார்கள்." இதற்குள் கூட்டுப் பண்ணை விவசாயிகள் நாஸ்டியாவிடம் உடனே முடிவு செய்யவேண்டிய ஒரு விஷயத்துடன் வந்தார்கள். அவசியமான யோசனைகளை அவள் உடனே கூறிவிட்டு அலெக்ஸி பக்கம் திரும்பினாள்.

"தோழரே, நீங்கள் இப்பொழுது எங்கே போகிறீர்கள்?" என்று அவள் கேட்டாள்.

"வீட்டிற்கு...டான்பாசுக்கு. கடிதத்தைக் கொடுக்கவும், வாழ்த்தைத் தெரிவிக்கவும்தான் நான் உங்கள் ஊருக்கு வந்தேன்."

"நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். காலம் எப்படியிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் நாம் பேசவேண்டும். நீங்கள் வீட்டிற்கு வந்து சிறிது நேரம் இளைப்பாற மாட்டீர்களா?"

"வந்தனம். நான் இப்போது ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகிறேன். சாயங்கால வண்டியைப் பிடிக்கலாம்"

"அடுத்த வண்டி வரும் நேரம்வரையில் தாங்கள் இங்கேயே தங்கலாமே. நான் தங்களை நேரே

அழைத்துச் செல்கிறேன். பக்கத்தில்தான் இருக்கிறது.''

"நான் ஏற்கனவே உன் வீட்டிற்குச் சென்று வந்து விட்டேன்.''

" அப்படியானல் ரொம்ப நல்லது. நான் காரியாலயத்திற்குப் போகிறேன். நீங்களும் என்னுடன்கூட வரலாமே. போகும்பொழுது பேசிக்கொண்டே போகலாம்.''

வழியிலே பேச அவர்களுக்கு அதிக நேரம் கிடைக்கவில்லை. ஏனெனில் வழியில் பலர் அவர்களைக் குறுக்கிட்டார்கள். அவர்களை அணுகின பலர் அவனுக்குத் தெரிந்தவர்கள். முதன் முறையாக, யுத்த காலத்தில், அவன் தன் சொந்த ஜனங்களிடையே அந்நியனாக விளங்கினான். அவன் நாஸ்டியாவின் முகத்தைப் பார்த்தான். மீண்டும் அவள் முகம் ஜீவ களை நிறைந்து, தெளிவுடன் விளங்கிற்று. அவள் கண்கள் பிரகாசித்தன. மதுரமான, ஆனால் உறுதியான புன்னகை அவள் இதழ்களிலே பூத்தது. அவன் இதயத்தை அழுத்திக் கொண்டு இருந்த துக்கத்தை ஓர் இன்ப அலை துடைத்து மறைத்தது.

காரியாலயத்திலே, வர்ணம் தீட்டப்பெற்ற தன் படத்தை அவன் கண்டான். சந்தோஷம் நிறைந்த இளம் வதனம் அது. அங்கும் இங்கும் தொங்கும் ரிப்பன் வேலைப்பாடு கொண்ட அந்தப் படம்-சிவந்த கன்னம், சுருட்டை மயிர், முதலியவற்றுடன் வசீகரமாக விளங்கிய அவன் முகம் — இப்போது அவனைப் பார்த்துப் புன்னகைப் புரிந்தது.

" இதோ, அல்யோஷாவின் தோழர். அவர்கள் இருவரும் ஒன்றுகப் போராடினார்கள் '' என்று கூட்டுப் பண்ணை விவசாயிகளிடம் அவனை அறிமுகப் படுத்தி நாஸ்டியா கூறினாள்.

கை குலுக்கவும், கேள்விகள் கேட்கவும் எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்களில் பலரை அவனுக்கு நன்ருகத் தெரியும். கிரியாஷ் மீண்டும் அங்கே வந்தான்.

"உன் முகம் ஏன் சில இடங்களில் மாறுபட்டு இருக்கிறது, தோழா?" என்று அவன் கேட்டான். ஆனல் கிழவனின் வாயிலிருந்து இந்தக் கேள்வி வெளி வருவதற்கு முன்னரே, அல்யோஷா பெரும்புகழ் அடைந்த அந்தப் போரைப்பற்றிச் சொல்லும்படி அங்கே இருந்தவர்கள் அலெக்ஸியைப் பல கேள்விகள் கேட்டார்கள். தனக்குத் தெரிந்ததை அவன் சொன்ஞன். ஆனல் அது மிகவும் குறைவாக இருந்தது. அதைப் பற்றித் தன்னைவிட அங்கு இருப்பவர்களுக்கு அதிகமாகத் தெரியும் என்பதை அவன் எளிதில் உணர்ந்தான். விடுபட்ட விஷயங்களை அவர்கள் பூர்த்தி செய்தார்கள் என்பது மட்டுமல்ல, சில இடங்களில் அவர்கள் அவன் கூறுவதையும் திருத்தினர்கள். எதிரிகளை முறியடித்து, சிப்பாய்கள் நதிக் கரையில் இறங்கத் தான் எவ்வாறு இடம் அளித்தான் என்பதை அவன் சொல்ல முயன்றபொழுது, அது குறைபாடு உடையதாகவும், குழப்பமானதாகவும் இருந்தது. அவன் டாங்கி மோதின நீர்க் கால் எங்கே இருந்தது? அவன் சொன்ன மாதிரி எதிரிகளின் டாங்கிகள் அவ்வளவு குறைவாக இல்லை. எதிரிகளின் டாங்கிகள் எத்தனை இருந்தன என்பது கிராம வாசிகளுக்குத் தெரியும். வீரனின் சாதனைகளை அவன் வர்ணித்தபொழுது அது சாதாரணமானதாகவும், சுவாரசியம் இன்றியும் இருந்தது. கிராம வாசிகளுக்கு அவன் வர்ணனை திருப்தி அளிக்கவில்லை என்பது தெளிவாயிற்று. அதனல் பாவெல் கதையைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தான். அவன் வர்ணனையும், விளக்கமும் தெளிவாகவும் பெருமையுடையதாகவும் இருந்தன; கேட்பவர்கள் கண் முன்னே அந்தக் காட்சி தோன்றிற்று. அவர்கள்

கவனமாகக் கேட்பதையும், நாஸ்டியாவின் வெளுத்த கன்னங்களையும், பிரகாசிக்கும் அவள் கண்கள் பாவெலைப் பார்ப்பதையும் அலெக்ஸி கண்டான்.

"இப்படித்தான் அது நடந்தது" என்று அவன் அலெக்ஸி பக்கம் திரும்பி சொன்னான், அவன் குரலிலே மறுப்பும், அவநம்பிக்கையும் தொனித்தன.

நீண்ட காலத்திற்கு முன் நாஸ்டியாவைத் தானும், பாவெலும் காதலித்த காலம் அலெக்ஸியின் நினைவிற்கு வந்தது. அவள் அலெக்ஸியை மணந்தாள்; ஆனால் பாவெல் மணம் செய்து கொள்ளவே இல்லை. எனினும் தன் தோல்விக்காக அவன் அலெக்ஸியிடம் வருத்தம் கொள்ளவில்லை. அதற்கு மாறாக, மணத்திற்குப் பிறகு அவர்கள் நட்பு அதிகரித்தது. பண்ணையிலே அவர்கள் இன்னும் அதிக நேச பாவத்துடன் வேலை செய்தனர்.

"சம்பவங்களை வெளியில் இருந்து பார்ப்பவன் பல நிகழ்ச்சிகளைக் காண்கிறான்" என்றான் அலெக்ஸி. உருக் குலைக்கப்பட்ட அவன் வதனத்திலே கேலிப் புன்னகை மிக்க கஷ்டத்துடன் தோன்றுவதை அங்கே இருப்பவர்கள் கண்டார்கள். அது அவர்களுக்குச் சிரமமாக இருந்தது.

"எங்கள் மீது தயவு கூர்ந்து வருத்தம் கொள்ளாதே, தோழா" என்று பாவெல் மிருதுவாகக் கூறினான். "நாங்கள் உன் சாதனைகளையும், சாகஸத்தையும் பெரிதும் பாராட்டுகிறோம். நீ போராட்டத்தின் மத்தியில் இருந்தாய் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் அலெக்ஸி புகழ்பெற்ற வீரன். அவனுடன் வாழ்ந்து அவனை அறிந்த எங்களுக்கு—குறிப்பாக என்னைப் போன்ற, அவனுடைய நெருங்கின நண்பர்களுக்கு — அவன் சாதனை மிகவும் பெருமை அளிக்கிறது. அதைக் குறைவு படுத்த நாங்கள் அனுமதிக்க மாட்டோம்!"

"ஆனால் அவர் அதைக் குறைவுபடுத்த விரும்பவில்லை. தம் டாங்கில் இருந்தபடியே எதைக் காண முடிந்ததோ

அதைத்தான் அவர் சொன்னார். அவர் தம் பெருமையைப் புகழ்ந்துகூற விரும்பாமல் இருக்கலாம். அவரும் அந்தப் போரில் ஈடுபட்டவர் அல்லவா?'' என்று நாஸ்டியா குறுக்கிட்டுக் கூறினாள்.

''தன்னடக்கம் அவசியமான இடத்தில் நல்லது தான். ஆனால் பெருமைப்படக்கூடிய விஷயம் இது'' என்று அலங்கரிக்கப்பட்ட படத்தைப் பார்த்துக்கொண்டே பெருமையுடன் கூறினான் பாவெல்.

ஆனால் இதற்குள் ஆயிரம் விஷயங்களைப்பற்றி விவாதிக்கக் கூட்டுப்பண்ணை விவசாயிகள் நாஸ்டியாவைச் சூழ்ந்து கொண்டனர்.

அலெக்ஸி ஒருவருக்கும் தெரியாமல் காரியாலயத்திலிருந்து வெளியேறினான். அவன் உள்ளம் இறுகி வெதும்பியது. வீதியில் நடந்து செல்லும்போது அவன் கண்கள் எதையும் காணவில்லை; காதுகள் எதையும் கேட்கவில்லை. அவன் பெரிதும் விரும்பின—ஆனால் பயந்த, அந்தச் சந்திப்பு முடிந்து விட்டது! ஆனால் அவன் எதிர் பார்த்த சந்திப்பு எது? அதை அவன் எவ்வாறு கற்பனை செய்திருந்தான்? தன் அன்னையும், மனைவியும் தன்னைத் தெரிந்து கொள்ளுவார்கள்; முதலில் கோரத்தால் கண்ணீர்ப் பெருக்கு எடுத்து ஓடும். பிறகு அவள், இளமை கொஞ்சும் அவள், அழகை நேசிக்கும் அவள், தன் வாழ்க்கை முழுதும் ஒரு பயங்கரப் பேயுடன் பிணைக்கப் படுவாள்!......'இதைத் தன்னால் சகிக்க முடியாது' என்று அவள் ஒளிவு மறைவின்றி உடனே சொல்லிவிடுவாளா? இல்லை, தன்னைக் கட்டுப் படுத்திக்கொள்ள அவள் முயல்வாளா? அப்படியானால் நிச்சயமாக, அவன் அதற்குச் சம்மதிக்க மாட்டான்.

''நான் போய்விடுவேன், எனக்காகவே, சுதாவாகவே, நான் போய்விடுவேன்! அப்படியானால் நான் எதற்காக அங்கே செல்லவேண்டும்?''

வீட்டிற்குப் போவதில்லை யென்று அலெக்ஸி முடிவு செய்தான். ஆனால் அதே நிமிடத்தில் தன் குடும்பத்தை யும், வீட்டையும் பார்க்க வேண்டும் என்ற கட்டுக்கு அடங்காத ஆசை, அவன் வாழ்க்கை ஜீவனின் ஒரு பகுதியே போன்ற, அவா அவன் முடிவுக்குக் குறுக்கே வந்து அதை மறித்தது. ஆஸ்பத்திரியை விட்டு வெளிப்பட்டு வீட்டிற்குச் செல்ல அவன் வேகமாக ஏற்பாடுகள் செய்தான். உடனே தன் மனைவியின் துக்கமும், தன் அன்னையின் வருத்தமும், குழந்தைகளின் பயமும் வெறுப்பும் அவன் மனக் கண்முன் தோன்றின. "நான் போமாட்டேன்" என்று அவன் முடிவுசெய்தான். ஆனால் அடுத்த நாள் அவன் தன் ஊருக்குச் செல்லும் ரயிலில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அன்று அந்தக் கிராமத்தின் மத்தியிலே அவன் நடந்த பொழுது, அந்தப் பயங்கரமான வேளையை ஒத்தி வைப் பதற்காவே போலும் அவன் மெதுவாக நடந்தான். அவன் போர் முனைக்குப் போகும்போது இவ்வளவு கஷ்டத்தை யும், இவ்வளவு பயத்தையும் அடையவில்லை!

ஆனால் இறுதியில் அவன் எதை எதிர்பார்க்க வில்லையோ, அதுதான் நடந்தது. அவன் தன் வீட்டிற் குள்ளே நுழைந்தான்; தன் குடும்பத்தைச் சந்தித்தான். விதி அவனுக்கு எளிதான வழியைக் காட்டிற்று; அவசியம் அற்ற துன்பத்தை எல்லோரும் அனுபவிப்பதைத் தடுக் கும் வழியைக் காட்டிற்று. அவனைச் சோதனைக்கு உட் படுத்த வேண்டிய அவசியம் இல்லை! அந்தப் பேய் அடியை ஏற்றுக்கொண்டு, யாருக்கும் தெரியாமல் அவன் மறைந்து விட வேண்டும். அப்படிச் செய்தால் அது எல்லோருக்கும் எளிதாக இருக்கும். அது அவன் தாயாருக்குக் கஷ்டமாக இருக்கும். அவள் தன் மரணம் வரையில் தன் குமாரனைப் பார்க்கவேண்டும் என்று ஏங்குவாள். ஆனால் அது நாளடைவில் எளிதாகப் போய்விடும். குழந்தைகள்

வளரும்; தன் மனைவி வேறு யாரையாவது—ஒருகால் அதே பாவெலை—சந்திப்பாள்;...அது அவளுக்கு நன்மை பயக்கும்.

அவன் கிணற்றைக் கடந்தபொழுது ஒரு சிறுவன் கூவினான்.

"சிப்பாய், என் தந்தையிடமிருந்து வந்திருப்பது நீ தானா?"

ஸ்டியோபா!...இவன் தான் ஆறு வயசுச் சிறுவன்... ஆனால் காற்றால் அடிபட்ட அவன் முகம் மெலிந்திருந்தது. அவன் அதரங்களிலே அழகிய மெல்லிய கோடுகள் தென் பட்டன. அலெக்ஸி பிரிந்து செல்லும்பொழுது அவன் தன் தந்தையைக் கட்டிக்கொண்டு கண்ணீர் பெருக அழுது கொண்டே, "அப்பா, போரிலிருந்து விரைவில் திரும்பிவிடு!" என்று அவன் சொன்னபொழுது ஏற்பட்ட அந்தக் கோடுகள் இன்னும் இருக்கின்றன போலும்!

அலெக்ஸியும் இந்தச் சிறுவனும் வீட்டிற்குச் செல்லும் பாதையில் திரும்பினார்கள்.

"நான் உன் தந்தையிட மிருந்து வந்தேன் என்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான் அலெக்ஸி.

"ஏன்? கோரமான முகத்துடன் ஒருவன் வந்திருக் கிறான் என்று பாட்டி சொன்னாளே!"

"நான் அப்படிப் பயங்கரமாகவா இருக்கிறேன்?"

"இல்லை. நாஜிகள் மாத்திரம்தான் பயங்கரமானவர் கள். அவர்கள்தான் இப்படிச் செய்தார்களா?"

"ஆம், நாஜிகள் தான்."

"நீ அப்பாவைப் பார்த்தாயா?"

"ஆஹா, நான் பார்த்தேன்."

"அப்பாவுக்குக் கிடைத்த பதக்கத்தையும், ஆர்டரை யும்?"

"ஆம்."

"உனக்கும் ஒரு ஆர்டர் கிடைத்திருக்கிறது, இல்லையா? என் அப்பா சீக்கிரம் திரும்பி வந்துவிடு வாரா?"

"ஆம். நீ அப்பாவைப் பார்க்க விரும்புகிருயா?"

"நிச்சயமாக."

"அப்பாவை வழி அனுப்பினது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?"

"நீ என்ன நினைக்கிருய்? நான் அழுதேன். அப்பா என்னை உயரத் தூக்கி, ரொம்ப உயரத் தூக்கி, ஒரு சுற்றுச் சுற்றிஞர். ஆஞலும் நான் அழுதுகொண்டே இருந்தேன். அவர் ஒரு வீரராகப் போகிருர் என்பது எனக்குத் தெரியாது. எல்லோரும் அழுதார்கள். நடாஷா மாத்திரம் அழவில்லை. ஏனெனில் யுத்தம் என்ருல் என்ன என்பது அவளுக்குத் தெரியாது. ஜெர்மானியர் இங்கே இருந்தபொழுதும் அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. உனக்குத் தெரியுமா? அம்மா பார்ட்டிசான்களைப் பற்றி ஏதும் சொல்ல மறுத்தபொழுது ஒரு ஜெர்மானியன் தன் துப்பாக்கியை நாடாஷாவுக்கு நேரே நீட்டிஞன். வாயில் விரலைப் போட்டுக்கொண்டு அவள் அங்கேயே நின்ருள். அசடு இல்லையா! ஜெர்மானியனின் துப்பாக்கியை அம்மா அந்தப் பக்கம் தட்டி யிருக்கவில்லை யென்ருல், விரலைச் சப்ப அவன் அவளுக்குக் கற்றுக் கொடுத்திருப்பான்!"

அவர்கள் பேசிக்கொண்டே நடந்தார்கள். தன் அன்னை எவ்வாறு ஜெர்மானியன் துப்பாக்கியைத் தட்டிஞள்; கிரியாஷின் உதவியுடன் எவ்வாறு அந்த ஜெர் மானியனைக் கட்டி அவன் வாயில் துணியைத் திணித்தாள்; அவனை எவ்வாறு ஓர் அறையிலிட்டுப் பூட்டிஞள்; பிறகு ஸ்டியோபாவையும், நடாஷாவையும் அழைத்துக் கொண்டு எப்படி காட்டிற்கு ஓடிஞள் என்பன போன்ற விஷயங்களை விரிவாக விளக்கிஞன். செம்படை வரும் வரையில் அவர்கள் காட்டிலே பார்ட்டி

சான்களுடன் எத்தகைய வாழ்க்கையை நடத்தினர்கள் என்பதையும் ஸ்டியோபா எடுத்துச் சொன்னன்.

வீட்டை அடைந்ததும் அவன் தந்தை அனுப்பின பரிசை ஸ்டியோபாவிடம் கொடுத்தான் அலெக்ஸி. பிறகு அவர்கள் இருவரும் தோட்டத்திற்குச் சென்றார்கள். பூமி உலர்ந்திருந்தது. குளத்திற்கு அப்பால் கூட்டுப் பண்ணையின் புஷ்பத் தோட்டத்திலே மொக்குகள் மலர ஆரம்பித்து விட்டன. குழந்தைகள் சிறு குழிகள் தோண்டிப் பூச் செடிகள் நட்டிருந்தனர். பூந்தோட்டத்துக்கு அப்பால் அகன்ற வயல்கள் அடிவானம் வரையில் நீண்டு பரந்து கிடந்தன. ஒரு புறத்திலே மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. தூரத்திலே வசந்த காலக் காற்று வீசிக்கொண்டு இருந்தது. அங்கங்கே கலப்பை கொண்டு உழுது வந்தனர். இரண்டு வருடங்களுக்கு முன் அந்த வயல்களிட மிருந்து, அவன் விடைபெற்றுப் பிரிந்த பொழுது அவைகளைத் தங்கநிறமான கோதுமைப்பயிர் மூடி இருந்தது. அவன்—சிறந்த ஸ்டாக்கனேவைட்—தனது நீண்ட, அபாயகரமான பிரயாணத்தை ஆரம்பித்த பொழுது மணிகள் நிறைந்த கதிர்கள் காற்றிலே அசைந்து அவனுக்குக் குனிந்து வணங்கி விடை அளித்தன. தனக்கு நன்கு பழக்கமான வயல்களுக்குச் செல்லும் பாதையை அவன் அடைந்தான். அவை அவற்றின் ஊழியனும், யஜமானனும் ஆன அவன் வரவுக்குக் காத்திருந்தன. வயல்களும் அவற்றின் சொந்தக்காரனும் அங்கே நேருக்கு நேர் நின்றார்கள்; ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டார்கள்.

ஓயாமல் தன் தந்தையின் வீரச் செயல்களைப் பற்றிச் சொல்லச் செய்தான் ஸ்டியோபா. அலெக்ஸி அதிகமாக ஒன்றும் தெரிவிக்கவில்லை; ஆயினும் ஸ்டியோபாவைக் கடைக்கண்ணால் பார்த்தபொழுது அவன் கன்னங்கள் சிவந்திருந்தன; கண்களில் ஒளி வீசிற்று.

அலெக்ஸி முடித்தபோது, "நான் பழி வாங்குவேன்" என்று கூறிவிட்டுச் சிறுவன் 'ஸ்டியோபா தன் முகத்தை அலெக்ஸியின் தேகத்தில் புதைத்துக் கொண்டான்.

அலெக்ஸிக்கு அந்த இடத்தை விட்டு நகரவே மனம் வரவில்லை. அடி பெயர்த்து வைக்க அவன் கால்கள் மறுத்தன. அவன் ஒரு மண்வெட்டியை எடுத்துத் தோட்டத்தில் செடிகள் நடுவதற்குக் குழிகள் தோண்டினான். தோண்டிய மண்ணின் நறுமணத்தை முகர்ந்த அவன் தலை சுழன்றது. வீணில் தான் ரத்தம் சிந்தவில்லை, தனது தியாகம் வீணாய்விடவில்லை என்ற எண்ணத்தால் அவன் உள்ளம் விம்மியது. அவன் பரிசு இதோ இருக்கிறது! தன் மார்புடன் அவனை அணைத்துக்கொள்ள அந்தப் புண்ணிய பூமி காத்திருக்கிறது. அவனை வேறு யாரும் தெரிந்து கொள்ளாமல் இருக்கலாம்; ஆனால் அது அவனைத் தெரிந்துகொள்ளும். அது அவனை ஒதுக்காது, அவனைக் காட்டிக் கொடுக்காது. அவன் யாருக்கும் தெரியாமல், அன்னியனாக வாழ்வான்; ஒரு தேனீயைப் போன்று அவன் தன் சொந்த ஊரின் காற்றை உட்கொள்ளவே, அதன் ஓசையைக் கேட்கவே, பூந்தோட்டத்து மலர்கள் மலர்வதைக் காணவே ஆசை கொண்டான். அவன் ஒரு மனிதன்; நிலமும், ஜனங்களும் அவன் உழைப்பை வேண்டுகிறார்கள்.

அவன் தாய் அவனிடம் வந்தாள்.

"மகனே, கதவில் நின்றுகொண்டு நான் உன்னைக் கவனித்தேன். நீ அல்யோஷாவைப் போன்றே இருக்கிறாய். உன் முதுகின் தோற்றம்; உன் அசைவு எல்லாம் அப்படி. உனக்கு மனைவி, மக்கள் இருக்கிறார்களா?"

"ஆஹா, எனக்கு அன்னையும் இருக்கிறாள்......"

"அவளுக்கு உன்னைக் காணும் நாள் சந்தோஷகரமான நாளாக இருக்கும்; அவள் கண்ணீரும் விடுவாள், பாவம்."

"ஆனால் நான் அவளிடம் போகக் கூடாது. அவள் தன் வாழ்நாளை அமைதியாகக் கழிக்கட்டும்."

"ஆனால் உன் ஹிருதயம் துக்கத்தால் உலர்ந்திருக்கும் பொழுது அவள் ஹிருதயம் எப்படிப்பட்ட அமைதியாக இருக்க முடியும்?

"ஒரு விதத்தில் நல்லதுதான்—ஹிருதயம் வெடித்து விடுவதை விட உலர்வது நல்லது அல்லவா?"

"அப்பா, எது சிறந்தது என்பது உனக்கு எப்படித் தெரியும். இந்த விதிக்கு ஆளாக்க உன்னை நாங்கள் வளர்த்திருக்கலாகாது" என்று அவள் வருத்தத்துடன் கூறினாள்.

"எங்களை வளர்த்தது எங்கள் நாடு—அதன் பெருமைக்காகவும், விமோசனத்திற்காகவும்" என்றான் அலெக்ஸி.

ஆனால் கிழவி பெருகிவரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, "வா, மகனே, சாப்பிடலாம்" என்று மாத்திரம் கூறினாள்.

"நாஸ்டாஸ்யா மிகைலோவ்னா எங்கே?"

"அவள் சாதாரணமாக மாலையில்தான் வருவாள்—சில நாட்களில் அவள் மத்தியானம் சாப்பிடுவதே இல்லை."

"சரி. என் ஞாபகார்த்தமாக நான் ஓர் ஆப்பிள் செடி நட்டுவிட்டு இதோ வந்துவிடுகிறேன்" என்றான் அலெக்ஸி.

அன்னை போய்விட்டாள். செடியை நட அவன் ஒரு குழி தோண்டிப் பாத்தியும் கட்டினான். பொழுது சாயும் வேளையில் பாவெல் பின்தொடர நாஸ்டியா அங்கே வந்தாள். அங்கே வீட்டின் பின்புறத்துக் கொட்டகையில் ஒரு மூலையில் குப்புறக் கிடந்த தொட்டிமீது அவர்கள் உட்கார்ந்து நீண்ட நேரம் பேசிக்கொண்டு இருந்தார்கள். அவள் சிரிப்பது அவனுக்குக் கேட்டது. அவர்கள் அவனைப் பார்க்கவில்லை. பிறகு பாவெல் சென்றான்; நாஸ்டியா வீட்டிற்குள் சென்றாள். சிறிது நேரத்திற் கெல்லாம்

அலெக்ஸியைச் சாப்பிடக் கூப்பிட ஸ்டியோபா ஓடி வந்தான். அலெக்ஸி உள்ளே நுழைந்தபொழுது நாஸ்டியா அவசரமாகச் சாப்பிட்டுக்கொண்டு இருந்தாள். அலெக்ஸி ஜன்னல் பக்கம் சென்றான். சிலர் வீதியிலே செங்கல் சுமந்து சென்றனர். அது எங்கிருந்து கிடைத்ததென்று அலெக்ஸி கேட்டான்.

"ஏன்? நமது சூளையிலிருந்துதான். நாங்கள் அதைச் சீர்ப்படுத்தி விட்டோமே" என்றாள் நாஸ்டியா.

"ஆகவே நீங்கள் மும்முரமாகத்தான் வேலை செய்கிறீர்கள்" என்று அலெக்ஸி அவள் பக்கம் திரும்பிக் கூறினான். அவளது மருண்ட, ஆழமான பார்வை அவன் மீது விழுந்தது. அவள் எதையோ நினைத்து மனச்சாந்தி கொள்ளாமல் சந்தேகத்தோடுதான் நோக்கினாள் போலும்.

அலெக்ஸியின் தேக நிலையைப் பற்றியும் அவன் வாழ்க்கையைப் பற்றியும் அவள் பல விவரங்களைக் கேட்டாள்.

"நீ ஏன் அவனுக்கு அடிக்கடி கடிதம் எழுதவில்லை?"

"எனக்கு நேரம் கிடைக்கும்பொழுது நான் எழுதுகிறேன்" என்று அவள் துடுக்காகக் கூறினாள்.

"நீ அதிகம் எழுதுவதில்லையே."

"எனக்கு எவ்வளவு வேலை இருக்கிறது என்பதை நீங்கள் தான் பார்க்கிறீர்களே! நேரம் கிடைப்பதே இல்லை."

ஏதோ ஒன்று அலெக்ஸியின் தொண்டையை அடைத்தது. 'ஆனால் தோட்டத்திலே உட்கார நேரம் இருக்கிறது!' என்று அவன் மனதிற்குள்ளே கூறிக் கொண்டான். மேலே பேசும்போது அவன் குரலில் வழக்கத்தை விட அதிகமான கரகரப்புத் தொனித்தது.

"உன் உபசரணைக்காக வந்தனம். ஸ்டேஷனுக்குச் செல்ல நேரமாய் விட்டது."

"இந்த அகாலத்தில் நீங்கள் ஏன் போகவேண்டும்? வெளியே பாருங்கள், மாலைநேர மாகிவிட்டது. இரவு எங்களுடன் தங்கிவிட்டுப் போகலாம்" என்று நாஸ்டியா அன்புடன் கூறினாள்.

வாஸ்தவமாகச் சூரியன் பரந்த புல்வெளியிலே மறைந்துகொண்டு இருந்தான். பசும் புல்லின் இளந்தளிர் சிவப்பு ஒளியுடன் பிரகாசித்தது. புதர்களிலே பறவைகள் கீச்சுக் கீச்சென்று மாலை விவாதத்தை ஆரம்பித்தன. ஆனால் அலெக்ஸி பிரயாணத்திற்குத் தயாராகத் தன் பையைக் கட்ட ஆரம்பித்தான். அப்போது ஸ்டியோபா பையைப் பிடித்துக்கொண்டு இரவு தங்கள் வீட்டில் தங்கி, தந்தையைப்பற்றி அதிக விவரங்கள் சொல்லும் படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

"இதோ பார்த்தீர்களா? நானும் அவரைப்பற்றிப் பேச வேண்டும். தயவுசெய்து இன்று இரவு மாத்திரம் தங்குங்கள்" என்று அன்புடன் கூறிவிட்டு, "நான் விடை தரமாட்டேன்" என்று சொல்லிகொண்டே அப்பால் சென்றாள் நாஸ்டியா.

அவள் போனபிறகு ஸ்டியோபா கதையை எதிர் பார்த்துக்கொண்டு அவனை நெருங்கி உட்கார்ந்தான். பிறகு அவர்கள் தோட்டத்திற்குச் சென்றார்கள். மங்கும் ஒளியிலே போட்டியிட்டுப் பாடுவதைப் போன்று, பறவைகள் பல ராகங்களில் பாடின. கிராமத்தின் எல்லைப் புறத்திலே சின்னஞ் சிறிய காக்கைகள் கத்திக்கொண் டிருந்தன. கீழே அருவி சலசலவென்று ஓடிக்கொண் டிருந்தது. வெகு தூரத்திலே வயல்களுக்கு மேலே சந்திரன் உதித்தான். அங்கே சிறிது நேரம் நின்றுவிட்டு அலெக்ஸியும், ஸ்டியோபாவும் படுக்க நேரமாய் விட்டதென்று முடிவு செய்து வீட்டிற்குள் சென்றனர். அவன் அன்னை அவனுக்கு ஒரு புறத்திலே மெத்தை விரித்திருந் தாள். அவன் உடனே தூங்கி யிருப்பான். ஆனால் அவன்

படுத்ததும் நாஸ்டியா உள்ளே வருவதையும் படுக்கச் செல்வதையும் அவன் அறிந்தான். பிறகு யாரோ ஜன்னலைத் தட்டினார்கள். அவள் ஜன்னலைத் திறந்தாள். தாழ்ந்த குரலில் பாவெல் அவளுடன் ஏதோ பேசுவதைக் கேட்டான் அலெக்ஸி. அவர்கள் எதைப் பற்றியோ சிறிது நேரம் மெதுவாகப் பேசினார்கள். நாஸ்டியா மீண்டும் ஜன்னலை மூடினாள். ஆனால் அலெக்ஸியால் தூங்க முடியவில்லை. அவன் மேலே இருண்டு இருந்த உச்சி மேட்டைப் பார்த்துக்கொண்டு படுத்திருந்தான். அவன் ஹிருதயத்தை மீண்டும் பெரும் வேதனை பிளந்தது. வீட்டிலே அவ்வளவு துன்பம் அவனுக்குக் காத்திருந்தது. அவன் ஏன் திரும்பினான்? போர் முனையிலே டாங்குடன் அவனும் ஏன் எரிந்து போகவில்லை? அவனுக்குச் சொந்தமாய் இருந்த மகிழ்ச்சி, இன்பம் ஆகியவைகளில் பாக்கி இருப்பது இதுதான்! போராடாமல் அவன் இதை ஏற்றான்; சந்தேகப்படாமல் அவன் இதை அங்கீகரித்தான். ஏனையோர், இதே பாவெல் உட்பட, நாஸ்டியாவை அடைய ஆசைப்பட்டனர். ஆனால் அவள் அவனை—அலெக்ஸியை—நீண்ட காலமாகக் காதலித்தாள். இன்பம் அவர்கள் இருவரையும் பார்த்துப் புன்னகை புரிந்தது......ஆ! உடனே ஓட வேண்டும்; ஓடிவிட வேண்டும்! படுக்கையில் இருந்து எழுந்து அவன் கூர்ந்து கவனித்தான். ஆனால் நாஸ்டியாவும் விழித்துக்கொண்டுதான் இருந்தாள் போலும். அவளும் படுக்கையில் அங்கும் இங்கும் புரள்வது அவனுக்குக் கேட்டது. ஒரு நீண்ட பெருமூச்சு, ஒரு முனகல், அவள் ஹிருதயத்திலிருந்து வெளிப்பட்டது. யாருக்கும் தெரியாமல் மறைவது அசாத்தியம். தூங்கும் அன்னையும், குழந்தைகளும் மூச்சுவிடும் சத்தம் அவனுக்குக் கேட்டது. அவர்களை எதிர்கொண்டு நிற்பது என்ன? குழந்தைகளைப் பற்றின எண்ணம் எழுப்பின வேதனை

யல்ல அது. அந்த இரவைப் போன்று முடிவு அற்றுக் காணப்படும் ஒரு மந்தமான உணர்ச்சி, அரிக்கும் வேதனை, அவனை ஆட் கொண்டது. இறுதியில் வசந்தகால இரவு முடிந்தது; உஷா காலம் தன் ஒளியைப் பரப்பிற்று. பறவைகள் விழித்து எழுந்து தூக்கக் கலக்கத்தில் பாடின. வெளிச்சம் அதிகரித்தது. பிறகு அடிவானத் திலே தங்கமயமான சூரிய பிம்பம் தெரிந்தது. அதன் கிரணங்கள் ஜன்னல் வழியே அவனை எட்டிப் பார்த்தன. படுக்கையிலிருந்து எழுந்திருக்கும் நேரமாய் விட்டது.

முதலில் அன்னை எழுந்தாள். அவளைத் தொடர்ந்து நாஸ்டியா எழுந்தாள். அலெக்ஸி தன் அறையிலிருந்து வெளியில் வந்து அவளை வரவேற்றான்.

“ஏன் இவ்வளவு சீக்கிரம் எழுந்திருந்தீர்கள்? இன்னும் சிறிது நேரம் நீங்கள் தூங்கியிருக்கலாமே” என்று கேட்டாள் நாஸ்டியா.

“ஒருவன் வீடு வெகு சமீபத்தில் இருக்கும் பொழுது பிறர் வீட்டில் தூங்குவது அவ்வளவு எளிதல்லவே” என்று அன்னை பரிவுடன் கூறினாள், பெருமூச்செறிந்து கொண்டே.

“நாங்கள் வண்டியில் உங்களை ஸ்டேஷனுக்கு அழைத் துச் செல்லுகிறோம்” என்றாள் நாஸ்டியா.

“எவரையும் வண்டியில் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லும் நேரம் அல்ல இது” என்றான் அலெக்ஸி.

“எங்களைப் பார்க்கப் பன்னிரெண்டு மைல் பிரயாணம் செய்ய உங்களுக்கு அவகாசம் இருக்கவில்லையா? எப்படி யாயினும் எனக்கும் ஸ்டேஷனில் வேலை இருக்கிறது” என்று சொல்லிவிட்டு, அன்னையைப் பார்த்து, “இரவில் பாவெல் இங்கே வந்து ஒரு செய்தி தெரிவித்தான்” என்று கூறினாள். “அவன் ஜில்லா காரியாலத்திற்குப் போகவேண்டி யிருக்கிறது. அவசரமாக ஏதாவது

சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்யுங்கள். அவன் குதிரையுடன் எந்த நேரத்திலும் இங்கே வந்துவிடலாம்.''

நாஸ்டியாவும், அலெக்ஸியும் உட்கார்ந்து சாப்பிட்டனர், அவசரமாக. எனவே அவர்களுக்குப் பேச நேரம் கிடைக்கவில்லை. அவன் அன்னை வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டும், அலெக்ஸியின் பையில் உணவுப் பொருட்களைத் திணித்துக் கொண்டும் இருந்தாள்.

ஸ்டியோபா எழுந்துவிட்டான்.

"போய் வருகிறேன், ஸ்டியோபா. என்னை மறந்து விடாதே. நாம் என்றைக்காவது மீண்டும் சந்திக்க நேரலாம்'' என்றான் அலெக்ஸி.

''நீ எதற்காகப் போகிறாய்?'' என்று வெறுப்புடன் கேட்டான் ஸ்டியோபா.

"எதற்காகவா? இங்கேயே எப்பொழுதும் அவர் தங்கப் போகிறார் என்று நீ நினைத்தாய்?'' என்று கேட்டுக்கொண்டே சிரித்தாள் நாஸ்டியா.

"ஆம், தந்தை திரும்பி வரும் வரையிலாவது அவர் தங்கட்டும்'' என்று பிடிவாதமாகப் பதில் கூறினான் ஸ்டியோபா.

''தந்தை வரும் வரையில் நீ சௌக்யமாக வளர்ந்து கொண்டே இரு'' என்றான் டிலெக்ஸி.

''தந்தையைப்போல் ஒரு வீரனாக வளர வேண்டும்'' என்றாள் பாட்டி.

''சரி, நாஸ்டாஸ்யா மிகைலோவ்னா; நான் போய் வருகிறேன். உன் அன்புக்கும், உபசரணைக்கும் வந்தனம்.''

''நீங்கள் கொண்டுவந்த நற்செய்திக்காக வந்தனம்; சிரமத்தைப் பாராது இவ்வளவு தூரம் வந்ததற்காகவும் வந்தனம்'' என்றாள் நாஸ்டியா. அதைக் கூறும்போது அவள் தன் பெரிய நீலக்கண்களால் அவனைக் கூர்ந்து கவனித்தாள். அந்தப் பார்வையிலே இரக்கக் குறி

தென்படவில்லை. ஆனால் வருத்தம் கலந்த அன்பு தோன்றியது.

மீண்டும் அலெக்ஸிக்குத் தலை சுழன்றது. ஒரு புறத்திலே கட்டுக்கு அடங்காத இன்பம்: மறுபுறத்திலே அரிக்கும், வலிக்கும் துன்பம். தூங்கிக் கொண்டிருந்த சிறுமியிடம் அவன் சென்றான்: குனிந்து அவளை முத்த மிட்டான். பிறகு கட்டு மீறிக்கொண்டு வெளிவரும் துக்கத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு அவன் ஸ்டியோபா பக்கம் திரும்பினான்.

“போய் வருகிறேன், ஸ்டியோபா” என்று எவ்வளவு அமைதியாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு அமைதியாகச் சொல்லிவிட்டு, அந்தச் சிறுவனை உயரத் தூக்கி இரண்டு வருடங்களுக்கு முன் அவன் எவ்வாறு விளையாடினானோ அதேமாதிரி சுழற்றிக் கொஞ்சினான்.

“அல்யோஷா!” என்று திடீரென்று பயங்கரமான குரலில் கூவினாள் நாஸ்டியா.

தனக்கு உதவியாக ஸ்டியோபாவைப் பிடித்துக் கொள்வதைப் போல் அலெக்ஸி அவனைக் கெட்டி யாகப் பிடித்துக் கொண்டான். அவன் தலை குனிந்தான். ஆனால் நாஸ்டியா அவன் பக்கம் ஓடினாள். ஆர்டர் களும், பதக்கங்களும் நிறைந்த அவன் சட்டையைக் கிழித்தாள்; விம்மிக்கொண்டு, அவன் நெஞ்சில் தனது முகத்தைப் புதைத்துக்கொண்டு அவன் மீது சாய்ந்தாள்.

“அல்யோஷென்கா! நீங்களா......நீங்களா......என் அருமைக் கணவர்! ஆ!” என்று கூறிக்கொண்டே அவன் முகத்திலும், கைகளிலும், நெஞ்சிலும் முத்தம் இட்டாள்.

ஸ்டியோபாவும் அழுதான். அழுகையைக் கேட்டு, அவசரத்தில் கால் இடறிக் கொண்டே ஓடிவந்தாள் அன்னை. பீதியடைந்து, ஒன்றும் புரியாமல் அவள் வாசற் படியில் நின்றாள். பிறகு அவளும் திடீரென்று கூச்சல்

போட்டுவிட்டு அல்யோஷாவுக்கு அருகில் வந்து விழுந்து அவன் கால்களைக் கட்டிக்கொண்டாள்.

"என் குழந்தாய்! என் மகனே! நீ எவ்வளவு துன்பத்தை அனுபவிக்க வேண்டி யிருந்தது!"

"ஒன்றும் பாதகம் இல்லை! எல்லாம் சரியாகிவிட்டது" என்று நாஸ்டியா தாழ்ந்த குரலில் கூறினாள். "ஆனால் நீங்கள்.........நீங்கள் எங்களிடம் சொல்லவில்லையே!......இவ்விடத்தை விட்டுப் போக விரும்பினீர்களே! எங்களை மீண்டும் பிரிய நினைத்தீர்கள் அல்லவா.........?"

"என்னை நீ தெரிந்து கொள்வதை நான் விரும்பவில்லை" என்று கஷ்டத்துடன் கூறினான் அலெக்ஸி.

"குழந்தைகளை அவ்வளவு பரிவாக அவர்களின் தந்தையைத் தவிர வேறு யாரால் சீராட்ட முடியும்?" என்று நாஸ்டியா அன்புடனும் பரிவுடனும் கூறினாள்.

"நான் இல்லாமல் குழந்தைகள் வளர முடியும். ஆனால் உன்னை—இளமையிலே திளைக்கும் உன்னை—விகார ரூபம் படைத்த நான் ஏன் கெடுக்கவேண்டும்? உன் காலத்தை நான் ஏன் இருள் மயமாக்க வேண்டும்?"

நாஸ்டியா திடீரென்று அப்பால் சென்றாள். ஒரு நிமிடம் பேசாமல் இருந்துவிட்டு அவனையே உற்றுப் பார்த்தாள். பிறகு மெதுவான, ஆனால் கடுமையான குரலில் அவள் கூறினாள்:

"என்னைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்திற்காக வந்தனம், அல்யோஷா........என்னைப் பற்றி நீங்கள் கொண்ட கருத்து இதுதானாக்கும்? உங்கள் அழகைத்தான் நான் காதலித்தேன் என்று எண்ணினீர்களா?"

"படத்திலே நான் அழகாக இருக்கிறேன்........"

"அதைப் போற்ற எல்லோரும் வருகிறார்கள். எனினும் அதற்கு நியாயம் வழங்கப் படம் இல்லை!" என்று கூறிக்கொண்டே நாஸ்டியா மீண்டும் அவனை அணைத்துக்

கொண்டாள். "உங்கள் சட்டையை நான் கிழித்துவிட்டேன். உடனே அதைத் தைத்துவிடுகிறேன்" என்று புன்னகையுடன் அவள் கூறினாள்.

"என் மகனே! என் குழந்தாய்!" என்று அன்னை அன்புடன் அழைத்தாள். "அந்தப் பிசாசுகள் உன்னை என்ன பாடுபடுத்தி விட்டார்கள்!.........நேற்று உன் முதுகுப் புறத்தை நான் பார்த்துக்கொண்டு நின்ற பொழுது அல்யோஷா மாதிரியே இருந்தது; நடமாடுவதும் அப்படியே இருந்தது. எனினும் எனக்கு அந்த எண்ணமே தோன்றவில்லை........."

"நேற்று நாம் சாப்பிடும் பொழுதும்..."என்றாள் நாஸ்டியா. "நேற்றிரவு என்னால் கண்ணை மூட முடியவில்லை. விடியற்காலம்தான் கண்ணயர்ந்தேன்" நாஸ்டியா இதைக் கூறும்போது அவள் தேகம் அன்பாலும், சந்தோஷத்தாலும் நடுக்க முற்றது.

"அப்பா! அப்பா!" என்று ஸ்டியோபா பொறுமை இழந்து கூவினான். "நீ எத்தனை டாங்கிகளைத் உடைத்தாய்?"

சூரியன் மேலே வந்துவிட்டான். ஜன்னலை யாரோ தட்டினார்கள்—நாஸ்டியா வேலைக்குச் செல்லவேண்டும்.

# கும்பல்

த. நா. குமாரஸ்வாமி

ஸ்டேஷனுக்கு வரத் தாமதம் ஆகிவிட்டது. புக்கிங் ஆபீஸ் பக்கமாகப் பார்த்தபொழுது, மூச்சே நின்று விடும்போல் தோன்றியது. மூன்று வளைவாகச் சுற்றி ஒரு பெரிய 'க்யூ' (வரிசை) டிக்கட் கொடுக்கும் ஜன்னலி லிருந்து 'என்க்வயரி' ஆபீஸ்வரை நின்றுகொண் டிருந்தது. வேறு வழியின்றி, கடிகாரத்தை ஒருமுறை பார்த்துவிட்டு, விரைவாக அந்த மனித ஸர்ப்பத்தின் வாலின் கட்சியில் போய்நின்றுகொண்டேன். சற்று நிதானித்தாலோ இன் னும் பின்னல் போகவேண்டியதுதான்.

மூன்று நிமிஷங்களுக்குள் வால் இன்னும் ஆறு முழம் வளர்ந்தது.

அநேகர் இதைக்கண்டு டிக்கட்டு கொடுக்கும்ஜன்னல் அருகே சச்சரவிட்டுக்கொண்டு நின்றிருந்த ஜனங்களிடம் ரூபாயை நீட்டி, "ஸார், நீங்கள்தான் டிக்கட்டு வாங்கப் போகிறீர்களே. அத்துடன் இதோ கும்மிடிப்பூண்டிக்கு ரெண்டு......" என்று பல்லை இளித்துக்கொண்டு கெஞ்சிக் கொண்டு இருந்தார்கள்.

"ஸார், எனக்கும் அப்படியே சூளூர்ப்பேட்டைக்கு ஒண்ணு........"

இவர்கள் கெஞ்சிக்கொண்டு இருக்கும் அந்தப் பிர கிருதி, "அதெல்லாம் நடக்காதையா. என்னைப் பற்றியே எனக்குப் பெருங் கவலையாக இருக்கிறது. இல்லை, இல்லை. வீணா ஏன் பேசறே? போய் அதைவிட, 'க்யூ'வில் நில்லப் பேன்" என்றான். ஆனால் கெஞ்சிக் கொண்டிருந்த ஆள் விடுவதாக இல்லை. இந்தப் பக்கம் கடிகாரத்தில்

மணியோ எட்டு ஆகிவிட்டது. எட்டு — இருபதிற்கு கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ். இன்னும் இருபதே நிமிஷம். எதிரே ஒரு நீண்ட 'க்யூ.' டிக்கட் கிடைக்கும் என்ற நம் பிக்கையே இல்லை.

இன்னும் பத்து நிமிஷங்கள் கழிந்தன. 'க்யூ' இருந்த விதமே இருந்தது. விசேஷமாகக் குறிப்பிடக்கூடிய அளவு மாறுதல் ஒன்றும் புலனாகவில்லை. "ஒரு டிக்கட் கொடுக்க ஆறு மாசம் பிடிக்கிறது அவர்களுக்கு! இந்த மாதிரி நடந்தால் என் முறை வர இரண்டரை மணி நேரம் ஆகும். எட்டு - இருபதுக்குள் இந்தக் "க்யூ"வில் வீசம் பங்கு கூடக் குறையாது" என்று ஒருவன் முணுமுணுத்தான்.

"கூடவே மூட்டைகளும், பெண் குழந்தையும். இல்லாவிட்டால் திரும்பிப் போயிருப்பேன். நாள் முழுவதுக்கும் இது ஒரே வண்டிதான்" என்றான் மற்றொருவன். திடீரென்று 'க்யூ' கலைந்தது. என்ன விஷயம் என்று ஒருவரும் சொல்லவில்லை. மூச்சைப் பிடித்துக் கொண்டு எல்லோரும் பக்கத்து ஜன்னலை நோக்கி ஓடினார்கள். ஜன்னலின் பக்கம் பார்த்தபோது அது மூடிக் கிடந்தது. பக்கத்து ஜன்னலை நோக்கி ஓடினேன். அங்கே அப்போது 'என்னைப் பிடி, மென்னியைப் பிடி' என்று இருந்தது. முன் நின்ற 'க்யூ'வின் வால்புறத்து ஜனங்கள் இந்தக் 'க்யூ'வில் முதலில் நிற்க விழுந்து அடித்துக்கொண்டு வந்தனர்.

"என் ஐயா, உன் இடம் இங்கேயா இருந்தது? ஜாக்ரதே........"

"கபர்தார்" (இவர் ஒரு முஸல்மான்.)

"ஆளைப் பாத்துப் பேசையா!"

"என்னடா—அதிகமாப் பேசறே......"

இமைப் பொழுதிற்குள் ஒரே குத்துச் சண்டையும் ரகளையும்; காதால் கேட்க வழங்காத வசவுகளைப் பரிமாறிக் கொண்டனர்.

அதிகக் கஷ்டப்பட்டு நான் 'க்யூ'வில் எட்டாவது இடம் பிடித்துக்கொண்டேன். அதற்குள் என் உயிரே போய்விடும்போல் ஆகிவிட்டது. ஐந்து நிமிஷங்கள் கழித்து ஜன்னல் அருகே நான் வந்து சேர்ந்தேன். நான் செல்லவேண்டிய இடத்தைக் கேட்டதும் உள்ளிருந்த குமஸ்தா, "இங்கில்லே, 6-ஆம் நம்பர்" என்ருன்.

அட இழவே! அந்த இடம் எங்கே? வண்டி கிடைக்கப் போகிறதில்லே. நாழிகை ஆகிவிட்டது. எவ்வளவோ கஷ்டப்பட்டு ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டும் பலன் அற்றுப் போய்விட்டதே! தேடித் தேடி 6-ஆம் நம்பர் ஜன்னலேக் கண்டுபிடித்தேன். அங்கேயும் 'க்யூ' வரிசை. ஆனல் அவ்வளவு நீளம் இல்லே. யாரோ ஓர் ஆள், "ஸார், எங்கே போகிறீர்கள்? எனக்குத் தயவு செய்து நாயுடு பெட் ஒரு டிக்கட்......" என்று நீட்டினன், ஐந்து ரூபாய் நோட்டை.

எனக்கு எரிச்சல் அதிகமாகவே கடுமையான குரலில், "என்ன ஐயா தொந்தரவு பண்ணறே?" என்றேன்.

டிக்கட் கிளார்க்கிடம் நோட்டைக் கொடுத்ததும் அவன் அதை திருப்பிப் போட்டு, "நோ சேஞ்ஜ், மிஸ்டர்" (சில்லறை இல்லே, ஸ்வாமி) என்ருன்.

அசடு வழிய ஜேபியில் கை விட்டுக்கொண்டே, "எஸ் ஸார், ஸாரி ஸார், ஹியர் இஸ் மை சேஞ்ஜ் ஸார்" (ஆமாம். மன்னிக்கணும், இதோ சில்லறை) என்றேன். பையில் கையை விட்டுப் பன்னிரண்டு அணு எடுக்க வழியில்லே.

அருகில் ஒருவன் கெஞ்சிக்கொண்டு இருந்தான்; "தயவு செய்து தெனுலிக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொடுங்கோ, ஸார். சின்னக் குழந்தை ஒன்று இருக்குது; கும்பலில் நுழைய முடியவில்லே. இரண்டு தடவை போனேன்........"

என் மனசு அப்போது கலவரத்தில் ஆழ்ந்திருந்தது. "போய்யா சரிதான்" என்றேன் சள்ளென்று.

"ஸார், ஒரு டிக்கட் வாங்கிக் கொடுங்களேன், இரண்டு தடவை போனேன்......"

"முடியாது, போய்யான்னு......" எனக்கு ஆத்திரம் பொங்கி வந்தது.

டிக்கட்டு வாங்கும் படலம் முடிந்ததும் தலை தெறிக்க வண்டியைப் பிடிக்க ஓடினேன். பெண்கள் வண்டியில் மூட்டைகளை உள்ளே தள்ளினேன். வேறே வண்டிகளில் கஷ்டப்பட்டு நான் மாத்திரம் நுழைவதே கைலாஸம் போகிறமாதிரி இருந்தது. இந்த அழகில் மூட்டைகளையும்...

நினைக்க முடியாத கூட்டம் ஒவ்வொரு பெட்டியிலும். தவிர ஜனங்கள் ஈவு இரக்கம் இல்லாமல் கொடூரமாக மிருகம்போலத் தங்களுக்கும் தங்கள் சாமான்களுக்கும் இடத்தைப் பிடித்துக் கொள்ளப் போட்டியிட்டனர். இதே ரயிலில் இதற்குமுன் பல தடவை பிரயாணம் செய்திருக்கிறேன். பிரயாணிகளிடம் எவ்வளவோ அன்பும், ஆதரவும் கண்டிருக்கிறேன். ஆனல், இன்று இந்த விபத்தில் அடிபட்ட ஜனங்கள் கொடூரமான மிருகம்போல நடந்து கொண்டனர். முன் ஒருதடவை நடந்தது இன்னும் என் நினைவில் இருக்கிறது. முன்பின் தெரியாத வயசான ஒரு குல ஸ்திரீ அவளுடைய பக்ஷணக் கூடையிலிருந்து பக்ஷணங்களை எடுத்து ஒரு தட்டில் வைத்து அவள் கணவர் மூலம் என்னிடம் அனுப்பினள். அவர் என் எதிரில் தட்டை வைத்து, "கொஞ்சம் சாப்பிடுங்கள்" என்று அன்புடன் வேண்டும் குரலில் சொன்னர்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பெஜவாடாவிலிருந்து ஒரே 'இண்டர் கிளாஸ்' வண்டியில் பக்கத்துப் பக்கத்துப் பெஞ்சிகளில் போய்க்கொண்டு இருந்தோம்; ஆனல் நான் அவருடன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பக்ஷணம் கொடுக்கும் படலம் மறுநாள் காலையில் வார்தா ஸ்டேஷனில். கூச்சத்துடன், "வேண்டாம். எதற்கு? நான்...நீங்கள் சாப்பிடுங்கள்" என்றேன்.

அவர்கள் அதைக் கேட்கவில்லை. "இந்த ஸ்டேஷன்களில் எல்லாம் நல்ல பக்ஷணம் அகப்படாது. எங்களிடம் ஏகப்பட்டவை இருக்கின்றன. தயவுசெய்து கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று வற்புறுத்தினர்.

அந்த நாட்களெல்லாம் எங்கேயோ போய்விட்டன. மூன்று அங்குல அளவுள்ள அட்டை போன்ற பூரி 1 அணு. ஜனங்களிடையே இருந்த அந்தச் சகோதரத்வம் இன்று எங்கே முழுகிவிட்டதோ?

வண்டியின் வெளிப்புறம் பிச்சைக்காரர் கூட்டம். மெலிந்த உருவுடன் ஒரு பெண் பிள்ளை. இடுப்பில் ஒரு குழந்தை. பரிதாபகரமான குரலில், "பாபூ, நீங்கள் இருக்கையில் நாங்கள் பட்டினியாச் சாவலாமா? ஒரு காலணுக் கொடுங்களேன்" என்று கையை என் முகத்தண்டை நீட்டினள்.

யாரோ ஒருவன் பதில் சொன்னன். "எங்கிருந்து அம்மா கொடுப்பது! அரிசி என்ன வெலை விக்கிறது தெரியுமா? இப்போ எல்லாருமே சாக வேண்டியதுதான். போம்மா. ஒன்றும் நடக்காது."

ஒரு வியாதியஸ்தன். மார்பில் அழுக்கு ஏறிய பூணூல். வண்டியின் அந்தக் கோடியிலிருந்து உரத்த குரலில் பிரார்த்தனை செய்துகொண்டே வந்துகொண்டிருந்தான். பாவம். அவன் வீட்டில் எவ்வளவு கஷ்டமோ! தாய்க்கிழவி படுத்த படுக்கையாம். பெண்டு பிள்ளைகள் பட்டினியால் சாகிருர்களாம். அவன் சமீபத்தில் வரவர என் மனதில் கோபமும் வெறுப்பும் மூண்டன. பக்கத்தில் வந்ததும் முகத்தைச் சுளித்துக்கொண்டு, "ஏன் இப்படி வருகிருய்? கூட்டத்தைப் பார்த்தாயா? இல்லை!... எங்கேயாவது சில்லறை கிடைத்தால்தானே உனக்குக் கொடுக்க! சில்லறை இல்லாமல் போகவேதானே டீ சாப்பிடுவதே நின்றுபோய் விட்டது!" என்று சொன்னேன்.

வண்டியில் நிமிஷத்துக்கு நிமிஷம் கூட்டம் அதிகரித்தது. மேலே கூட்டம் தொந்தரவு செய்யாமல் இருக்க, கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுவிட்டனர். ஒருவரையும் உள்ளே விடவில்லை. ஜன்னல் வழியாக ஜனங்கள் உள்ளே நுழைந்து பெரிய கலவரத்தை உண்டாக்கினர்.

"கொஞ்சம் நவரய்யா!"

"எங்கேய்யா எடம் இருக்குது? என்னய்யா கழுத்து மேலே உக்காந்தூட்டியே!"

"நீ ஒத்தனே இம்மாம் இடம் அடச்சிக்கினு உக்காந்தூட்டா மத்தவங்க என்னய்யா பண்றது. கூட்டத்தைப் பாரய்யா!"

"அதுக்காவ எம்மேலே ஒக்கார்ரதோ? நல்ல மனிசனய்யா நீ!"

"தே. நல்ல மனிசன், கில்ல மனிசன்னு எல்லாம் பேசாதே. மொதல்லேயே சொல்லிட்டேன்."

"அடே, பெரிய கவனரல்ல இவுரு! யாரண்டே பயங் காட்ரே! ஒன் வண்டியல்ல இது!"

"ஜாக்ரதே! வாயடக்கிப் பேசு! நீ நீன்னு சொல்லாதே. ஒரே அறையில்........."

மகா பாரத யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. ஒரு பக்கத்தில் உடைந்த குடை. ஒரு பக்கத்தில் முட்டி. வண்டியில் இருந்த ஜனங்கள் ஓடி இருவரையும் விலக்கினார்கள். உபதேசங்கள் மாரிபோலப் பொழிந்தன. வண்டியில் இருக்கப்போவது கொஞ்சநேரம். அதற்குள் இவ்வளவு சண்டையா? இதோ, பெஜவாடா வந்தால் பாதி வண்டி காலி.

வண்டி போய்க் கொண்டிருந்தது, தொழிற் சாலைகள், வீடுவாசல்கள், வயல் வெளிகளைத்தாண்டி. ஒவ்வொரு ஸ்டேஷனிலும் ஜனங்கள் வண்டியின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு தொங்கினர். நடு நடுவே ஓரிரண்டுபேர்

விழுந்து செத்தும் போயினர். ஒவ்வொரு ஸ்டேஷனிலும் எவ்வளவு கூட்டம்! இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை ஜனங்கள். டிரங்குகள், ஹோல்டால்கள், வெல்லப் பொதி, திருட்டு அரிசி, கிரஸின், குடை, கம்பு இவைகளுடன் ஜனங்கள் இங்கும் அங்கும் ஓடினர். எப்படியாவது வண்டியில் நுழைந்து விட்டால் போதும்!

எங்கள் பெட்டியில் நிற்பவர்கள் உட்கார்ந்து இருப் பவர்களைப்போல இரண்டுபங்கு. உள்ளே நுழைய வருபவர் களிடம் எல்லாம், "முன்னாலே போ, முன்வண்டி காலி" என்று சொல்லிக் கொண்டிருந்தோம். சிலர் அதை நம்பி முன்னே போனார்கள். "ஈ நுழைய இடமில்லை, முன் பெட்டிகளில். கொஞ்சம் திறவுங்கள், நாள் பூராவுக் கும் இது ஒரே வண்டி" என்று கெஞ்சினார்கள் சிலர்.

தாடி வைத்துக்கொண்டிருந்த ஒரு சீக்கியன் எங்கள் பெட்டிக்கு வாயிற் காப்போன். "ஆ காடீ வாலா டப்பா மே ஜா. வோ பக்கா காலி" (அந்தப் பெட்டிக்குப் போ. அது ஒரே காலி) என்று கர்ஜனை செய்வான்.

இதன் நடுவே மேல் தட்டிலிருந்து லுங்கி அணிந்து மீசை தாடியுடன் கூடிய ஒருவன் கீழே பெஞ்சி யில் இறங்க, கால்களைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருந்தான். கீழே ஒரே கூட்டம். யாரோ ஒருவர் மேல் கால் வைத்துத்தான் அவன் இறங்க வேண்டியிருந்தது. உயரமானவன். நோயாளி போலத் தோன்றியது. முகத் தில் போக்கிலியின் களை. குண்டாக்களின் ஸர்தார் என்று எனக்குத் தோன்றியது. பீடிப் புகையால் பெட்டியை நிரப்பிவிட்டு எதிர்ப் பெஞ்சில் நன்றாக உட்கார்ந்து கொண்டான்.

பெட்டியின் உட்புறம் வேறு பேச்சே இல்லை, இதைத் தவிர.

"ஸார், உங்கள் பக்கத்தில் அரிசி எப்படி, ஸார்?"

"மூட்டை முப்பது ரூபாய், ஸார். உங்கள் பக்கத்தில்?"

"நான் வரும்போது 22½ ரூபாய்."

"எந்த இடம், ஸார், அது?"

"தெற்கே, ஸார், திருநெல்வேலி."

"மனுஷன் பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான்.'

திருநெல்வேலி ஆஸாமி சொன்னான்: "சாகவேண்டியதுதான் என்ன, ஸார்? செத்துத்தான் போகிறார்களே! எங்க ஊர்லே சின்னப் பெண்கள் எல்லாம் பச்சை இலைகளை எல்லாம் தின்கிறார்கள், ஸார். என் தோட்டத்திலே வந்து எடுத்துக் கொள்கிறார்கள்."

யாரோ, "பச்சை இலைகளைக்கூடத் தின்னுவாங்களா?" என்றான்.

"சாப்பிடாமே? எங்க ஊரிலே ஒரு மரத்திலேகூடப் பச்சை இலையே கிடையாது. எல்லாம் சாப்பிட்டு ஆகிவிட்டது."

இன்னொருவன், "அட, காலங்காத்தாலே வண்டிக்குப் பொறப்படரத்துக்கு முந்தி மூணுபேரு டேஸனுக்குப் பக்கத்திலே செத்துக் கிடந்தாங்கய்யா" என்றான்.

"அட, இது என்ன புதுசா? தினம் அம்பது நூறுன்னு சாவறாங்கய்யா வங்காளத்துலே! கண்கூடாப் பாத்தேனய்யா. நெனைச்சாக்கூடப் பகீருன்னுது. எங் கடைக்கு முன்னாலே அரிசி வாங்கர 'க்யூ'வில் ஒரு கிழவி மூச்சடச்சிச் செத்தாய்யா முந்தாநாளு" என்றான் ஒரு முகம்மதியன்.

"என்ன கடைய்யா ஒங்களுது?"

"துணிக்குப் போடற சோப்பு. நான் இந்த ஸ்டேஷனிலே எறங்கணும்...பக்ஷணமய்யா அது. நொறுக்கிடாதே. ரெண்டு ரூபா ஐயா அதன் வெலை."

என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு மிட்டாய்க்கடை சேர் 2 அணாவுக்கு நான் எவ்வளவோ நாட்கள் பால்

கோவா வாங்கித் தின்று இருக்கிறேன். 'கரம் பகோடா' பொட்டலம் காலணா. அந்த நாள் வருமா?

வண்டி ஒரு ஸ்டேஷனில் வந்து நின்றது. ஜனங்களை ஏறவொட்டாமல் சீக்கியன் கதவைத் தாழிட்டுவிட்டு எழுந்து நின்றான். மறுபடியும் ஒரு முறை ஒரே இரைச்சல், கர்ஜனைகள், வேண்டுகோள்கள், எல்லாம். ஜன்னல் வழியாக ஒருவன் உள்ளே ஏறினான். உள்ளே இருந்தவர்கள் அவனை வெளியே தள்ளி ஜன்னல் கதவை மூடினார்கள். "நல்லதாச்சு. இந்த ஜன்னலாலே உள்ளே வாய்யா" என்று சொல்லிக்கெண்டேன்.

இந்த ஆபத்தில் அடிபட்டு என் மனம் கடூரமாகவும் மிருகத்தைப் போலவும் ஆகிவிட்டது. மற்றவர்களுடைய கஷ்டத்தைப்பற்றி நான் கவனிக்க விரும்பவில்லை.

ஒரு ஸ்டேஷனில் நான்கு பக்கங்களிலும் ஒரே தண்ணீர்.

"இங்கே என்ன இவ்வளவு ஜலம்?" என்று கேட்டேன்.

"கிருஷ்ணா ஆற்று வெள்ளம், சாமி, எம்மாம் பயிரு, எத்தினி வூடு. ரெண்டு வூரு ஒரே அடியா அடிச்சிக்கினு பூடுத்து சாமி" என்றான் ஒரு குடியானவன்.

சீக்கியன், "உதர் ஜா. ஆ காடீ டப்பா மே ஜா" என்றான்.

இன்னொருவன், "ஏன் அடித்துக்கொண்டு போகாது? சாஸ்திரத்திலேயே சொல்லிருக்கிறதே!" என்றான்.

மூலையிலிருந்து ஒருத்தன், "சாஸ்திரத்தை வெள்ளத்திலே போடய்யா. எங்கே அந்தச் சனியன்......" என்று ஆரம்பித்தான்.

அதாவது அந்த ஆள் சாஸ்திரத்திலே சொன்ன வெள்ளத்தைப் பார்க்க முடியவில்லை என்று அர்த்தம்.

அந்த லுங்கி அணிந்த ஆள் அசைந்து உட்கார்ந்து கொண்டு ஆரம்பித்தான: "ஸார், எங்க தாலுகாவில்

ஒரு ஜுரம் வந்திருக்கிறது. வந்த மூணும் நாள் ஆள் பைசல் தான்! போன வருஷம் ஐப்பசி மாசம் புசல் காத்திலே வூடு போச்சு. இந்த வருஷம் இந்த ஜுரத்திலே என் 22 வயசு மவன்........."

அவன் குலுங்கக் குலுங்க அழ ஆரம்பித்துவிட்டான்.

"என்ன அய்யா உன் பிள்ளைக்கு?"

"வேறே என்ன ஸார், இல்லே? அந்தச் சமாசாரம் தெரிஞ்சுதான் நான் ஊருக்குப் போவறேன். பெரம்பூர் பாரக்ஸிலே வேலே ஸார்.போன வருஷம் புசலில்வீடு வாசல் போச்சு. இந்த வருஷம் என் 22 வயசு மவன்........."

மறுபடியும் அவன் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். வண்டியிலிருந்த ஜனங்களின் இரைச்சல் எல்லாம் கப்சிப்பென்று நின்று விட்டது. சீக்கியன் தன் ஓலத்தை நிறுத்தி விட்டான். அருகிலிருந்த இரண்டோர் ஆட்கள் ஆறுதல் கூற ஆரம்பித்தனர். என்ன உருக்கமான அழுகை! நிறுத்தவே முடியவில்லை.

"அழாதே அப்பா. அழுது என்ன ஆவும்? ஆஹா. 22 வயசுப் பிள்ளை! பொழைக்கறதும் சாவறதும் நம் கையிலேயாப்பா இருக்குது? இந்தாப்பா, பீடி!"

பிள்ளைக்காக அழும் தகப்பனின் ஓலம் வண்டியின் நிலைமையையே மாற்றிவிட்டது. ஊசி நுழைய முடியாத இடத்திற்காக வெட்கமின்றிப் போடும் சண்டைகளும், வீண் முயற்சிகளும் நின்று போயின.

"இப்படி வாய்யா. இங்கே எடம் இருக்குக."

யாரோ ஒரு சிறுவன் கையில் தேங்காய் எண்ணெய் புட்டியுடன் நின்று கொண்டிருந்தான். இவ்வளவு நேரம் கழித்து ஒருவன் அவன் கையைப் பிடித்து இழுத்து, "வாடா. இப்படி ஒண்டி ஒக்காந்திக்கோ. இன்னும் கொஞ்ச நேரத்திலே சரியாயிடும்" என்றான்.

இவ்வளவு நேரம் குண்டாக்களின் ஸர்தார் என்று நினைத்த அந்த லுங்கி அணிந்த ஆளின் முகத்தைப் பார்த்த

பொழுது கொஞ்சம் பரிதாபம் ஏற்பட்டது. பாவம்! பிள்ளை செத்துப் போய்விட்டான்! அவன் கிழ வயசில் ஆதரவாக இருக்கவேண்டிய பிள்ளை! ஒரே பிள்ளை! பாவம்—கொடுமை, பரோபகாரமின்மை, கடுமை எல்லாம் ஒன்ருகக் கூடி இருந்தன, சென்னையிலிருந்து புறப்பட்டது முதல். என் கண்முன் மனிதர்கள் மிருகம் போலவே தோன்றினர். ஆனல் அந்த லுங்கி அணிந்த ஆளின் கண்ணீர் எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போய் விட்டது.

இந்தத் தடவை நிற்கும் ஸ்டேஷனில் அந்த ஆள் இறங்கிப் போகவேண்டும். வண்டியின் ஒரு மூலையில் இது வரை பேசாமல் உட்கார்ந்திருந்த ஒரு தாடிக் கிழவன், "இங்கே இறங்குகிருயா! நல்லது! உனக்குப் பகவான் சாந்தி அளிக்கட்டும். கிழப் பிராம்மணன். ஆசீர்வாதம் செய்கிறேன். நன்ருக இருப்பாய். உனக்கு மங்களம் உண்டாகட்டும்" என்ருன்.

# திரை விலகியது

"சுரபி"

ராமச்சந்திரன் டில்லிக்கு வந்து சரியாய் ஒருவாரம் ஆக வில்லை. மற்றவர்கள் கவனத்துக்கே பாத்திரமாகாத தார் ரோடுகள் அவனுக்குத் தேவலோக வீதிகளாகக் காட்சி அளித்தன. மற்றவர்களின் வசைபுராணத்துக்குப் பாத்திரமான டாங்காவண்டிகள் அவனுக்குப் புஷ்பரதங் களாகக் காட்சி அளித்தன. போலி நாகரிகத்தின் சின்ன மாக, ஜம்பத்தை விலைகூறி விற்கும் கடைவீதியாக, அனுபவசாலிகள் கருதிய, "கன்னாட் சர்க்கஸ்" அவ னுக்கு நாகரிகத்தின் உருவமாக, கலைவனத்தின் காட்சிச் சாலையாகத் தோன்றியது. அதற்குள்ளே வட்ட வடிவ மாய் அமைந்து கிடக்கும், புல் தோட்டத்தைப் பார்த்து அவன், "இந்திர சபா இந்தக் 'கன்னாட் ப்ளேஸ்' போலத் தான் இருக்கும்போலும்" என்று திருப்தி அடைந்து கொண்டான். ஆடை அலங்காரங்களைக் காண்பதற்கும் காட்டுவதற்குமாக அதைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த புதுமையான உருவங்களைக் கண்டபோது அவன் மனம், "ஆமாம், தேவலோகத்திலே அப்ஸர ஸ்திரீ கள் எத்தனை பேர்கள்தான் இருப்பார்கள்?" என்று கேள்வி கேட்க ஆரம்பித்தது.

இவ்வளவு அபிமானத்துக்கும் காரணமாயிருந்த 'செக்ரிடேரியெட்' கட்டடத்தை விட்டு வெளியேறிய உடனே, தினசரி ராமச்சந்திரன் நேராகக் 'கன்னாட் ப்ளே' சுக்குத்தான் செல்வான். அதற்கு உள்ளே கொலுவீற்று இருக்கும் 'அழகுத் தெய்வங்களை'ப் பிரதக்ஷிணம் செய்யச் செய்ய அவன் போதையும் முற்றிக்கொண்டே போகும்.

பாழாய்ப் போன சென்னைப் பட்டினத்தில் பிறந்தும் கூடத் தனக்கு இந்த வைபவத்தை எல்லாம் காணக் கொடுத்து வைத்ததே என்று நினைக்கும்போது அவனுக்கு ஜன்ம சாபல்யமே ஏற்பட்டு விட்டதுபோல் இருக்கும். தான் தரிசித்த அலங்கார சுந்தரிகளின் சந்திரவதனங்களை மனத்தில் படம் பிடித்துக்கொண்டே சென்று சாப்பாட்டுக்கு உட்கார்ந்தானுனல், மற்றவர்கள் தலையில் அடித்துக் கொண்டு சாப்பிட்டுத் தொலைக்கும் அந்த அதிசயமான சாப்பாடும் அவனுக்கு அறுசுவையோடு கூடிய நல் விருந்தாய் ருசிக்கும்.

அன்று ராமச்சந்திரன் 'கன்னுட் ப்ளேசி'ல் கால் வைக்கும்போது பூர்ணசந்திரனும் அதைத் தரிசிப்பதற்காகப் புறப்பட்டு வந்துகொண்டிருந்தான். ராமச்சந்திரன் மனத்தில் கடல் பொங்குவதுபோல் உற்சாகம் பொங்க ஆரம்பித்தது. அணுவளவுகூட ஆயாசம் எல்லாமல் அந்த வட்டத் தோட்டத்தை மூன்றுதடவை சுற்றிவந்து விட்டான். நான்காவது தடவை சுற்ற ஆரம்பிப்பதற்குள், அவனுக்குப் போட்டியாக அன்று வந்திருந்த மற்ருெரு சந்திரன் சற்று மேலே கிளம்பி அந்த அலங்காரத் தோட்டத்தின் அதிதேவதைகளை நோட்டம் பார்த்துக்கொண்டிருந்தான். தோட்டத்தின் விளக்கொளியும் இந்த நோட்டக்காரனின் நிலவொளியும் சேர்ந்து அற்புதமான சோபையை எங்கும் பரப்பிக்கொண்டிருந்தன.

மங்கையரின் வதனங்களைச் சந்திர பிம்பத்துக்கு ஒப்பிடும் கவிகளின் திறமையை வியந்துகொண்டே நடந்து சென்ற ராமச்சந்திரனுக்குத் திடீரென்று உடம்பில் ஏதோ மின்சாரம் பாய்ந்ததுபோல் இருந்தது. தனக்கு முன்னே சிறு பெண் ஒருத்தியைக் கையில் பிடித்துக் கொண்டு நடந்து சென்றுகொண்டிருந்த முக்காடிட்ட உருவந்தான் அந்த மின்சார சக்தியின் உற்பத்திச்சாலை என்பது ஒரு கணம் நிதானித்த பிறகுதான் அவனுக்குப்

புலப்பட்டது. அடுத்த நிமிஷம் அவன் கண்கள் அந்த உருவத்தின் அங்க லக்ஷணங்களை ஆராய ஆரம்பித்தன.

நடுத்தரமான உயரம்; பருமன் என்றோ ஒடிசல் என்றோ சொல்ல முடியாது; பெண்களுக்கு அமைய வேண்டிய லக்ஷியமான உடற்கட்டு; தங்கத்தைக் குழைத்துப் பூசியது போன்ற மேனி (இதை அனுமானிப்பதற்கு ஆதாரமாயிருந்தவை லளிதமான அந்த இரண்டு தாமரைக் கரங்களே). ஆகாய நீல வர்ணத்திலே அந்த உருவம் அணிந்திருந்த தளர்த்தியான கால்சராயும், அதற்குமேல் முழங்கால்வரை தொங்கும்படி அதே நிறத்தில் உடலை ஒட்டினாற்போல் இருந்த முழுக் கைச் சட்டையும் அவன் மனத்தை என்னவோ செய்தன. அந்த வர்ணத்தினிடத்திலும் அந்தத் துணியினிடத்திலும் அவனுக்கு என்றும் இல்லாத மோஹம் பிறந்துவிட்டது. ஆனால், அவை இரண்டையும்விட, சற்றுக் கறுத்த நீலத்தில் அந்த மாதின் முகத்தைக் கவிந்துகொண்டு கழுத்தில் புரண்டுகொண்டிருந்த அந்தத் துப்பட்டாமீது மட்டும் அவனுக்கு எரிச்சல்தான். கேவலம் ஒரு பட்டுத்துண்டுக்கு ஒரு ரஸிகனின் மனத்தில் புகுந்து பார்க்கச் சக்தி ஏது? கருநாகம் போன்ற கேசச் சுருள்களையும் தாவள்யமான கண்டத்தையும் அது மூடி மறைத்துக்கொண்டு கிடந்தது. நல்ல வேளையாய் அது அதிகக் கனமாய் இல்லாததனால், காதுகளில் ஊசலாடிய பெரிய லோலக்குகள் அவனைப் பார்த்து ஏதோ விசாரிப்பவைபோல் துடித்துக் கொண்டிருந்ததை மட்டும் அவன் அறிந்து கொள்ள முடிந்தது.

புது டில்லியின் புத்தம் புது வாசியான ராமச்சந்திரன் அயோத்தி ராமச்சந்திரனின் அழகைக் கண்டு அனுபவித்த ரஸிகர்களை ஒரு விதத்தில் ஒத்திருந்தான் என்றால், ஒருவிதத்தில் மிஞ்சிவிட்டானென்றே சொல்லவேண்டும். தோள் கண்டார் தோளே கண்டவர்களாய் அவர்கள் சமைந்து நின்றார்களாம். இவனுடைய அனுபவத்தைச் சொல்ல

வேண்டுமானல், ஆள்கண்டான் ஆளைகண்டான் என்று தான் சொல்லவேண்டும். தன்னைச் சுற்றிலும் நிகழ்ந்து கொண்டிருந்த சலனங்கள் அவனது பஞ்ச கரணங்களில் ஒன்றைக்கூடக் கவரவில்லை. எதிரில் கொடிபோலத் துவண்டு துவண்டு சென்றுகொண்டிருந்த உருவத்தின் லக்ஷணம் ஒன்றையே அவன் கண்கள் வாரி விழுங்கிக் கொண்டிருந்தன. ஆனல் அவன் மனம் தோளிலேயோ தாளிலேயோ லயித்து நின்றுவிடாமல் சர்வாங்கங்களையும் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

சாமுத்திரிகா லக்ஷண சாஸ்திரத்தில் தேர்ந்தவர்கள் ஏதாவது ஓர் அங்கத்தைப் பார்த்து மற்ற அங்கங்களையும் தீர்மானித்து விடுவார்களாம். ராமச்சந்திரனே, சாமுத்திரிகா லக்ஷண சாஸ்திரத்தைத் தொடாமலே, தன் எதிரில் நாலைந்து அடி தூரத்தில் சென்று கொண்டிருந்தவளின் இடது கைச் சுண்டுவிரல் நெளிந்த நெளிவைக் கண்டே அவள் முழு உருவையும், முக பிம்பத்தையுங்கூடத் தீர்மானித்து விட்டான்.

பத்மினி ஜாதிப்பெண், சித்தினி ஜாதிப்பெண் என்றெல்லாம் சாஸ்திரம் பெண்களை வகுத்திருப்பதை அவன் கேட்டிருக்கிறான். இந்த ஜாதிகளில் எந்த ஜாதிப்பெண் சிறந்தவள் என்பது அவனுக்கு அப்போது ஞாபகமில்லை. ஆயினும், தன் எதிரில் சென்று கொண்டிருந்தவள், அவற்றில் எந்த ஜாதி உயர்ந்ததோ அதைச் சேர்ந்தவள் என்பதில்மட்டும் அவனுக்குச் சந்தேகமே இல்லை. அவள் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்போதும் அவளுடைய உடலில் ஏற்பட்ட அற்புதமான நெளிவே இந்தத் தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்துவந்தது. அவளிடம் இருந்து காற்றில் கலந்து வந்துகொண்டிருந்த நறுமணமும் இதற்கு ஆதாரமாய் இருந்தது.

இப்படித் தன்னை மறந்து சிந்தித்துக்கொண்டே நடந்தவன் அவளை நெருங்கிக் கவனமில்லாமல் அவள் துப்பட்

டாமீது உரசிவிட்ட போதுதான், தான் சென்னையிலிருந்து 60 ரூபாய் குமாஸ்தா வேலைக்காக டில்லிக்கு வந்திருப்பவன் என்பதை உணர்ந்தான். "ஐயோ, எவ்வளவு பெரிய இடத்துப் பொம்மனாட்டியோ! ஒருவேளை காஷ்மீரம், கேஷ்மீரம், இந்தமாதிரி சம்ஸ்தானத்து ராஜகுமாரியாய் இருந்தாலும் இருக்கலாம்" என்று கூறிவிட்டுச் சம்மட்டியைத்தூக்கி அடிக்க ஆரம்பித்தது அவன் மனம். நல்ல வேளையாக அவள் கவனிக்காமல் இருந்து விடவே அவன் பின் தங்கி நாலடி தூரத்திலேயே நடக்கலானான்.

தன்னுடைய நிலைமை ஞாபகம் வந்ததும், தன் காலில் கட்டி வைத்திருந்த பெண் ஜென்மத்தைப்பற்றியும் அவனுக்கு ஞாபகம் வந்தது. 'சனியன்! இப்படி ஒரு ரம்பையைப் பெற்றிருக்கும் இந்த நாடு அப்படியும் ஓர் அகோரத்தைச் சிருஷ்டி செய்துவைத்திருக்கிறதே, தனக்கென்று' என்று தன் தலைவிதியை நொந்துகொண்டான். 'ஏண்டாப்பா, ராமச்சந்திரா! செல்லம், செல்லம் என்று அவள் படத்தை எடுத்து வைத்துக்கொண்டு பூரித்துப்போன காலம் எல்லாம் மலையேறி விட்டதா?' என்று யாரோ தட்டிக் கேட்பதுபோல் இருந்தது. யாரும் இல்லை, தன் மனச்சாக்ஷிதான் என்று தெரிந்தவுடன் அதைவிட்டு மீண்டும் ரஸிகானுபவத்தில் இறங்கினான் அவன்.

ரேடியோவில் மணியடிப்பது கேட்கவே, தான் சீக்கிரத்தில் திரும்பிப் போகவேண்டும் என்பதும் அவளும் ஒருவேளை வீட்டுக்குத் திரும்பக்கூடும் என்பதும் அவனுக்கு ஞாபகம் வந்தன. உடனே, இவ்வளவு அற்புதமான பெண்ணின் முகத்தையாவது ஒரு தடவை தரிசித்துவிட்டுத்தான் போகவேண்டுமென்று அவனுக்குத் தோன்றிற்று. அவன் மனமும் அவனுக்கு உடந்தையாய் அதற்கு வழிகண்டு பிடித்துச் சொல்லியது. அதற்கு ஏற்ப 'விறு விறு' என்று சிறிது தூரம் முன்னே நடந்து சென்றுவிட்டுத் திடீரென்று திரும்பி அவளுக்கு எதிராகப் புறப்பட்

டான். ஆனால் என்ன அக்கிரமம்! அந்தச் சனியன் பிடித்த துப்பட்டா அவள் முகம் முழுவதையும் அல்லவா மூடிக்கொண்டிருந்தது! ராமச்சந்திரனுக்கு இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆனால் அவன் அவளைத் தாண்டி வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் திரும்பித் தோட்டத்துக்கு உள்ளே புகுந்தாள். 'சரி, பார்த்துவிடுவோம் ஒரு கை' என்று அவனும் கூடவே நடந்தான். உள்ளே போனவள் ஒரு பெஞ்சியில் போய் உட்கார்ந்தாள். ராமச்சந்திரன் அதிர்ஷ்டம், அதற்கு நேர் எதிராய் அவனுக்கும் ஒரு பெஞ்சி அகப்பட்டது. கருமமே கண்ணான அந்த ரஸிகன் அதில் உட்கார்ந்துவிட்டான் என்று சொல்லவேண்டுமா? ஆனால் இப்படி விதியே கூட்டிவைத்ததுபோல் சந்தர்ப்பம் வாய்த்தும் கடைசியில் பயன்படாதுபோல் இருந்தது. அந்தத் திரை லேசில் விலகுவதாய்க் காணோம். ராமச்சந்திரனுக்குத் துடிதுடிப்புத் தாங்க முடியவில்லை. மற்றவர்கள் எல்லாம் இப்படி ஒரே அடியாய் மூடிக்கொள்வது இல்லையே என்று அவன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். ஆனால், மிகவும் பெரிய குடும்பத்து ஸ்திரீகள் இப்படித்தான் தங்கள் முகம் பிறர் கண்ணில் சிறிதும் படாமல் பார்த்துக் கொள்வார்கள் என்று அவன் மனத்திலேயே அதற்கும் சமாதானம் பிறந்தது. "சனியன், தில்லித் துருக்கர் செய்த வழக்கமடி" என்று அவன் வாய் சற்று உரக்கவே கூறிவிட்டது. அடுத்தாற்போல், "பழம் கண்டவன் தோல் உரிக்கக் காத்திருப்பனோ?" என்றும் பாடியிருப்பான். ஆனால் அவளுக்கு என்ன புரியப்போகிறது?

சில சமயங்களில் நாம் சோர்ந்துபோய் அடியோடு நம்பிக்கை இழந்திருக்கும் தருணத்தில்தான் எதிர்பாராத விதமாய் நமது லட்சியம் கைகூடி வருகிறது. ராமச்சந்திரன் மனம் முறிந்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் வாயுபகவானே இந்தச் சக்தியாய் வந்து

அவன் லட்சியத்தை நிறைவேற்றி அருளினன். ஆமாம், எதிரில் இருந்த பெண்ணின் முகத் திரையைத் திடீரென்று காற்றின் கரங்கள் பற்றி இழுத்துவிட்டன. ஒரே கணம். அதற்குள் மீண்டும் அவள் அந்தத் துப்பட்டாவை இழுத்து விட்டுக்கொண்டாள். ஆனல் அந்த ஒரு கணத்திலேயே ராமச்சந்திரன் அந்த முகத்தின் பூர்ண அமைப்பையும் பார்த்து விட்டான். நல்லவேளையாய் நேர் எதிரிலிருந்த மின்சார விளக்கும் தலைக்குமேல் இருந்த இயற்கை விளக்கும் அதன் ஒவ்வோர் அம்சத்தையும் தெளிவாய் எடுத்துக்காட்டின. இல்லாவிட்டால் அந்த ஒரு கணத்தில் மூர்ச்சை போடக்கூடிய அதிர்ச்சி அவனுக்கு எப்படி ஏற்பட்டிருக்கும்! உண்மையில் இந்த 27 வருஷ காலத்தில் இத்தகைய முகம் ஒன்றை ராமச்சந்திரன் பார்த்ததே இல்லை. அவன் வாழ்க்கையில் பார்த்ததை எல்லாம் விட, படத்தில் பார்த்ததை எல்லாம்விட, கற்பனையில் கண்டதை எல்லாம்விட, கேள்வியில் கேட்டதை எல்லாம் விடக் கோரமாயிருந்தது அந்த முகம்.

# சிக்கல் முடிவு

பி. வி. சுப்பிரமணியன்

புரோகிதரிடம் முதலில் விஷயத்தைச் சொல்லாதது ரொம்பப் பெரிய தவறு என்பதைச் சட்டென்று எல்லோரும் அறிந்து கொண்டார்கள். அது அவசியமில்லை என்று தோன்றியதனால்தான் அவர்கள் அதைச் சொல்லவில்லை. கீழே பரப்பி இருந்த நெல்லில் குழந்தை செல்லத்துரை எழுத மறுத்தவுடன், "பையனுடைய தகப்பனார் எங்கே? அவரைக் கூப்பிடுங்கள்" என்று புரோகிதர் சத்தம்போட ஆரம்பித்தார். அதை ஒருவரும் எதிர்பார்க்கவில்லை ஆதலால், கூடியிருந்தவர்கள் இடையில் பரபரப்பு உண்டாயிற்று.

செல்லத்துரைக்குப் புரோகிதர் கூறியதைக் கேட்டதும் எதிர்பாராதபடி ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. 'இத்தனை நாட்களாக மறந்துபோயிருந்த தகப்பனார் ஒரு வேளை இந்த இடத்துக்கு வந்திருக்கிறார்போல் இருக்கிறது. அதனால்தான் கூப்பிடச் சொல்லுகிறார்கள்' என்று எண்ணினன்.

குழந்தை செல்லத்துரையின் தாய் கமலம் அவனைச் சமாதானம் செய்ய முயற்சி செய்தாள். "இதோ பார். நீ துரையோ, இல்லையோ! உபாத்தியாயர் சொல்லுகிறதை எழுது, அப்பா" என்று நல்ல வார்த்தை சொல்லிப் பார்த்தாள். ஒன்றும் பலிக்கவில்லை.

புரோகிதர்கூட அப்பாவைக் கூட்டிக்கொண்டு வரச் சொல்லுகிறார்; அதற்கு மற்றவர்கள் ஏன் குறுக்கே நிற்கிறார்கள் என்பது செல்லத்துரைக்குப் புரியவில்லை. எனவே குழந்தையின் பிடிவாதம் ஜாஸ்தியாயிற்று.

குழந்தையின் தகப்பனார் சச்சிதானந்த முதலியார் வரவில்லை என்ற குழப்பமும், கூக்குரலும் கூட்டத்தினர் இடையில் அதிகரித்தது.

"அதுதான் சொன்னேன்; இந்தக் குழந்தையை இப்போது பள்ளிக்கூடத்திலும் வைக்க வேண்டாம், பறக் கூடத்திலும் வைக்கவேண்டாம் என்று. நான் வாழு கிற லட்சணத்துக்கு என் குழந்தைக்குப் பள்ளிக்கூடம் வேறையா அழுகு!" என்று கசந்து கூறினாள், கமலம். அவளுடைய தாய் சமாதானம் செய்ய முன் வந்தாள்.

"பேசுகிறது ரொம்ப நன்றாகத்தான் இருக்கிறது, போ! குழந்தை என்ன பண்ணுவான்? அவனுடைய தகப்பனுக்கு நாம் கூடத்தான் எழுதினோம்."

'சச்சிதானந்த முதலியார் பிடிவாதக்காரன். அதனால் தான் நாம் எழுதிய கடிதத்தை அவன் லட்சியம் செய்ய வில்லை' என்று எடுத்துக் காட்டுவதற்காகக் கமலத்தின் தாய் அதைக் கூறினாள். ஆனால் கமலத்தின் எண்ணம் எல்லாம் வேறு ஒரு திசையில் சென்று வேலை செய்து கொண்டிருந்தது.

சச்சிதானந்த முதலியாருக்கும் கமலத்துக்கும் ஏழு வருஷங்களுக்கு முன் கல்யாணம் நடைபெற்றது. அவர்களுடைய கல்யாணம் நடைபெற்ற இரண்டு மூன்று மாசங்களுக்கு உள்ளேயே ராணுவ லாரி ஒன்றில் அகப் பட்டுக் கமலத்தின் தகப்பனார் இறந்து போனார். கமலத் துக்கு அந்த விஷயங்கள் எல்லாம் நினைவுக்கு வந்தன.

என்ன காரணத்தினாலோ காலமாவதற்கு ரொம்ப நாள் முன்பு கமலத்தின் தகப்பனார் உயில் ஒன்றை எழுதி வைத்திருந்தார். தம்முடைய சுயார்ஜிதமான சொத்து முழுவதையும் பிரித்து, கமலத்துக்கு அதில் ஒரு பகுதியை வைத்து விட்டுப் போயிருந்தார் அவர். கமலத்துக்கு மூத்த சகோதரன் ஒருவன் இருந்தான். அவனுடன் கமலத்தின்

தாய் இருக்க வேண்டுமென்று அந்த அதிசய மனிதர் உயில் எழுதியிருந்தார்.

அதிசய மனிதர் என்று அவரைப்பற்றிக் கூறுவதற்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. சாதாரணமாக, கமலத்தின் தாயாருக்கும் அந்த உயிலில் ஒரு வரி எழுதி, ஏதேனும் ஏற்பாடு செய்திருந்தால், ஒரு வேளை இந்தச் சிக்கல் ஏற்படாமல் இருந்திருக்கலாம். சில நாட்கள் சென்ற பிறகு, பெற்ற பிள்ளைக்கும் தாயாருக்கும் ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் கமலத்தின் தாய் தன் மகனிட மிருந்து பிரிந்து வந்து தனியாக இருந்தாள்.

அப்போதுதான் அந்த விஷ சிந்தனை அவளுக்குத் தோன்றியது. கமலத்தின் சொத்துகளைத் தன்னுடைய அனுபோகத்தில் விட்டு வைக்கும்படி அவள் செய்த பல விதமான தந்திரங்கள் பயன் இல்லாமல் போய்விட்டன. கமலத்தின் கணவர் சச்சிதானந்த முதலியார் அதற்கு எந்த விதத்திலும் இடம் கொடுக்கவில்லை. எனவே அவள் வாழ்க்கையில் மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டது. அதைத் தீர்ப்பதற்காக அவள் தன்னுடைய சொந்தப் பெண்ணின் வாழ்க்கையைக்கூடக் குலைப்பதற்கும் பின் வாங்கவில்லை.

“ சீச்சீ ! உன் புருஷன் பண்ணுகிற காரியம் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. எனக்கு என்னவோ ரொம்பப் பயமாக இருக்கிறது. உன்னுடைய அப்பா என்னைச் சந்தியில் நிறுத்தின மாதிரி, நீயும் நாளைக்கு நிற்காமல் இருக்க வேண்டுமென்றுதான் ‘ திக்குத் திக்’ கென்கிறது ” என்று ஒரு நாள் கூறி முடித்தாள்.

கமலத்துக்குத் துணுக்கென்றது. ஒரு தாயின் உள்ளத்தைப் பற்றி அவள் அறிந்துகொண்ட எதற்கும் பொருத்தமாக இல்லை, அவளுக்குத் தன் தாய் கூறியது. ஆனால் உலகத்தில் அதைப்போன்ற சம்பவங்கள் எத்தனையோ நடக்கின்றன. நம் கற்பனைக்கும், உலக வழக்குக்கும் எட்டாத

புதிய அனுபவங்கள் எல்லாம் நமக்கு நேரிடுகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. அவற்றில் அதுவும் ஒன்று என்று நினைப்பதற்குக் கமலத்தின் வாழ்க்கை இடம் கொடுத்தது. சச்சிதானந்த முதலியார் அவளிடம் நடந்து கொண்டதும், அவளுடைய தாயாரின் கட்சிக்கு ஓர் அளவு பலம் கொடுத்தது. பிளவு அதிகரித்துக் கொண்டே போயிற்று.

கடைசியாகக் கமலம் தாயாருடைய வீட்டுக்கு வந்தபோது குழந்தை செல்லத்துரை பிறந்து நாலு மாசம் தான் ஆகி யிருந்தது. அதற்குப் பிறகு அவள் திரும்பி, சச்சிதானந்த முதலியார் வீட்டுக்குச் செல்லவில்லை. குழந்தை அவ்வப்போது தகப்பனாரைப் பற்றிக் கேட்டாலும், சாதாரணமாக அடுத்த நிமிஷத்தில் அதை எல்லாம் மறந்து விட்டான். ஆனால் அன்றைக்கு அதை மறக்கச் செய்ய முடியவில்லை. தகப்பனார் அங்கே வந்தால் ஒழிய, "எழுதுவதற்குக் கையைக்கூட எடுக்க மாட்டேன்" என்று செல்லத்துரை மறுத்து விட்டான்.

புரோகிதருக்குக் குடும்ப விஷயங்கள் ஒன்றும் தெரியாது. ஆகையால், "குழந்தையின் தகப்பனாரைக் கூப்பிடுங்கள்; கூப்பிடுங்கள்" என்று கூச்சலிட்டார்.

"நான் அப்பாவுக்குக் கடுதாசி எழுதி யிருக்கிறேன். நீ வேணுமானால் பார்—நாளைக்கு அவர் வந்து விடுவார். அதற்குள் நீ எழுது" என்று பாட்டி சமாதானம் செய்தாள்.

கமலத்துக்கு எல்லையற்ற துக்கம் பொங்கி எழுந்தது. உதடுகளைக் கடித்துக் கொண்டு, செல்லத்துரையின் ஏமாற்றத்தைப் பார்த்துக் கமலம் நடுநடுங்கினாள். அவளுடைய தாயார் வெளிக்குத்தான் கடிதத்தைப்பற்றிக் குறிப்பிட்டாளே ஒழிய, நிஜமாக முதலியார் வருவார் என்று நம்பவில்லை. கடைசி நிமிஷத்தில் அவருக்குக் கடிதம் எழுதுவது என்று தீர்மானித்தபோது, "இதெல்லாம் உபயோகமற்ற வேலை. ஆறு வருஷமாகத் திரும்பிக்கூடப் பார்க்காதவரா,

இந்தக் கடுதாசியைப் பார்த்து ஓடி வந்துவிடப் போகிறார்?'' என்று கூறினாள். எனவே அவருடைய கல் நெஞ்சைப் பற்றி நினைத்த அந்த நிமிஷத்தில், தன் தாய் செய்த துரோகம் எவ்வளவு பெரியது என்பதைக் கமலம் அறிந்து கொண்டாள். காலம் மாறியதோடு ஒரு வேளை முதலியாரின் மனமும் மாறியிருக்கக் கூடாதா என்ற ஏக்கம் அவள் உள்ளத்தில் பிறந்தது.

அந்த க்ஷணத்தில் திடீரென்று ஒரு புதிய குரல் கேட்டது. சச்சிதானந்த முதலியார்தான் அங்கு வந்திருந்தார். அங்கிருந்த குழப்பத்தில் அவர் எப்போது வந்தார், எங்கேயிருந்தார் என்பவை ஒருவருக்கும் தெரியவில்லை. நீர் நிறைந்த கண்களின் வழியாய்க் கமலத்துக்கு எதையும் பார்க்க முடியவில்லை.

முதலியாரின் உருகிக் கனிந்த நெஞ்சை மட்டும் கமலம் அறிய முடிந்தது. "ஐயா சொல்லுகிறதை எழுது, செல்லத்துரை'' என்று புத்திரனைப் பார்த்து முதலியார் கூறினார்.

அதுவரையில் அறிமுகம் இல்லாத ஒருவருடைய குரலைக் கேட்டு, செல்லத்துரை ஒருமுறை அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். எதையோ அறிந்து கொண்டதைப்போல் அடுத்த நிமிஷம் புரோகிதர் நெல்லில் எழுதி வைத்திருந்ததன் மேல் வேகமாக எழுதத் தொடங்கினான்.

# ?

## " குகப்ரியை "

ஸென்ட்ரல் ஸ்டேஷன். கூட்டமாவது கூட்டம். அசாத்யக் கூட்டம். ஒரே புழுக்கம். என்றைக்குமே பம்பாய் மெயிலில் புளி மூட்டைகள் போல்தான் அடைப்பார்கள். அதுவும் யுத்த சமயம். கேட்கவா வேணும்? அன்றி, 1943-ஆம் வருஷம் யுத்தம் மிகக் கடுமையாய் ஏறுமுகமாய்ப் போய்க்கொண்டிருந்த காலம். என் துணைவர் திருச்சியிலிருந்து பல்லாரிக்கு மாற்றமாகிப் போயிருந்தார். பள்ளிக்கூடம் மூடியதும், குழந்தை குட்டிகள், மூட்டை முடிச்சுகள் சகிதம் நான் மட்டும் புறப்பட்டேன்.

வழக்கமாயுள்ள கூட்டம் தவிர, — மகாத்மாஜீயின் உண்ணு விரத சம்பந்தமாகச் சத்யாக்ரகம் செய்த சின்னஞ்சிறு பிள்ளைகள் கைதிகளாக அலிபுரம் ஜெயிலுக்குப் போகிறார்களாம்!—அவர்களை வழி அனுப்ப வந்த கூட்டம் வேறு. அவர்களின் கோஷம் அந்த ரயிலடி முழுவதும் எதிர் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தைகளுக்குக் கத்திக் கத்தித் தொண்டையும் நாவும் உலர்ந்து போகின்றன என்று ஸோடா கலர், முதலியவைகளை விநியோகம் செய்துகொண் டிருந்தவர்களுடன்கூட என் தம்பியும் நுழைந்து விட்டான். அந்தக் கும்பலில் நான் எப்படியோ கஷ்டப்பட்டு, பெண்கள் வண்டியில் ஏறி இடம் பிடித்தேன். வண்டி புறப்பட இன்னும் நேரம் இருந்தது. ஆகவே, சாமான்களை ஒழுங்கு செய்துவிட்டு, ஜன்னல் அருகே நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

என்னதான் சொல்லுங்கள். காலம் படுவேக மாய்ச் சுழன்று கொண்டே போகிறது. எங்கே போய் நிற்குமோ? யாருக்குத் தெரியும்'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். அட! இது யார்? பிளாட்பாரத்தைத் திரும்பிப் பார்த்தேன். துணுக்கென்றது.

ஆம்! அவனேதான்! இதென்ன கோலம்! அரை யிலே பழுப்புக் கதர் வேஷ்டி; ஜிப்பா. தலைமயிர் பிடரி வரையில் தொங்கிக் கொண்டிருந்தது. கரு கருவென்று நீண்டு அடர்ந்த தாடி. இதென்ன கூத்து! தாடியும் மீசையுமாய் எங்கே போகிறான்!

கமலாவை நான் பார்த்து இரண்டு வருஷம் இருக்கும். அதன்பின் சென்னை காலியான பொழுது யார் யார் எங்கே எங்கே போனார்களோ யாருக்குத் தெரியும். கடிதப் போக்கு வரத்து இல்லை. எங்கேயோ குடியும் குடித்தனமுமாய்ச் சௌக்யமாய் இருக்கிறாள் என்றுதான் நினைத்திருந்தேன்... இப்பொழுது இவனைப் பார்த்தால்... என்று எண்ணியவளாய்ச் சற்றுக் கூர்ந்து கவனித்தேன்.

பேச்சுக்கள் தெளிவாய்க் காதில் விழவில்லை. யாத் திரை, கோயில் உற்சவம், மடம், ஸ்வாமி வித்யாரண்யர், என்ற வார்த்தைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் துணுக்குகள் தான் என் செவியில் விழுந்தன. அவனைச் சுற்றிலும் பலர்.

இதற்குள் முதல் மணி அடித்தது. அவசர அவசர மாய் வண்டியில் ஏறினார்கள் அவர்கள். நாங்கள் ஏறிய வண்டிக்கும் அதற்கும் இடையில் நாலைந்து வண்டிகள் தான் இருக்கும்.

வண்டிகள் ஆடி அசைந்து ஸ்டேஷனைவிட்டுக் கிளம் பிற்று. வேர்வை மிகுதியினால் களைத்த நான், 'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டேன். தம்பி அவசர அவசரமாய் அடுத்த பெட்டியில் ஏறினான். தலையை நீட்டி விஷயத்தை அவனிடம் சொல்லி, 'அவர்கள் யார்? எங்கே போகிறார்கள்'

என்று துப்பு விசாரிக்கச் சொன்னேன். அவனே, "யுத்த காலம். ஒருவரையும் ஒன்றும் கேட்கக்கூடாது. ஏதாவது ஒன்று கிடக்க ஒன்றாய் முடிந்து இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வந்துசேரும். வாயை மூடிக்கொண்டிரு" என்று பயமுறுத்தினன். எனக்கு ஏதோ ஒருவிதமான குழப்பம். என் சிந்தனைகள் நெடுந்தூரம் பின் சென்றன.

* * *

கமலா என் உயிர்த் தோழி. இளமையில் ஐந்தாவது வகுப்புவரை நானும் அவளும் ஒன்றாகவேதான் படித்தோம்; ஒரு நாளாவது தனியாகப் பள்ளிக்கூடம் போனதே கிடையாது. ஒன்று, அவள் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும். இல்லாவிட்டால் நான் அங்கே போக வேண்டும். அடை மழையானாலும் சேர்ந்துதான் போவோம். என்றைக்காவது ஒருநாள் தப்பித் தவறி ஒருவரை ஒருவர் பார்க்காவிட்டால் ஏதோ பறிகொடுத்தது போல் இருக்கும். ஊரில் எங்களுக்கு "ஜோடி" என்று பெயர். கல்யாணமோ கார்த்திகையே, தேரோ திருநாளோ, எங்கே யானாலும் எங்களை ஒன்றாகவேதான் பார்க்கலாம். எதிர் அகத்துச் சேஷிப்பாட்டி, "நாளைக்குக் கல்யாணமானால் என்ன செய்வீர்களோ?" என்பாள்.

அதற்கு என் தாயார், "இரண்டு பெயர்களையும் ஒருவனுக்கே கொடுத்துவிட்டால் போகிறது" என்பாள். அவள், "போங்கள் அம்மாமி" என்று பொய்க் கோபம் கோபித்துக்கொண்டு ஓடுவாள். திடீரென்று ஒருநாள் கமலாவின் தகப்பனாரை, வேற்றூருக்கு மாற்றிவிட்டார்கள். அன்று நான் அழுத அழுகை......

* * *

அதன்பின் கமலாவை நான் சந்தித்தது தஞ்சாவூரில். அப்போது அவளுக்குக் கையில் ஒரு குழந்தை. எவ்வளவு அழகாய்த் 'தளதள' வென்று இருந்தாள்! அவர்,

அவள் கணவர், அழகு என்று அவளுக்கு அசாத்தியப் பெருமை. என் துணைவரும் அவருக்குக் குறைந்தவர் அல்ல. இருந்தாலும் அவளுடைய ஒவ்வொரு சிறு சொல்லிலும் செயலிலும் பெருமை தொனித்தது. குழந்தையாவது? தங்க விக்ரகம் தான்! கொழுகொழுவென்று தூக்க முடியாது. அவ்வளவு புஷ்டி! முகத்திலேதான் என்ன களை! வாயிலே 'சாளை' வழியும். கூட்டி விழுங்கத் தெரி யாது. ஆறு அல்லது எழு மாசமிருக்கும். வாய் 'அத்தே, தாத்தா' என்று பொரிந்து கொட்டும். அந்த அழகிய சின்னஞ்சிறு நண்டு, இன்ப மயமான அவர்கள் வாழ்க்கை, ......இவைகளெல்லாம் ஒவ்வொன்ருய் இறகு முளைத்து எதிரே வந்தன. வண்டி நின்று, "ரேணி குண்டா, ரேணிகுண்டா" என்ற குரல் கேட்டு என் கனவுகலைந்தது.

பிளாட்பாரம் முழுவதும் இருள் சூழ்ந்து இருந்தது. ஜன்னலின் வழியே தலையை நீட்டி எட்டிப் பார்த்தேன். சாமான்கள் விற்பவர்களின் குரலும், திருப்பதி செல் வோரின் கோவிந்த நாம சங்கீர்த்தனமும் சேர்ந்த அந்த ரயிலடி ஒரு பெரிய நாடக மேடைபோல் தோன்றிற்று. இடை யிடையே குழந்தைக் கூட்டங்களின் கூக்குரல். பெரியவர்களும் சிறியவர்களும் கோபம் மிகுந்து ரஸமான பாஷையினுல் ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்ளும் நாமா வளிகள். 'மினுக் மினுக்'கென்று ரயில்வேக்காரர்களுக்கு என்றே தயாரிக்கப்பட்ட புகையேறிய அற்புதமான தீபங் கள்; இவைகள் யாவும் சேர்ந்து அந்தச் சூழ்நிலைக்கு மெருகு கொடுத்தன.

தொட்டிலில் ஆடுவதுபோன்ற ரயிலின் அசைவினுல் தூங்கி அப்பொழுதே விழித்தெழுந்த பலர், "இதென்ன ஊர்? என்ன விற்கிறது?" என்று குசல ப்ரச்னம் செய்து கொண்டு இருந்தனர்.

நான் மட்டும் வழிமேல் விழிவைத்து அந்த அடுத் திருக்கும் வண்டிகளில் இருந்து யாராவது இறங்குகிருர்

களா என்று அந்த இருளிலும் கூர்ந்து பார்த்தேன். ஏற்கனவே கண்பார்வை அதி சூட்சுமம். பகலில் பசு மாடு தெரியாது. இரவில் மூக்குக் கண்ணாடியும் இல்லாமல் அந்த இருளில் என்ன தெரியும்?

* * *

கட—கட டக் என்ற சப்தம். வண்டி புறப்பட்டது. கோவிந்த கோஷம் பின்தொடர, எங்கள் பிரயாணம் தொடங்கிற்று. அருமையான என் தம்பி வண்டி புறப் பட்ட அரை மணி நேரத்திற்குள், அரக்கோணத்தில் வந்து, 'பூரி வேணுமா? காபி வேணுமா?' என்று ஆசார உப சாரம் செய்தவன், இங்கே வரவே யில்லை. 'சிறு பையன் தானே, தூங்கி யிருப்பான்!' என்று என்னை நானே சமாதானப் படுத்திக் கொண்டேன். ஆனல்...... எப்படி? யாரை விசாரிப்பது? இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்கே விஷயத்தில் பற்றுதலும் இல்லை, வேகமும் இல்லை. என்ன பிரமாதம்! ஒரு மனிதனுடன், அதுவும் ரயிலில், பேசுவதா கஷ்டம்! சும்மா எதிரே போய், "என் ஸார்! என்னை அடையாளம் தெரிகிறதா?" என்று கேட்டால்கூடப் போதுமே! உறவு விஷயம் தெரிந்துவிடும். என்னமோ பிர மாதப் படுத்துகிறான். சாதாரண சமயமாய் இருந்தால் ஒரு நொடியில் நானே போய் விசாரித்து விடமாட்டேனு. இடம், பொருள், ஏவல் எல்லாவற்றையும் பார்க்கவேண் டாமா என்று யோசித்தால் இவன் இல்லாத நொண்டிச் சாக்குகள் சொல்லுகிறான்.........இவன் எப்படியாவது போகட்டும். அவன்! அவன் ஏன் இப்படி உருமாறி இருக் கிறான். என்னதான் காரணமோ? கமலாவும் கொஞ்சம் ஒரு மாதிரிதான். இஷ்டமிருந்தால் தலையில் தூக்கி வைத்து ஆடுவாள், இல்லாவிட்டால் ஒரே அடியாய் அதபாதாளம் தான்.........குடித்தனத்தில் என்ன குழப்பமோ? வேலை ......முன்பு நல்ல வேலைதான்! ஆனல் ஒரு வேலையிலாவது அவன் நீடிக்க மாட்டான். இப்பொழுது வேலை இல்லாமல்

திண்டாடுகிருனே?......அப்படி இருந்தாலும்தான் என்ன? இந்த யுத்த காலத்திலே வேலைக்கா பஞ்சம். காதும் காதும் வைத்தாற்போல என்னிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு, 'ரெக்ரூடிங்' ஆபீஸருக்கு எழுதிஞல் இவர் (என் துணைவர்) எள் என்பதற்குள் எண்ணெயாய்ச் செய்வாரே! ஆனல் நான் பல்லாரியில் இருக்கிறேன் என்று அவளுக்கு எப்படித் தெரியும்? கடிதப் போக்கு வரத்தோ நெடு நாளாய்க் கிடையாதே! அவளும் கொஞ்சம் அதிகப் பிரசங்கி, வாயாடிதான்! என்ன சொல்லி விட்டாளோ? வேலை யில்லாமல் கஷ்டப்படுகிறவனை வீட்டிலும் கொத்தி எடுத்தால்? அதுதான் காரணமாய் இருக்குமோ? வேறு என்ன காரணமோ? ஒருவேளை அவளுக்கு எதாவது...... நாலைந்து மாசங்களுக்கு முன்புகூட அவள் அம்மாஞ்சி மதனியைப் பார்த்தேனே! அப்படிக் குடும்பத்தில் கலகம் என்ருே, வியாதி என்ருே சொல்லவில்லையே! என்ன கஷ்டமோ? யாருக்குத் தெரியும்? இப்பொழுது எத்தனை குழந்தைகளோ? எது எது எந்த எந்த லக்ஷணத்திலிருக் கிறதோ? எப்படியும் குண்டக்கல் ஜங்ஷனுக்கு அவர் வராமற் போகமாட்டார். அடையாளம் சொல்லி விசா ரிக்கச் சொல்லலாம்—என்றெல்லாம் ஓடின என் சிந்தனை கள்.

* * *

எங்கேயோ குகைக்குள் நுழைவதுபோல் பல்லாரியின் இருண்ட ஸ்டேஷனை வண்டி நெருங்கிற்று. கூட்டமோ சொல்லத் தரம் இல்லை. அதில் கன்னட தேசத்து ஜனங்கள் பாஷையும் புரியாமல், விஷயமும் தெரியாமல், ஒரே ஆட்டு மந்தைகள் போலத்தான். எப்படியோ முக்கி முனகி வண்டி நின்று, ஐந்து நிமிஷங்கள் கழித்துத்தான் இறங்க முடிந்தது. இதில் ஒரே கதவின் வழியேதான் ஏறுவதும் இறங்குவதும். அவர் மிகவும் அமைதியாய்ப் புஸ்தகக் கடைக்கு அருகில் நின்றுநாங்கள் இறங்கும் வைப

வத்தை ரஸித்துக் கொண்டிருந்தார். நாங்கள் இறங்கி ஒருவரை ஒருவர் கண்டுபிடித்து நெருங்கவும், ரயில் புறப் படவும் சரியாய் இருந்தது. அதுவரையில் எங்கள் சொந்த விஷயத்திலேயே கவனம் செலுத்தி வந்த எனக்கு அவன் இங்கேயும் அடுத்த வண்டியில் ஏறியது நினைவு வந்தது. ஓடும் வண்டியில் வாசற்படிக்கு அருகில் நின்று இருந்தான் அவன். வெளியே பிளாட்பாரத்தில் எங்களைத் தாண்டிச் செல்லும் நெட்டையான ஒரு மனிதன் இரு கைகளையும் குவித்து, "என்ன! உத்தரவு வாங்கிக் கொள்ளட்டுமா? நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை 3 மணிக்கு ஹம்பி சாது சிவராம் சமாதியில் வந்து உங் களைச் சந்திக்கிறேன்" என்று சொன்னது என் செவி களுள் விழுந்தது.

"அதோ பாருங்கள்! அந்த மனிதனை! பிறகு விஷ யத்தைச் சொல்லுகிறேன்" என்று கணவருக்குச் சுட் டிக் காட்டினேன். அவர் மிகவும் அசுவாரஸ்யமாய், "உனக்கு எதற்கு இந்த ஊர் அக்கப்போரெல்லாம்" என் ருரே தவிர அவனை இன்னுன் என்று கவனிக்கவில்லை. நாளை வெள்ளிக்கிழமை—ஹம்பியில்—சிவராமன் என்ற தொடர்கள் என் மனக் கண்களின் முன்பு கூத்தாடிக் கொண்டிருந்தன.

* * *

இரவின் முதற் சாமம். மாடியில், நிலா முற்றத்திலே உட்கார்ந்து வெகு சுவாரஸ்யமாய் வெற்றிலையை மென்று கொண்டிருந்தார் இவர். எங்கள் பேச்செல்லாம் கிடக் கட்டும். கமலாவின் புருஷன் சங்கதியைத்தான் முதன் முதலாகச் சொல்லிவிட வேண்டுமென்று துடிதுடித்தது. அவர் எப்படிக் கேட்டுக் கொள்வாரோ? இவரே ஒரு மாதிரி வேதாந்தப் பித்து. சொல்வதா? எப்படிச் சொல்வ தென்று தயங்கித் தயங்கி "என்ன! உங்களைத்தான்! நம்ம கமலா ஆத்துக்காரர் இருக்கிருரே—"என்று இழுத்தேன்.

"ஏன், இருக்கிறார் என்கிறாயா? சௌக்கியமாய் இருக்கட்டுமே!"

"இதானே வேண்டாமென்கிறேன் அவர் வந்து..."

"வந்து என்ன செய்தார்?"

"இப்பொழுது முதலில் சொல்வதைக் கேளுங்கள். பிறகு நையாண்டி பண்ணலாம். நேற்று நான் வண்டியில் உட்கார்ந்த பிறகு ஸென்ட்ரல் பிளாட்பாரத்தில் கண்டேன். நீளத் தாடி, பச்சைக் கண்ணாடி, பழுப்புக் கதர்."

"என்ன நீலத்தாடி; பச்சைக் கண்ணாடியா?"

எனக்கு கோபம் கோபமாய் வந்தது. 'சமயா சமயம் தெரியாமல் என்ன கேலி' என்று நினைத்து, "முக்கியமான விஷயம் சொல்லவந்தால்..." என்று ஆரம்பித்தேன்.

"ஆமாமாம் உன் கடிதங்களே முக்கியமான விஷயங்களைத்தானே சுமந்துவரும். ஊரில் சுண்டைக்காயும் பச்சை மிளகாயும் மிதியல் ஆடுகிறது. வெள்ளைப் பசு காளைக் கன்று போட்டிருக்கிறது. மாங்காய்த் தொக்கு வேணுமா? இப்படிப் பெரிய பெரிய விஷயங்களைத்தானே எழுதுவாய்"—

"நீங்கள் எப்பொழுதுமே இப்படித்தான்."

"சரி, சரி. விஷயத்தைச் சோல்லேன்."

விவரமாய்ச் சொல்லத் தொடங்கினேன்.

* * *

மறுநாள் நேரத்தையும் கிழமையையும் டைரியில் குறித்துக்கொண்டார். இரவு ஒன்பதரை மணி வண்டிக்கு ஹொஸப்பேட்டைக்குப் புறப்பட்டார். நான் இரவு முழுவதும் தூங்கவேயில்லை. மறுநாள் இவர் அவனை ஹம்பியில் சந்திப்பது போலவும் அவன் ஏதேதோ காரணங்கள் கூறி வீட்டிற்குவர மறுப்பதும், போலவு இவர் இல்லாத சாகசங்களெல்லாம் செய்து அவனைக் குடும்பப் பொறுப்பை உணர்ந்து கொள்ளும்படி செய்வது போலவும் கற்பனை செய்து பார்த்துக்கொண்டே கண்ணயர்ந்தேன்.

கமலாவும் அவள் பாட்டியும் வந்து, " அம்மா! தெய்வ மேன்னு பாவம்! உங்காத்துக்காரர்தான் தெய்வம். அணைஞ்ச தீபத்தை ஏத்தினயே! என்னம்மா!" என்றெல்லாம் சொல்லி, என் கன்னங்களைத் தடவித் திருஷ்டி முறிப்பதுபோல் கனவு. கண்ணை விழித்தேன். சூர்யோதயம் ஆகிவிட்டது. சரி நாளைக் காலை வண்டிக்கு வந்துவிடுவார் என்று நினைத்தவளாய்ப் பொழுதை ஓட்டினேன்.

மறுநாட் காலை, பதினொரு மணி. வீதியில் பஸ் வந்து நிற்கும் ஓசை. "ரயிலில் வராமல் பஸ்ஸிலேயே வருகிறார்கள்போல் இருக்கிறது. இரண்டு கப் காபிபோடு" என்று சொல்லிக்கொண்டே வீதிப்புறம் போனேன். அவர் முகத்தில் சிரிப்பு. நான் மிகவும் ஆவலோடு, "என்ன? என்ன சங்கதி? அவர் வரவில்லையா?" என்று படபடத்துக் கேட்டேன்.

"உள்ளே வா சொல்லுகிறேன்" என்று உள்ளே போனார். எனக்கோ ஆத்திரம். அவரைப் பின்தொடர்ந்த வண்ணம், "சமாசாரம் என்ன?" என்றேன்.

"அதெல்லாம் இப்படிச் சொல்லி மாளாது" என்று சொல்லிச் சட்டையைக் கழற்றலானார்.

"பரவாயில்லை. விஷயத்தைச் சொல்லுங்களேன்."

"விஷயமென்ன பைத்தியம்?"

"யாருக்கு? அவனுக்கா? தெளிவாய்ப் பேசினனே?"

"அவனுக்கில்லை. நமக்குத்தான்"

"ஏன்? என்ன?"

"கமலா சௌக்கியமாய் இருக்கிறாளாம். பிளேட் (Blade) கிடைக்கலையாம்! தாடி வளர்த்து விட்டானும்" என்றார் அவர் மிகவும் அமைதியாக.

# ஜாதிப் பிரஷ்டம்

தி. நா. சுப்பிரமணியன்

நகர் முழுவதும் அதே பேச்சு. செய்தி வெகு விரைவாகப் பரவிவிட்டது; எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. ஆனால் ஒருவரும் அதைப்பற்றிப் பகிரங்கமாகப் பேச வில்லை. பெரிய இடத்துச் சமாசாரம் என்ற நினைவுதான் காரணம். ஆனால் அதன் முடிவு என்னவாகும் என்பதைத் தான் அவர்கள் எல்லோரும் கவலையுடன் எதிர்பார்த்து நின்றார்கள்.

ஆனால் கோவிந்த ஹரியின் மாளிகையில் இருந்தவர்களுக்கு மட்டும் இந்த விஷயம் ஒன்றுமே தெரியாது. அவர்கள் எதுமே நடக்காதவர்கள் போலக் காரியங்களைக் கிரமப்படி செய்து வந்தார்கள். யாரைப்பற்றியும் வெளியில் உலவும் அபவாதம், சம்பந்தப்பட்டவர்களுக்கும் அவர்களை அண்டியவர்களுக்கும் தெரியாமல் இருப்பது உலக இயற்கை.

பொழுது ஏறிக்கொண்டே வந்தது. அவர்கள் எதிர் பார்த்திருந்த பிராம்மணர்கள் வந்து சேரவில்லை. சூரியோதயம் ஆனவுடனேயே அவர்கள் வந்து சேர்ந்திருக்க வேண்டும். பத்து நாழிகைப் பொழுதாகியும் அவர்கள் வரவில்லை. அதற்குப் பிறகே வீட்டில் உள்ளவர்களுக்குக் கவலை ஏற்பட்டது.

அன்றைக்குக் கோவிந்த ஹரியின் மாளிகையில் சிரார்த்த தினம்.புரோகிதர் காலையிலே வந்து கர்த்தாவுக்கு ஔபாசனம் முதலிய கர்மாக்களைச் செய்துவைக்க வேண்டும். அதற்குப் பிறகு சிராத்தத்துக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்துச் சித்தப்படுத்த வேண்டும்.

வழக்கப்படி அவர் வரவில்லை. அதனால் காரியங்கள் நடைபெறாமல் கிடந்தன. சிரார்த்தச் சடங்கிலே சாப்பிட வேண்டிய பிராம்மணர்களும் வரவில்லை.

காலையிலே புரோகிதர் தம் வீட்டுக்கு வாராததைக் கண்ட ஸர்தாருக்குக் கோபம் வந்தது. நாழிகை ஆக ஆகக் கோபமும் அதிகமாயிற்று. புரோகிதர் வந்தவுடனே அவரைச் சாட்டை வாங்கிவிடுவது என்று அவர் எண்ணினார். அதைக் கேட்ட புரோகிதர் மறுபடியும் தம் இல்லத்துக்கு எந்தக் காலத்திலும் நேரம் சென்று வரத் துணிய மாட்டார் என்றே அவர் கருதினார்.

ஆனால் பொழுது கழிந்துவந்தது. பத்து நாழிகைக்கு மேல் அவருக்கு இருந்த கோபம் கொஞ்சங் கொஞ்சமாகக் கவலையாக மாறியது. புரோகிதரும் பிராம்மணர்களும் வரவில்லையே என்ற ஏக்கம் ஏற்பட்டது. அவர்கள் வராமல் சிராத்த காரியம் எப்படி நடைபெறும்?

அவர்களை உடனே கைப் பிடியாக அழைத்துவர வேலையாட்கள் ஓடினார்கள். ஆனால் அது வீணாகவே போயிற்று. பிராம்மணர்கள் வரவில்லை. அவர்கள் வருவதற்கு மறுத்து விட்டார்கள்.

கோவிந்த ஹரியும் பிராம்மணரே. நல்ல பணக்காரர். பட்வர்த்தன் ஸர்தார்களுள் ஒருவர். அவர் நாட்டின் பிரமுகர். மிக்க செல்வாக்குடன் அவர் பூனா நகரத்தில் வசித்துவந்தார். அப்படிப்பட்ட அவர் வீட்டுக்குப் புரோகிதர்கள் வர மறுத்தது மக்களிடையே பரபரப்பை உண்டாக்காதா? வைதிக கோஷ்டியார் கோவிந்த ஹரியையும் அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் ஜாதிப் பிரஷ்டம் செய்துவிட்டார்கள்.

காரணம்? பகிரங்கமான விஷயந்தான். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பாலம் பட்டர் தீண்டாத வகுப்பான மஹார் ஜாதியைச் சேர்ந்த பஞ்சமப் பெண் ஒருத்தியைத் தம் காதலியாகக் கொண்டிருந்ததே யாகும்.

கோவிந்த ஹரியின் குடும்பத்தவர்கள் வைதிக மார்க்கத்தில் சிரத்தை உள்ளவர்களே. லௌகிக வழியிலே புகுந்து ராஜாங்க ஸேவையை மேற்கொண்ட அவர்கள் விதிப்படி எல்லாக் கர்மாக்களையும் நிறைவேற்ற முடியாது என்பது உண்மைதான். ஆயினும் இத்தகைய சேவை புரிபவர்களுக்கு என்றே காலக் கிரமத்தில் சில விதி விலக்குகளும் ஏற்பட்டன. தினசரி செய்ய வேண்டிய கர்மாக்கள் சிலவற்றை அவர்கள் நடத்தாவிட்டாலும் தோஷம் இல்லை யென்றும், அவர்கள் செய்யும் சேவையே அந்தத் தோஷங்களுக்குப் பரிகாரம் ஆகிவிடும் என்றும் கருதினார்கள்.

ஆனால் பாலம் பட்டர் நடத்தையோ அந்த விலக்குகளை எல்லாம் மீறி விட்டது. அதை வைதிக கோஷ்டியார் பொறுக்க வில்லை. அவர்கள் அதை ஒருகாலும் ஒத்துக்கொள்ள முடியாது.

பாலம் பட்டர்நடத்தியது வெறும் காதல் நாடகமாக இருந்திருந்தாலோ அல்லது மனிதனுக்கு ஒரொரு சமயத்தில் ஏற்படும் மிருக இச்சையாக இருந்திருந்தாலோ அவர்கள் பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு இருந்து விடுவார்கள். ஆனால் பாலம் பட்டர் அப்படியொன்றும்செய்யவில்லை. அந்தப் பெண்ணைத் தம் காமக்கிழத்தியாகவே கொண்டு விட்டார். அதுமட்டும் அன்று. அவளைத் தனியாகவும் குடித்தனம் வைக்கவில்லை. தம் மாளிகைக்கே அழைத்து வந்துவிட்டார். இதுதான் வைதிகர்களின் மனத்தைப் புண்படுத்தியது. இவ்விதம் செய்யக்கூடாது என்று அவர்கள் பாலம் பட்டரிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் அவர் அதற்குச் செவி சாய்க்கவில்லை. தம் காதலியைத் துறக்க அவர் மறுத்துவிட்டார். வைதிகர்கள் கொண்ட முடிவுக்குக் காரணம் இதுதான்!

இது தெரிந்த பிறகு கோவிந்த ஹரி மாளிகையில் பெரிய கலக்கம் ஏற்பட்டுவிட்டது. அதை அவர்கள்

கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. வைதிகர்கள் இவ்விதம் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று அவர்கள் நினைக்கவில்லை.

ஆனல், இனி மேலே செய்யவேண்டியது என்ன என்பதைப் பற்றிப் பேச அவர்கள் மனம் கவலை கொண்டது.

அன்றைத்தினம் பாழாய் விட்டது. சிராத்தமும் நஷ்டமாகப் போயிற்று. அன்று முழுதும் பட்டினி கிடந்து மறுநாளாவது அதை நடத்திஞல்தான் பரிகாரம் ஏற்படும் என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது. அன்றைத் தினம் போனலும், மறுநாளாவது அது நடப்பதற்கு இடம் உண்டா, அதற்குள் வைதிகர்களைத் திருப்தி செய்வித்து விட முடியுமா என்பன போன்ற பல விஷயங்களை ஆராயத் தொடங்கினர்கள் ஸர்தார் குடும்பத்தார்கள்.

விஷயம் ராதா பாயின் காதுக்கு எட்டியது. அதைக் கேட்டதும் அவள் நடுங்கிப் போய்விட்டாள். பழைய சம்பவங்கள் எல்லாம் அவள் மனக் கண்முன் தோன்றின.

ஆம். வைதிகர்களைத் திருப்தி செய்விக்க வேண்டி அவள் தன் மூத்த மகன் பேஷ்வா பாஜிராவை இழக்க நேரிட்டது. மிலேச்ச ஸ்திரீயுடன் உறவு கொண்டிருந்தான் என்பதற்காக அவனை வைதிகர்கள் பிரஷ்டம் செய்தனர். அதே ஏக்கத்தால் அவன் உயிர் துறந்து தன்னை மட்டுமல்லாமல் நாட்டையும் பரிதவிக்கவிட்டுச் சென்றுன்.

இப்போது அதே விபரீதம் வேறொரு குடும்பத்தையும் பற்றிவிட்டது. இதையும் அதே போக்கில் விட்டுவிடலாமா? இவ்விதம் செய்தால் நாட்டுக்கே பெருத்த மோசம் வந்துவிடுமே! நாடு இருந்த நிலையில் இத்தகைய வீர புருஷர்களான சர்தார்களின் சேவை அத்தியாவசியமாக இருந்தார்கள். அதனல் ஆயிரக்கணக்கான மக்களின் நன்மையை உத்தேசித்து, தனி மனிதன் ஒருவன் இழைக்கும்

குற்றத்தைப் பொறுக்க வேண்டியதுதான் மக்கள் கடமை என்றே அவள் தீர்மானித்தாள். ஆகவே எப்படியாவது இதில் ஒரு சமரசம் ஏற்படுத்திவிடுவது என்று அவள் முடிவு செய்தாள்.

இத்தகைய சந்தர்ப்பங்களில், சம்பந்தப் பட்டவர்கள் நேருக்கு நேர் கூடிப்பேசி முடிவு கட்டுவது ஆபத்தான காரியம். அவர்கள் உணர்ச்சி வசப்பட்டுக் காரியத்தை இன்னும் சிக்கல் ஆக்கிவிடுவார்கள். ஆகவே சம்பந்தம் ஏதும் இல்லாத மூன்றாவது மனிதர் யாராவது தலையிட்டே முடித்துவைக்க வேண்டும்.

பிராம்மண சமூகத்தையே குழப்பி வந்த சிக்கலைத் தீர்த்து வைக்கும் பெரும் பொறுப்பை ஏற்பதற்குத் தக்க ஒருவர் வேண்டுமே. அவ்விதம் மத்தியஸ்தம் பேச வருப வருக்கு இரு தரத்தாரிடமும் செல்வாக்கு இருக்கவேண் டும். இல்லாவிட்டால் அவர் வார்த்தையை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள்.

இந்தப் பொறுப்பை ஏற்கக்கூடியவர் பூனா நகரத் திலே பேஷ்வாவைத் தவிர வேறு யார் கிடைப்பர்?

பாஜிராவின் புதல்வரும், மூன்றும் பேஷ்வாவுமான பாலாஜிராவ் அப்போது பதவி வகித்து வந்தார். ஆனால் அவர் அந்தச் சமயம் பூனாவில் இல்லை. ராஜாங்க விஷய மாக வெளியூர் போயிருந்தார். எனினும் வைதிகர்க ளிடையே அவருடைய பாட்டியான ராதா பாய்க்குப் பெரும் செல்வாக்கு இருந்தது. தர்மத்தை நிலைநாட்டுவ தற்காகத் தன் அருமை மகனைப் பலியிட்ட புகழைப் பெற் றிருந்த அவள் கூறுவதை யாரும் மறுக்கத் துணியமாட் டார்கள்.

காரியங்கள் வெகு விரைவாக நடந்தன. வைதிகர்களைக் கொண்ட பிராம்மண மஹாசபையைக் கூட்டினாள். அந் தக் கூட்டத்தில் அவளும் பிரசன்னமாகியிருந்தாள். விஷ யத்தைப் பலபடியாக அலசி ஆராய்ந்து எடுத்துரைத்தாள்.

ஆனால், பாவம், அவள்செய்த முடிவுதான் வைதிகர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை அளித்தது. பாலம் பட்டர் ஏதோ சொல்பமான பிராயச்சித்தங்களைச் செய்துவிட்டு மறுபடியும் பிராம்மண சமூகத்தில் நுழைந்துவிட வேண்டும் என்று அவள் தீர்ப்புக் கூறிவிட்டாள்.

வயசான கிழவியிடம் வைதிகப்பற்று அதிகம் இருக்கும் என்றும், அதனால் தங்கள் முடிவை அவள் அங்கீகரிப்பாள் என்றும் எல்லோரும் எதிர்பார்த்து இருந்தார்கள். அவர்கள் மனக்கோட்டை சிதறிவிட்டது.

வைதிகர்கள் அதை எளிதில் ஒப்புக்கொள்ள வில்லை. நீண்டநேரம் அவளுடன் வாதாடிப் பார்த்தார்கள். சக்கரவர்த்தியின் சம்மதம் வேண்டும் என்றும் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ராதா பாய் சிறிதும் அசையவில்லை. தான் கூறியதைக் கொஞ்சமும் மாற்றமுடியாது என்று அவள் கண்டிப்பாகக் கூறிவிட்டாள்.

அந்தத் தீர்ப்பை வைதிகர்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவர்கள் நிலைமையே முற்றிலும் வேறாகிவிடும். சமூகமே உருக் குலைந்து வருந்த நேரிடும் இதை அவர்கள் எளிதில் உணர்ந்து கொண்டனர்.

"சக்கரவர்த்தியின் சார்பில் நானே உங்களுக்கு இதைக் கூறுகிறேன்" என்று கம்பீரமாக அவள் சொன்னபோது அதை அங்கே கூடியிருந்தவர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்ளவே நேரிட்டது.

விஷயத்தை அவள் அப்படியே விட்டு விடவும் இல்லை. தானே உடன் இருந்து எல்லாச் சடங்குகளையும் விதிப்படி நடத்தி வைத்தாள். சக்கரவர்த்தி இதை ஒப்புக் கொள்ளும்படியான மார்க்கங்களையும் தேடி அவர் அங்கீகாரத்தையும் பெற்றாள்.

---

இது நடந்தது 1746-ஆம் வருஷம் ஜூலை மாதம் ஆறாந் தேதி. இப்போது மிராஜ், ஸாங்கிலி, ஸம்ஸ்தானங்களில் பதவி வகித்து வரும் மன்னர்களின் மூதாதையரே கோவிந்த ஹரி ஆவர்.

# கதை எழுதியவர்கள்

**கி. வா. ஜகந்நாதன், பி. ஓ. எல்.:** தமிழ்க் கிழவர் மஹா மஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் விட்டுச் சென்ற இலக்கிய வாரிசு. 'கலைமகள்' ஆசிரியர். பழைய பாடல்களுக்குப் புதுமெருகிடுவது, காப்பிய ஆராய்ச்சி ஆகியவற்றில் தேர்ந்தவர். நல்ல சிறு கதைகள் எழுதுகிறார். 'கலைஞன் தியாகம்', 'நீலமணி' முதலிய சிறுகதைத் தொகுதிகளின் ஆசிரியர்.

**ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.:** சென்னை ராஜதானிக் கல்லூரியில் ஆங்கில ஆசிரியர். காவ்ய ஆராய்ச்சி, இலக்கிய லட்சணம் ஆகியவற்றை நன்கு அறிந்தவர். இவர் எழுதிய சிறுகதைகளில் சில, 'சிலைக்கு எதிரில்' என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளன.

**கான்ஸ்டான்டைன் டிரென்யோவ்:** பெயர் பெற்ற ருஷ்ய ஆசிரியர். நீண்டகாலம் பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்தவர். பல நாடகங்களை எழுதியிருக்கிறார். ஸ்டாலின் பரிசு பெற்றவர். கோர்க்கியுடன் ஆதிமுதலே நெருங்கிப் பழகிய கூட்டாளி. இவர் சென்ற வருஷந்தான் தம் 66-ஆம் வயதில் காலமானார்.

**த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.:** குருதேவர் ரவீந்திரநாத டாகூரின் கவிதைகளை வங்காளி மூலத்திலேயே படிக்க வேண்டுமென்று சாந்திநிகேதனம் சென்று வங்க மொழி பயின்றவர். வங்காளி நூல்கள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்

திருக்கிறார். தவிர, சொந்தமாகவே சிறந்த சிறுகதைகளையும் எழுதியிருக்கிறார். வீணையும் விவசாயமுமே அவருடைய பொழுதுபோக்கு.

**'சுரபி':** இந்தப் புனைபெயரில்தான் இவர் எழுதும் கதைகள் கவிதைகள் எல்லாம் வெளிவருகின்றன. அதனால் இவர் பெயரைக் காட்டிலும் புனைபெயரே பிரசித்தமானது. ஆகவே உண்மைப் பெயரை எதற்காகச் சொல்லவேண்டும்? மக்களின் உள்ளத்தை நன்கு அறிந்தவர்.

**பி. வி. சுப்பிரமணியன், பி. ஏ.:** அரிய சிறு கதைகள் பலவற்றை எழுதியிருந்தும், அவை புத்தக உருவத்தில் வெளி வராமல் நிற்கும் எழுத்தாளர்களுள் இவரும் ஒருவர். அமரர் கு. ப. ரா. வுடன் இருந்து இலக்கிய சேவை செய்தவர். இப்போது, 'தினசரி'யில் உதவி ஆசிரியராக இருக்கிறார். ரேடியோவைக் கேட்டுக் கொண்டிருப்பதுதான் தொழிலும் பொழுதுபோக்கும்.

**'குகப்ரியை':** தமிழிலே போட்டியில் முதல் முதலாகப் பரிசு பெற்ற 'சந்திரிகை' என்னும் நாவலை எழுதிய பெருமை வாய்ந்தவர். ஹிந்தி போன்ற வேறு பாஷைகளும் தெரிந்தவர். அழகான சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ளார். 'மங்கை' ஆசிரியர்.

3596.